விலை : 20.00
பக்கங்கள்:இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk


சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 11 வியாழக்கிழமை (23.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 066

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

# நல்லாட்சி அரசும் ஏமாற்றுகின்றது!

## மக்கள் இதனை உணர்கின்றார்கள் என நாடாளுமன்றில் சம்பந்தன் உரை



(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் தற்போது ஏமாற்றமடைந்துள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் நேற்றைய தினம் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல்தீர்வு உட்பட தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையொன்றை கொண்டு வந்து உரை யாற்றிய போதே இரா.சம்பந்தன் இந்தக் கருத்துக்களை முன் வைத்தார். சம்பந்தன் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

23ஆம் பக்கம் பார்க்க....

## நில மீட்புக்கு ஆதரவு தெரிவித்து தென்பகுதி மக்களும் களத்தில்

### யாழில் நேற்று கண்டன போராட்டம்



23ஆம் பக்கம் பார்க்க....

## புலிகளை வென்றவர் மகிந்தவே-கருணா

(கொழும்பு)

மூன்று தசாப்தங்களாக நிலவிய போரை வெற்றி கொண்ட பெருமை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை மட்டுமே சாரும் என முன்னாள் பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) தெரிவித்துள்ளார

சிங்கள தொலைக்காட்சியில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## சுமந்திரனை சிலரே துரோகி என்கின்றனர்

### சம்பந்தன் ஆவேசம்

(கொழும்பு)

கடந்த 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் 15 ஆயிரம் வாக்குகளை மாத்திரமே பெற்ற கட்சி உறுப்பினர்களே அதைவிடவும் 4 மடங்கு அதிகமான வாக்குகளைப்பெற்ற சுமந்திரனை துரோகி என தெரிவிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் நாடாளுமன்றத்தில் நேற்று கடும் விசனம்

24ஆம் பக்கம் பார்க்க....

## மட்டக்களப்பில் துப்பாக்கிச் சூடு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட காணி சீர திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நேசதுரை விமல்ராஜ் மீது நேற்றைய தினம் மாலை களுதாவளை கடற்கரை வீதியில் வைத்து துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.

இனம் தெரியாத நபர்களால் மேற கொள்ளப்பட்ட இந்த துப்பாக்கி சூட்

24ஆம் பக்கம் பார்க்க....

## வித்தியா கொலை வழக்கில் திருப்பம்

### பதினொராவது சந்தேக நபர் அரச தரப்பு சாட்சியானார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புங்குடுதீவு பாடசாலை மாணவியான சிவலோகநாதன் வித்தியாவின் பாலியல் வன்புணர்வின் பின்னரான படுகொலை வழக்கில் புதியதொரு திருப்பம் ஏற்பட்டுள்ளது. குறித்த வழக்கில் சந்தேகநபர்களாக கைது செய்யப்பட்ட பன்னிரண்டு சந்தேகநபர்களில் பதினொராவது சந்தேகநபர் சட்டமா அதிபரின் மன்னிப்பினை ஏற்று அரச தரப்பு சாட்சியாக மாறியுள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு புங்குடுதீவு பிரதேசத்தில் பாடசாலை மாணவி, கடத்தி செல்லப்பட்டு கூட்டு பாலியல் வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இச் சம்பவத்தையடுத்து இது

24ஆம் பக்கம் பார்க்க....

## ரவிராஜ் கொலை;

### மேன்முறையீட்டு மனுவை விசாரிக்க அனுமதி

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொலை வழக்கை மீண்டும் விசாரிக்க உத்தரவிடுமாறு கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. ரவிராஜின் மனைவி சசிகலா ரவிராஜ்

24ஆம் பக்கம் பார்க்க....

## கர்ப்பிணி கொலை அடையாள அணிவகுப்பு,

### கைது செய்யப்பட்ட இருவரையும் கண்கண்ட சாட்சியம் எண்பிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை கர்ப்பிணி பெண் படுகொலை வழக்கின் அடையாள அணிவகுப்பில், இக் கொலை சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட இருவரையும் கண்கண்ட சாட்சியமான வாய்பேச முடியாத சிறுவன் அடையாளம் காட்டியுள்ளார். இந்நிலையில் இவ் சந்தேகநபர் இருவரில் முதலாவது சந்தேக நபரின் இரத்த மாதிரியை மரபணு பரிசோதனைக்காக அனுப்புவதற்கு அவரை இன்றைய தினம் யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் அனுமதிக்க சிறைச்சாலை அத்திய

24ஆம் பக்கம் பார்க்க....

## பல்கலை நிர்வாகங்களுடன் இணைந்து

### பகிடிவதையை தடுப்பதற்கான விசேட நடவடிக்கை எடுங்கள்!

#### பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி ஆலோசனை

(மத்துகம)

ஒழுக்கப் பண்புகளுடன் கூடிய அநேக பல்கலைக்கழக மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் ஒரு சிறுபிரிவினரால் அசாதாரணமான முறையில் செயற்படுத்தப்படும் பகிடிவதையைத் தடுப்பதற்கு பல்கலைக்கழக நிர்வாகங்களுடன் இணைந்து விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்காலம் குறித்து அரசாங்கத்திற்கு பொறுப்பு உள்ளது. இதனை குறைபாடுகளின்றி அரசு நிறைவேற்றி வரும் நிலையில் முறையற்ற நடவடிக்கைகளுக்கு பல்கலைக் கழகங்களில் இடமளிக்கமுடியாது

24ஆம் பக்கம் பார்க்க....

## சிகிரியாவில் இருப்பது புலியின் பாதம்!

(கொழும்பு)

சிகிரியா மலைக்குன்றின் உச்சியில், ராஜமாளிகைக்கு செல்வதற்கான வாயில் உள்ள மிருகமொன்றின் இரண்டு பாதங்களும், சிங்கத்தின் பாதங்கள் அல்ல என்றும் அவை புலியின் பாதங்கள் என்றும், ரங்கிரி-தம்புளை விகாரையின் விகாராதிபதி பேராசிரியர் இத்தாமலுவே ஸ்ரீ சுமங்கள தேரர் தெரி

24ஆம் பக்கம் பார்க்க....

## "பாராமுகமாக நல்லாட்சி"

### கேப்பாப்பிலவு நில மீட்புக்காக கொழும்பில் நேற்று போராட்டம்



24ஆம் பக்கம் பார்க்க....

## வவுனியாவில் இருவருக்கு பன்றிக்காய்ச்சல்

(குருமன்காடு)

வவுனியாவில் கடந்த இரு தினங்களில் இருவர் பன்றிக் காய்ச்சல் காரணமாக அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக வவுனியா பொது வைத்தியசாலைப் பணிப்பாளரான மருத்துவர் கு.அகிலேந்திரன் தெரிவி த்துள்ளார். இது தொடர்பில்

24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கைக்கு 3 நாட்கள்!

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது இலங்கைக்காக மூன்று நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 27ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அமர்வுகள் சுவிட்சர்லாந்தின் ஜெனிவாவில் ஆரம்பாகவுள்ளது.

மார்ச் மாதம் 2, 15 மற்றும் 22ஆம் திகதிகளில் இலங்கை குறித்து பேரவையில் பேசப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதில் மார்ச் மாதம் 2ஆம் திகதி நபர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து பேசப்படவுள்ளது.

இந்த விடயம் குறித்து ஆராய்வ

23ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சுதந்திரக்கட்சியை சேர்ந்த

# தொகுதி அமைப்பாளர்கள் ஜனாதிபதி மைத்திரியுடன் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் தொகுதி அமைப்பாளர்களுக்குமிடையிலான ஒரு சந்திப்பு நேற்று பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

தற்போதைய அரசியல் நடவடிக்கைகள் மற்றும் மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளின் வினைத்திறனை மேம்படுத்தல் தொடர்பாக இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. தொகுதி அமைப்பாளர்கள் இது தொடர்பான தமது கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் முன்வைத்தனர்.

தற்போதைய அரசியல் சூழலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பொறுப்புக்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு கூட்டாகச் செயற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, கட்சியின் பொறிமுறையை புதிய தோற்றத்துடன் முன்கொண்டு சென்று நேர்மையான அரசியலை முன்னெடுப்பதற்கு அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் முன்னாள் பிரதமர் தி.மு.ஜயரத்ன, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகிய கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திசாநாயக்க. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் பொதுச் செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர, மாகாண ஆளுநர்கள், மாகாண முதலமைச்சர்கள் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (செ-11)


கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ சங்க கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம், கரவெட்டி

**புத்தக சந்தை 2017**

**காலம்**
24.02.2017 தொடக்கம் 26.02.2017 வரை
**நேரம்**
முற்பகல் 10.00 மணி
**இடம்**
நெல்லியடி மத்திய கல்லூரி

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
கூட்டுறவுக் கலாசார பெருமன்றம்
கட்.நெல்லியடி ப.நோ.கூ. சங்கம், கரவெட்டி.
(செ-7637)



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532




## கண்ணீர் அஞ்சலி

### அமரர் யோகன் மாசிலாமணி

வலி. கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகத்தில் கடமையாற்றும் எமது சக ஊழியரான திருமதி தி.பிறேமதர்சினி அவர்களின் அன்புத் தாயார் யோகன் மாசிலாமணி கடந்த (19.02.2017) அன்று அமரத்துவமடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*இவ்வண்ணம் :* ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலி கிழக்கு, பிரதேச சபை, புத்தூர்.
(8030)

## கலைப்பீட முதலாம் ஆண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள புதுமுக மாணவர்களுக்கான அறிவித்தல்

கலைப்பீடத்துக்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள 2015/2016 ஆம் கல்வி ஆண்டுக்குரிய மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு எதிர்வரும் புதன்கிழமை காலை ஆரம்பமாகும் என்று கலைப்பீடாதிபதி கலாநிதி கருணாகரன் சுதாகர் தெரிவித்துள்ளார்.

இதன்படி கலைப்பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் காலை ஒன்பது மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் அறிமுக ஆரம்ப நிகழ்வின் முதலாவது அமர்வில் கலந்து கொள்ளுமாறு கலைப்பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை விசேட பாடங்களின் அடிப்படையில் கலைப்பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் காலை பதினொரு மணிக்கு நடைபெறும் அறிமுக ஆரம்ப நிகழ்வின் இரண்டாவது அமர்வில் கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேற்படி அறிமுக நிகழ்வு தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறும்.

விடுதி வசதி கோரி விண்ணப்பித்து விடுதி வசதி வழங்கப்பட்டுள்ள மாணவர்கள் அறிமுக நிகழ்வுக்கு முன்தினம் 28.02.2017 தொடக்கம் விடுதிகளுக்கு வருகைதர முடியும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**- பதிவாளர்**
(செ-7631)

# பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டு; இருவருக்கு மறியல் நீடிப்பு

(கரணவாய்)

வட மராட்சி முள்ளிப் பகுதியில் யுவதி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியமை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளவர்களுக்கான விசாரணை அடுத்த மாதம் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

06.03.2014 அன்று முள்ளிப்பகுதியில் வைத்து யுவதி ஒருவரை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியமை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் குற்றஞ்சாட்டப்பட்ட மூவரில் இருவர் நெல்லியடிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். இதில் ஒருவர் தலைமறைவாகியிருந்தார்.

இவ்வழக்கு யாழ்.மேல் நீதிமன்றில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டது. அப்போது சந்தேக நபர்கள் இருவரும் தாம் சுத்தவாளிகள் எனக் கூறியதையடுத்து இவர்களிற்கான விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் 3-ம் திகதி தொடக்கம் 8-ம் திகதி வரை இடம்பெறும் என மேல் நீதிமன்றம் அறிவித்தது. அத்துடன் தலைமறைவான மற்றைய நபருக்கு பிடிவிறாந்தும் பிறப்பிக்கப்பட்டது. (செ-60)

# மணல் அகழ்வு; அபராதம் விதிப்பு

(கரணவாய்)

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டிருந்த ஹன்டர் சாரதி ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து பருத்தித்துறை பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் தீர்ப்பளித்துள்ளார்.

கடந்த 19-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு வல்லிபுரம் பகுதியில் வைத்து சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்டு மணலை ஏற்றி வந்த போது பருத்தித்துறை பொலிஸாரால் கைப்பெற்றப்பட்ட ஹன்டரினையும், அதன் சாரதியையும் நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் பதில் நீதவான் முன்னிலையில் முற்படுத்திய போது சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அவருக்கு 50 ஆயிரம் தண்டம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (செ-60)

# தீட்சை வழங்குதல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட இந்துநாகரிகத்துறையினரால் 2017 ஏப்ரல் 07 ஆம், 08 ஆம், 09 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ள இரண்டாவது அனைத்துலகச் சைவ மாநாட்டையொட்டிய ஆரம்பச் செயற்பாடாக சைவ சமயத்தவர்களுக்கான சமய தீட்சை வழங்கும் நிகழ்வு மகா சிவராத்திரி தினமான நாளை வெள்ளிக்கிழமை காலை 08 மணி தொடக்கம் முற்பகல் 10 மணி வரை பல்கலைக்கழக ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தில் இடம்பெறும்.

சமய தீட்சையை ஸ்ரீ பரமேஸ்வரன் ஆலயத்தின் பிரதம சிவஸ்ரீ பிராணதார்த்திஹரக் குருக்கள் வழங்குவார்.இதில் தீட்சை பெற விரும்புபவர்கள் சைவ ஆசார சீலர்களாக வருகை தந்து பயன் பெறலாம் என ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ)

# சிவராத்திரி விழா

(கோப்பாய்)

உரும்பிராய் ஸ்ரீ ஞானவைரவர் சுவாமி கோயில் மகா சிவராத்திரி விழா நாளை 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

முன்னதாக காலை 8 மணிக்கு 108 சங்காபிஷேக நிகழ்வு ஆலய பிரதமகுரு சிவாகம கிரியா வித்தகர் சிவஸ்ரீ செ.வைரவநாதக் குருக்களினால் நடத்தப்படும். தொடர்ந்து மாலை நேரம் ஏற்பாடு செய்யப்பட்ட கலை நிகழ்வுகள் த. திருநாவுக்கரசு தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் சிவபாலன் சிவன்சுதன், திருமதி காயத்ரி சிவன்சுதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

ஆலய தொண்டர் சபையினர் மற்றும் தர்மகர்த்தா சபையினரால் நடத்தப்பட்ட பண்ணிசை, பேச்சு எழுத்துப் போட்டியில் திறமை பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படவுள்ளதுடன் தொடர்ந்து பேச்சு, உரையரங்கு, இசையரங்கு மற்றும் வில்லிசைக் கச்சேரி ஆகிய நிகழ்வுகளும் இடம்பெற ஏற்பாடாகியுள்ளன. (செ -87)

## மரண அறிவித்தல்



### திருமதி ஜெயமாலினி ஜெகதீசன்

*யார்க்கரு வீதி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெயமாலினி ஜெகதீசன் நேற்று (22.02.2017) புதன்கிழமை காலமானார்.*

*அன்னார் அமரர்களான சின்னத்தம்பி - இலட்சுமி தம்பதிகளின் ஏக புதல்வியும், சுப்பையா ஜெகதீசன் அவர்களின் அன்பு மனைவியும், இரத்தினம் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்), தங்கராசா (தங்கம்சன், நெல்லியடி), சிவப்பிரகாசம் (அம்சன் ஒளியகம், நெல்லியடி), மகேசன் (கனடா), மகேந்திரன் (லண்டன்), குகதாசன் (ஜேர்மனி), சிறிதரன் (கனடா), சிவனேசன் (கனடா) ஆகியோரின் சகோதரியும், தனுஷியா (ஆசிரியர் - யா/ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயம்), பிரதீபன் (பொறியியல் விரிவுரையாளர், அவுஸ்ரேலியா), கார்த்திகா (ஆசிரியர் - யா/நாகர்கோயில் அ.மி.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், முரளிதரன் (திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பருத்தித்துறை), துஷ்யந்தி (வைத்திய கலாநிதி, அவுஸ்ரேலியா), ஞானச்செல்வன் (ஆசிரியர் - யா/நெல்லியடி மத்திய கல்லூரி) ஆகியோரின் மாமியும், அபிஷேகா, சஜனிகா, கிருத்திகன், விபுசனா ஆகியோரின் அம்மம்மாவும், லஸ்வின், தார்னா ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.02.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.*

**யார்க்கரு வீதி, கரவெட்டி கிழக்கு, கரவெட்டி**
**தகவல் : குடும்பத்தினர்**
**தொ. பே. இல. : 021 226 3035**
(செ-7636)




## கடற்படைத் தளபதியின் சேவைக் காலம் நீடிப்பு



(கொழும்பு)

கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேயகுணரத்ன வின் சேவைக் காலத்தை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இன்னும் ஆறு மாதங்களுக்கு நீடித்து உத்தரவிட்டுள்ளார். (இ-7)


## நீரிழிவுப் பாதிப்புக்களுக்கு ஆயுர்வேத மருத்துவம்

ஆரம்ப - நாட்பட்ட நீரிழிவுப் பாதிப்புக்கள் அதிகதாகம், அதிக பசி, அடிக்கடி சிறுநீர் வெளியேறுதல், இளைப்பு, களைப்பு, நரம்புப் பாதிப்புக்கள் (Diabetic neuropathy), கை - கால் விறைப்பும் உணர்வற்ற நிலையும் (Numbness of hands and legs), சமிபாட்டுக் குழப்பம், மலச்சிக்கல், அதிக இரத்தக் கொலஸ்ரோல், உயர் இரத்த அழுத்தம், இதய இரத்தக் குழாய் அடைப்பு (Coronary heart disease), இதய வலி (Chest pain / Angina), சிறுநீரகப் பாதிப்புக்கள் (Diabetic nephropathy), சிறுநீரில் ஏற்படும் கிருமித் தொற்றுக்கள் (Renal infections), மற்றும் சிறுநீரில் அதிகளவு புரோட்டின், யூரியா அதிக அளவில் காணப்படுதல் போன்ற நீரிழிவுப் பாதிப்புக்களிற்கு ஆயுர்வேத முறைப்படி மருந்து, உணவு, வாழ்க்கை முறை போன்ற ஆலோசனைகளுடன் சிகிச்சை பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251
(8026)


# சர்வதேச புள்ளிவிபரங்களுக்கு ஏற்ப அரசாங்கம் சரிந்துள்ளதாம் - டலஸ்



(கொழும்பு)

சர்வதேச புள்ளிவிபரங்களுக்கு ஏற்ப ஊழல் மற்றும் சட்டத்துறை சார்ந்த விடயங்களில் அரசாங்கம் சரிவு நிலையை எதிர்நோக்கயிருப்பதாக குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

களுத்துறை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும இந்த கருத்தை வெளியிட்டார்.

ஊழல் மற்றும் மோசடிகளை ஒழிக்கும் நோக்கத்துடன் வந்த நல்லாட்சி அரசாங்கம் அதே பாணியில் மோசடிகளுக்கு ஆட்பட்டுள்ளமை வருந்தத்தக்க விடயம் என அவர் தெரிவித்தார். (இ-7)

# ரணில் ஆட்சிக் கால கடன்களை நான்தான் செலுத்தினேன்-மகிந்த



ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக் காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்களை நான்தான் செலுத்தினேன் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கடன் சுமை குறித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2005ஆம் ஆண்டில் நான் நாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்ட போது அப்போதைய ரணில் அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தக் கடன் தொகை 2222 பில்லியன் ரூபாவாகும் எனவும் கூறியுள்ளார்.

இந்தக் கடன்தொகையை நானே செலுத்தியிருந்தேன். இதுபற்றி ஓர் வார்த்தைகூட ரணில் பேசுவதில்லை எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனது அரசாங்கம் நாட்டை கடன் சுமையில் ஆழ்த்தியுள்ளதாகக் குற்றம் சுமத்தி கடனைக் காண்பித்து நாட்டின் சொத்துக்களை



இந்த அரசாங்கம் விற்பனை செய்கின்றது.

மேலும், பல நாடுகளுக்கு கடன் செலுத்த வேண்டியிருப்பதாக பிரசாரம் செய்து ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கின்றது எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றஞ் சுமத்தியுள்ளார். (இ-7)

# சுற்றுலாப் பயணிகளின் வருகை திடீர் அதிகரிப்பு

கடந்த ஜனவரி மாதம் இலங்கைக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 12.9 வீதத்தால் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதற்கமைய 2016ஆம் ஆண்டு இலங்கைக்கு 194280 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

2017 ஆம் ஆண்டு ஜனவரி 219360 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த வருட ஜனவரி மாதம் சுற்றுலா பயணிகள் மூலம் கிடைத்த வருமானம் 322 மில்லியன் அமெரிக்க டொலராகும். இம்முறை அந்த வருமானம் 363.6 மில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள புதிய பொருளாதார அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)

# இலங்கையில் தேவாலயம் மீது நடந்த தாக்குதலுக்கு பிரித்தானியா கண்டனம்

இலங்கையில் தேவாலயம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பிரித்தானியா கண்டனம் வெளியிட்டுள்ளது. இலங்கையின் வடமேல் மாகாணத்தில் கிறிஸ்தவ தேவாலயமொன்று தாக்கப்பட்டதனை வன்மையாகக் கண்டிப்பதாக பிரித்தானியா உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

மதச் சிறுபான்மையினர் மீதான சகலவிதமான ஒடுக்கு முறைகளையும் வன்மையாக கண்டிப்பதாகவும் எவ்வித அழுத்தங்களும் இன்றி தமது மதத்தை பின்பற்ற மக்களுக்கான பூரண சுதந்திரமும் உரிமையும் இருக்க வேண்டுமென பிரித்தானிய வெளியுறவு மற்றும் பொது நலவாய அலுவலகம் தெரிவித்துள்ளது. இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது. (இ-7)

# இராசி பலன்

23.02.2017

(மாசி 11, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு

துவாதசி முன்னிரவு 9.06 மணிவரை

உத்தராடம் பின்னிரவு 6.27 மணிவரை

சுபநேரம் 8.00-9.30 மணிவரை

இராகுகாலம் 2.00-3.30 மணிவரை

வளவன்

**மீனம்:** விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும்.

**மேடம்:** செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**இடபம்:** அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்:** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, காலையில் கலகலப்பும் மாலையில் சலசலப்புமாக அமையும்.

**கும்பம்:** சிறிய வேலையொன்றிற்காக பலமுறை அலைய நேரிடலாம், அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | |
| சூரி புத கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் திருவாதிரை பகல் 11.00 மணிக்கு மகர- சந் | | |
| | | | ராகு |
| சந் | சனி | குரு | |

**கடகம்:** வராத உறவினர்கள் திடீரென உங்களின் வீடுகளுக்கு வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள்.

**மகரம்:** வருமானத்தை அதிகரிப்பதில் நாட்டம் காட்டுவீர்கள், பெரியவர்களின் உதவியால் சில நன்மைகள் இடம்பெறலாம்.

**சிம்மம்:** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், உடல் நலன் சீராகும், செய் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும் நாள்.

**தனுசு:** பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், தொலை பேசி வழியில் பொன்னான தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** வெற்றிகரமான செய்திகள் வந்து சேரலாம், பாராட்டும், புகழும் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்களால் பலனுண்டு.

**துலாம்:** பெற்றோர் வழியில் பிரியம் கூடும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கன்னி:** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

# வெள்ளையடிப்பு கனவை தகர்த்தது ஆஸி தொடர் இலங்கை அணி வசமானது



அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான மூன்றாவது இருபது - 20 போட்டியில் இலங்கை அணி 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்துள்ளது. எனினும் தொடரினை 2 - 1 என கைப்பற்றியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, அங்கு மூன்று இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இரு அணிகளுக்கிடையேயான மூன்றாவது இருபது - 20 போட்டி நேற்று அடிலெய்டு மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி துவக்க வீரர்கள் பின்ஞ் மற்றும் கிளிஞ்சர் நல்ல துவக்கம் கொடுத்தனர்.

இலங்கை அணியினர் பந்து வீச்சை நாலா புறமும் சிதறடித்தனர். இதனால் அணியின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென உயர்ந்தது.

இருவரும் முதல் விக்கெட்டிற்கு 79 ஓட்டங்கள் எடுத்த போது பின்ஞ் அரைச்சதம் கடந்து 53 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அதைத் தொடர்ந்து அடுத்து வந்த வீரர்கள் அனைவரும் தங்கள் பங்கிற்கு சிறப்பான ஆட்டத்தை கொடுக்க, அவுஸ்திரேலியா அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 187 ஓட்டங்கள் குவித்தது.

அவுஸ்திரேலியா அணியில் அதிகபட்சமாக பின்ஞ் 53 ஓட்டங்களும், கிளிஞ்சர் 62 ஓட்டங்களும் எடுத்தனர். இலங்கை அணி தரப்பில் மலிங்கா மற்றும் சானகா தலா 2 விக்கெட்டுகள் எடுத்து அசத்தினர்.

கடின இலக்கை விரட்டுவதற்கு அடுத்து களமிறங்கிய இலங்கை அணிக்கு துவக்க வீரர்களாக முனவீர மற்றும் தரங்க களமிறங்கினர். முனவீர 37 ஓட்டங்களிலும், தரங்க மற்றும் மென்டிஸ் தலா 14 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

இதற்கு அடுத்தபடியாக வந்த சிரிவர்தன (35) வைத் தவிர மற்ற வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இறுதியாக இலங்கை அணி அனைத்துவிக்கெட்டுகளையும் இழந்து 146 ஓட்டங்களே எடுத்தது.

இதனால் அவுஸ்திரேலியா அணி 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சம்பா ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார். இத்தொடரின் தொடர் நாயகனாக இலங்கை அணியின் குணரத்னே தெரிவு செய்யப்பட்டார்.

அவுஸ்திரெலியா மண்ணில் இலங்கை அணி தொடரை முழுமையாக கைப்பற்றி, அவுஸ்திரெலியா அணியை வெள்ளையடிப்பு செய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் நேற்று நடந்த போட்டியில் தோல்வியை சந்தித்ததால் மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 2-1 என்ற கணக்கில் இலங்கை அணி வென்று அசத்தியுள்ளது.

மேலும் இதற்கு முன்னர் நடந்த 2 இருபது - 20 போட்டிகளை இலங்கை அணி வென்றதால், தற்போது அவுஸ்திரெலியா அணி அதற்கு பழி தீர்க்கும் வகையில் இப்போட்டியை வென்றுள்ளது என்று கூறப்படுகிறது. (க)

## இலங்கை அரசுக்கு ஐ.நா கால அவகாசம் வழங்குவதை கடுமையாக எதிர்க்கின்றோம்

## நாடாளுமன்றில் சிறீதரன் எம்.பி காட்டம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கவில்லை. அதனை கடுமையாக எதிர்க்கின்றது.

எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடை பெற்ற ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின்கீழான கட்டளைகளை அங்கீகரிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே சிறீதரன் எம்.பி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றும் போது,

விமானப்படையினர் கையகப்படுத்தி வைத்திருக்கும் தமது சொந்த நிலங்களை மீட்பதற்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கேப்பாப்பிலவு மக்கள் 3 வாரங்களுக்கு மேலாக தொடர்ச்சியாகப் போராடிவருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

மீள்குடியேற்ற அமைச்சரும் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாக கூறி வாக்குறுதியை வழங்கியும் தற்போது வரையில் எவ்வித மான தீர்வுகளும் கிடைக்கவில்லை.

இவ்வாறான நிலையில் முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு மக்களும் தமது நிலங்களை விடுவிக்குமாறு கோரி சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்கள். அந்த போராட்டமும் தொடர்ந்த வண்ணமேயுள்ளது.

இதேவேளை,

கிளிநொச்சி நகரத்தின் இதயமாயிருக்கும் பரவிப்பாஞ்சான் மக்களும் தமது நிலத்தை விடுவிக்க கோரி போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்கள்.

இவ்வாறு தமிழ் மக்கள் தாம் பூர்வீகமாக வாழ்ந்த மண்ணில் மீண்டும் சென்று வாழ்க்கையைத் தொடருவதற்கான கோரிக்கையை முன்வைத்து மக்கள் போராடிக் கொண்டிருக்கின்ற போதும் அவர்களுக்கு தீர்வுகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை.

அவர்கள் இன்று வீதியிலேயே உணவருந்துகின்றார்கள் வீதியிலேயே உறங்குகின்றார்கள் அத்துடன் பாரிய நெருக்கடிக்குள் வீதியில் இறங்கி தமது காணிகளை மீட்பதற்காக போராடி கொண்டு இருக்கின்றார்கள்.

இவ்வாறிருக்கையில் இந்த விடயத்தில் தற்போது வரையில் அரசாங்கம் பாராமுகமாகவிருப்பது ஏன்? இந்தப் பிரச்சினைக்கு எப்போது தீர்வு கிடைக்கும்? சொந்த இடங்களுக்கு செல்லும் உரிமை மக்களுக்கு இல்லையா? இதுதான் இந்த நாட்டில் சம உரிமையா?

இவ்வாறு தமிழ் மக்கள் நல்லாட்சியிலும் தமது உரிமைகளுக்காக போராடிக்கொண்டும், கைதாகிக் கொண்டிருக்கும் நிலைமையில், அவுஸ்திரேலியாவிற்குச் சென்ற பிரதமர் அங்கு சட்டவிரோதமாகவுள்ள தமிழர்களை நாடு திரும்புமாறு அழைப்பு விடுக்கின்றார்.

இலங்கையில் தமிழர்களுக்கு பாதுகாப்பு உள்ளதாகவும் அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் கூறுகின்றார்.

இது முற்று முழுதான பொய்யாகும். இங்கு தமிழ் மக்கள் நடுத் தெருவில் தாங்கியிருந்து போராடுகின்றார்கள். எவ்விதமான பாதுகாப்பும் இங்கு இல்லை. நிலைமை இப்படித்தான் இருக்கின்றது. பிரதமர் அனைத்து உண்மைகளையும் மறைத்து கூட்டமைப்பை சாட்சியாக வைத்து பொய்யுரைக்கின்றார்.

தற்போது கிளிநொச்சியில் காணமல் போனவர்களின் உறவினர்களும் தமது உறவுகளை கண்டறிந்து தருமாறு போராட்டம் நடத்துகின்றனர். அவர்கள் தமது சொந்தங்களை கைகளாலேயே இராணுவத்தினரிடத்தில் ஒப்படைத்திருக்கின்றார்கள். நேரில் கண்ட சாட்சியங்கள் உள்ளன. அவர்களின் பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கு தொடர்ந்தும் கால அவகாசத்தையே அரசாங்கம் கோரிக் கொண்டிருக்கின்றது.

இந்த மக்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்கவேண்டும். அதனை எப்போது வழங்குவார்கள்?

இப்படியான நிலைமையில் தான் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கால அவகாசம் வழங்குவது குறித்து பேசப்படுகின்றது. இலங்கைக்கு கால அவகாசம் வழங்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு தெரிவிக்கவில்லை. அதை நாம் எதிர்க்கின்றோம். அவ்வாறு கால அவகாசம் வழங்கப்படக்கூடாது என பரப்புரையை முன்னெடுத்து வருகின்றோம் என்றார் சிறீதரன் (செ-15)

## வயலில் முதியவர் சடலமாக மீட்பு

சாவகச்சேரி பகுதியில் நேற்றைய தினம் வயலை பார்வையிடுவதற்காக சென்ற முதியவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பகுதியை சேர்ந்த கந்தசுவாமி திருநாவுக்கரசு (வயது 83) என்ற முதியவரே மேற்படி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த முதியவர் நேற்றைய தினம் காலை தனது வீட்டில் இருந்து சாவகச்சேரி - தச்சன் தோப்பு வீதி வழியாகவுள்ள வயலை பார்வையிட்டு வருவதாக வீட்டில் கூறிவிட்டு சென்றுள்ளார்.

ஆனால் மாலை ஆகியும் வீடு திரும்பாததை அறிந்த உறவினர்கள் அவரை தேடி குறித்த வயல் பகுதிக்கு சென்றுள்ளனர். அங்கு அவர் உயிரிழந்த நிலையில் கிடப்பதை கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

சடலம் அவ்விடத்தில் இருந்து மீட்கப்பட்டதுடன் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (செ-9)

## மயங்கிவிழுந்த பெண் மரணம்

கோவிலுக்கு சென்ற பெண் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று நேற்றைய தினம் நல்லூர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நல்லூர் சங்கிலியன் வீதியை சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயான இராஜநாதன் சாவித்திரி (வயது 70) என்பவரே மேற்படி உயிரிழந்தவராவார்.

குறித்த பெண் நேற்றைய தினம் வீட்டின் அருகில் உள்ள கோவிலுக்கு வழிபாட்டை மேற்கொள்வதற்காக சென்றுள்ளார். அப்போது அங்கு மயங்கி விழுந்துள்ளார். அதனை அவதானித்த வீதியால் சென்ற நபர்கள் அவரை மீட்டு உடனடியாக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். எனினும் சிகிச்சை அளிப்பதற்கு கொண்டு செல்லும் பொழுது அவர் உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மரண விசாரணையை யாழ் போதனா வைத்தியசாலை மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டிருந்தார். (செ-9)

## தென்னாபிரிக்காவின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்தது நியூசிலாந்து

தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் நியூசிலாந்து அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் தென்னாபிரிக்காவின் தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான ஒரே ஒரு 20 ஓவர் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்று இருந்தது. 5 ஒருநாள் போட்டியில் முதல் ஆட்டத்திலும் அந்த அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வென்று இருந்தது.

இந்நிலையில் நியூசிலாந்து-தென்னாபிரிக்கா அணிகள் மோதிய 2-வது ஒருநாள் போட்டி கிறிஸ்ட் சர்ச் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.


முதலில் விளையாடிய நியூசிலாந்து அணி, கப்டன் வில்லியம்சன், முன்னாள் கப்டன் டெய்லர், நீஷம் ஆகியோரின் அபாரமான ஆட்டத்தால் 4 விக்கெட் இழப்புக்கு 289 ஓட்டங்கள் குவித்தது. தொடக்க வீரர் புரோன்லி 34 ஓட்டங்களும், கப்டன் வில்லியம்சன் 69 ஓட்டங்களும் எடுத்தனர். ஜேம்ஸ் நீசம் 57 பந்தில் 71 ஓட்டங்கள் (ஆட்டமிழக்காமல்) எடுத்தார்.

டெய்லர் அபாரமாக விளையாடி சதம் அடித்தார். அவர் 110 பந்துகளில் 102 ஓட்டம் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார். இதில் 6 நான்கு ஓட்டங்கள் அடங்கும். 180-வது ஒருநாள் போட்டியில் விளையாடிய டெய்லருக்கு இது 17-வது சதமாகும்.

இதன்மூலம் ஒருநாள் போட்டியில் அதிக சதம் எடுத்த நியூசிலாந்து வீரர் என்ற பெருமையை டெய்லர் பெற்றார். அந்நாட்டு வீரர் ஆஸ்லே 16 சதம் அடித்ததே முந்தைய சாதனையாக இருந்தது.

இதையடுத்து 290 ஓட்டம் என்ற இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி, சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்தது. குயின்டன் டி கொக் 57 ஓட்டங்களும், கப்டன் டி வில்லியர்ஸ் 45 ஓட்டங்களும், டுமினி 34 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர். கடைசி இரண்டு ஓவர்களில் 20 ஓட்டங்கள் தேவை என்ற நெருக்கடியான நிலையில், பிரிட்டோரியஸ்-பெலுக்வாயோ களத்தில் இருந்தனர்.

19-வது ஓவரில் நெருக்கடிக்கு மத்தியிலும் அரை சதம் அடித்தார் பிரிட்டோரியஸ். அதனால், அவர் தென்னாபிரிக்க அணியை வெற்றி பெறச் செய்வார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அந்த ஓவரின் கடைசி பந்தில் அவர் போல்ட் பந்தில் விக்கெட்டை இழந்தார். அவர் சரியாக 50 ஓட்டங்கள் எடுத்தார்.



எனவே, தென்னாபிரிக்காவின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 15 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், அந்த ஓவரை யார்க்கராக வீசி திணறடித்தார் சவுத்தி.

இதனால் முதல் 4 பந்துகளை கோட்டைவிட்ட பெலுக்வாயோ, கடைசி இரண்டு பந்துகளில் நான்கு ஓட்டங்கள் அடித்தார். இதன் மூலம், அந்த அணி 50 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 283 ஓட்டங்களே எடுத்தது.

எனவே, நியூசிலாந்து அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அத்துடன், தொடர்ந்து 12 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ள தென்னாபிரிக்காவின் சாதனைக்கும் முற்றுப்புள்ளி வைத்தது. டெய்லர் ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார். (க)

# கிளிநொச்சி மாவட்டத்தில் கல்விப் பயிர் வளர்த்த கலங்கரை விளக்கு உயர்திரு. கந்தசாமி முருகவேல் அவர்களின் மணிவிழா சிறப்பிதழ்

Best Wishes



வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி தனது அறுபதாவது வயதில் சேவையில் இருந்து ஓய்வு பெறும் திரு.கந்தசாமி முருகவேல் அவர்கள் கல்விப் பணிக்காக ஆற்றிய சேவையை கௌரவிக்கும் முகமாக வெளியிடப்படவுள்ள மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

திரு.க.முருகவேல் அவர்கள் 1988 ஆம் ஆண்டு ஆசிரியராக நியமனம் பெற்று தனது ஆசிரிய முன் சேவைப் பயிற்சியினை யாழ்/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் மேற்கொண்டு தொடர்ந்து ஆசிரியராக கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரிக்கு நியமிக்கப்பட்டார். 1999 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு நியமிக்கப்பட்டார். தனது சேவைக்காலத்தில் முதல் நியமனமாக ஆசிரியராக நியமிக்கப்பட்டு அதிபராக, உதவிக் கல்விப் பணிப்பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய இவர் 2011.12.01 இல் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். கிளிநொச்சி வலயத்தின் அபிவிருத்திக்காக இவர் அரும்பணியாற்றியமை பாராட்டத்தக்கதாகும்.

கல்விச் சமூகத்திற்காக இதுவரை காலமும் சிறப்பாக சேவையாற்றிய இவர் தனது ஓய்வுக் காலத்தில் பல சமூக, சமயப் பணிகளை மேற்கொண்டு தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இ.இரவீந்திரன், செயலாளர், கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு.
வடக்கு மாகாணம்.



முயற்சியால் வளர்ந்து கல்வி சேவையில் கால்தடம் பதித்தவர்

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்விச் சேவையில் திரு. கந்தசாமி முருகவேல் அவர்களின் பங்கு அளப்பரியது மீள்குடியமர்வின் பின்னர் கௌரவ த.குருகுலராஜா அவர்களின் சேவையின் பின்னர் கல்வி வளர்ச்சியில் அரும்பாடுபட்ட ஒருவர். இனியமுகத்துடன் சிரித்தபடி அலுவலகம் நாடி வருவோரை வரவேற்று முகங்கோணாதபடி விளக்கமளித்து தன் கடமையை நிறைவேற்றுவார்.

ஆசிரியராய் சேவைக்கால ஆசிரிய ஆலோசகராய், அதிபராய், உதவிக்கல்விப் பணிப்பாளராய்,பிரதிக் கல்விப் பணிப்பாளராய் கல்வி புலத்தில் 1988 ஆம் ஆண்டு முதல் கீழ்மட்டத்தில் இருந்து தனது உழைப்பாலும் முயற்சியாலும் படிப்படியாய் முன்னேறி வலயக் கல்விப் பணிப்பாளரானவர். இதனால் கீழ்மட்டம் முதல் அனைவரதும் சுகதுக்கம் அறிந்து நடப்பார். போரின் பின்னர் எல்லாம் இழந்த நிலையில் பொறுப்பேற்று மாவட்ட கல்வி நிலையை மேம்பட செய்தவர். இவரிடம் கற்ற பலர் இன்று பலரை வழி நடத்தும் நிலைக்கு இவரால் உயர்த்தப்பட்டுள்ளனர்.

இவர் ஓய்வுகாலத்திலும் தனது தெய்வ, சமூக, பொது பணியுடன் கல்விப் பணியை சேர்த்து ஆற்ற வேண்டுமென்பதுடன் அவரின் ஓய்வுக்காலம் சிறக்க வட்டக்கச்சி மாயவனூர் மாயவனையும் இரணைமடு கனகாம்பிகையையும் வேண்டி என்றும் நீடூழி வாழ்கவென வாழ்த்தி நிற்கின்றேன்.

எந்திரி.சி.விகிர்தன்,பொறியியலாளர்,கல்வி அமைச்சு (வ.மா)



மணிவிழா நாயகனே வாழி!

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக கல்விப் பணியாற்றி இன்று மணிவிழாக் காணும் நாயகன் திரு. கந்தசாமி முருகவேல் அவர்களை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். ஆசிரியராக, உதவிக்கல்விப் பணிப்பாளராகச் சிலகாலம் மீண்டும் உதவி, பிரதிக் கல்விப் பணிப்பாளராக, மாவட்டத்தின் கல்விப் பணிப்பாளராக தாங்கள் இந்த மாவட்டத்தில் கடமையாற்றிய காலம் மறக்கமுடியாதது. அசாதாரண சூழ்நிலை நாட்டில் நிலவிய போது அதற்கு ஈடு கொடுத்து தாங்கள் பணியாற்றினீர்கள். தொண்ணூறுகளில் க.பொ.த.உயர்தர கணித, விஞ்ஞான ஆசிரியர்களுக்கு இம் மாவட்டத்தில் பற்றாக்குறை இருந்த போது கிளி/ இந்துக் கல்லூரி, கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவர்களை இணைத்து கற்பித்தல் செயற்பாட்டை நடத்திய காலம் பொன்னானது. அன்று உங்களிடம் கற்ற மாணவர்கள் இன்று பல்வேறு உயர் பதவிகளில் இம்மாவட்டத்தில் சேவையாற்றுகின்றனர். இந்த மாவட்டத்தின் மிகச் சிறந்த பௌதீகவியல் ஆசானாக நீங்கள் என்றும் மாணவர் மனதில் நிறைந்திருப்பீர்கள். தாங்கள் ஓய்வுக்காலம் சிறக்க இறைவனை வேண்டுகின்றேன்.

திரு.க.ம.பத்மநாதன்.
ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர், கிளிநொச்சி.



மணிவிழா நாயகனை மனமுவந்து வாழ்த்துகின்றேன்

கல்விப் பணி ஓர் உன்னதமான பணி. அத்தகைய மேலான பணியினை கிளிநொச்சி கல்வி வலயத்தில் கல்விப் பணிப்பாளராக பணிபுரிந்து மணிவிழாக் காணும் எமது வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.கந்தசாமி முருகவேல் அவர்களது சேவையை நினைந்து போற்றி, அவரை உள்ளன்போடு வாழ்த்துவதில் உவகையடைகின்றேன்.

ஆசிரியராக, அதிபராக இருந்து உதவிக் கல்விப் பணிப்பாளராக, பிரதிக் கல்விப் பணிப்பாளராக வளர்ந்து வலயக் கல்விப் பணிப்பாளர் வரை உயர்வு பெற்று பல பதவிகளை அலங்கரித்தார். எளிமையையும் இனிமையையும் ஒருங்குசேர எவருடனும் பழகும் மனப்பாங்கு கொண்டவர். அன்புறவு நல்லவழிகாட்டல், தலைமைத்துவப் பண்புகள் போன்ற பல சீரிய குணங்கள் நிரம்பப் பெற்றவர்.

கிராமியப் பாரம்பரியங்களைத் துல்லியமாக அறிந்து அதனோடு ஒட்டி உறவாடி வழிநடத்தும் உயர் பண்பாளன். நவீனயுகத்தின் செயலொழுங்கோடு, பழைமையையும் நலிவடையாது காத்து இரண்டையும் இணைத்துச் செல்லும் வாழ்வியலைக் கடைப்பிடித்தவர் எனில் மிகையில்லை. மணிவிழா நாயகன் அவரது குடும்பத்தினரோடு என்றும் நலமோடு மகிழ்ச்சியோடு வாழ இறையருள் வேண்டுகின்றேன்.

திரு.வீ.இராசகுலசிங்கம், கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
கண்டாவளை.



1.முழுப்பெயர்:- திரு.கந்தசாமி முருகவேல்
2.தற்போதைய பதவி:- (கல்வி நிர்வாக சேவை தரம்-II) வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி.
3.பிறப்பிடம்:- இடைக்காடு,யாழ்ப்பாணம்.
4.பெற்றோர்:- தந்தை – அமரர்.வே.கந்தசாமி (ஓய்வுநிலை அதிபர்)
தாய் - திருமதி.க.மாங்கயற்கரசி (ஆசிரியர்)
5.வதிவிடம்:- இல.126,ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி.
6.முதல் நியமனத் திகதி:- பட்டதாரி ஆசிரியர் 10.11.1988, கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி.
7.கல்வித் தகைமை:- விஞ்ஞான இளமாணி– யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
பட்டப்பின் கல்வி டிப்ளோமா – யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.
கல்வி முதுமாணி – யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

1.சேவை விபரம்:-

| காலம் | சேவை நிலையம் |
| --- | --- |
| 10.11.1989- 30.06.1996 | ஆசிரியர் கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி. |
| 01.07.1996 – 31.12.1998 | பிரதி அதிபர் கிளி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரி |
| 01.01.1999 –09.01.2007 | உதவிக் கல்விப் பணிப்பாளர்(கணிதம்) (SLEAS – III) வலயக் கல்வி அலுவலகம்,கிளிநொச்சி. |
| 10.01.2007 – 01.06.2008 | அதிபர் (SLEAS – III) கிளி/ இராமநாதபுரம் மகாவித்தியாலயம். |
| 02.06.2008 – 05.08.2011 | பிரதிக் கல்விப் பணிப்பாளர்-(SLEAS – III) (கல்வி அபிவிருத்திக் கிளை) வலயக் கல்வி அலுவலகம். கிளிநொச்சி. |
| 06.08.2011 – 22.02.2017 | வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், கிளிநொச்சி. |



போரின் பின் கல்வியை செதுக்கிய சிற்பி.

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் உயர் திரு.கந்தசாமி முருகவேல் அவர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர் பணிநிலையில் இருந்து ஓய்வு பெறுகிறார்கள். ஆசிரியர், சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், அதிபர், உதவிக் கல்விப் பணிப்பாளர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் என கல்விப்புலத்தின் அனைத்து நிலைகளிலும் பணியாற்றி இருக்கிறார்கள். போரின் பின் அனைத்தையும் இழந்த நிலையில் பொறுப்பேற்று தனது அயராத உழைப்பால் மாவட்டத்தின் கல்வி நிலையை படிப்படியாக முன்னேற்றினார்கள். ஓய்வுக் காலத்தில் சமூகப் பணியாற்றுவதற்காக தன்னைத் தயார் செய்து வருகிறார்கள். ஒளிவுமறைவு இல்லாத, கள்ளம் கபடம் அற்ற தனது பண்பால் அனைவரையும் அரவணைத்து கல்வியை மேம்படுத்திய பெருமகன்.

ஓய்வுக் காலத்திலும் தனது இறைபணி, சமூகப் பணியுடன் கல்விப் பணியையும் இணைத்து ஆற்றவேண்டும். அதற்காக ஆண்டவன் அருள்பாலிக்க வேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

அ.அமிர்தலிங்கம்,கோட்டக் கல்விப் பணிப்பாளர், கரைச்சி
தலைவர் ( ஊழியர் நலன்புரிச் சங்கம் - 2016-2017)



கல்விப் புலத்தின் கலங்கரை விளக்கு.

கடந்த இரண்டு தசாப்த காலங்களுக்கு மேலாக கிளிநொச்சி மண்ணில் தன்னுடைய கல்விப் பணியினை அர்ப்பணிப்போடு ஆற்றி இன்று மணிவிழாக் காணும் திரு.க.முருகவேல் அவர்களது சேவை நலன் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஆசிரியர், அதிபர் சேவையை மட்டுமல்லாது கல்விப் புலத்தின் நிர்வாகச் செயற்பாட்டையும் முழு மனதோடு நேர்த்தியாக மேற்கொண்டு, அரச சேவையாளர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர் மணிவிழா நாயகன் முருகவேல் அவர்கள் என்பது யாவரும் அறிந்ததே. இந்த மண்ணில் யுத்தம் நடந்து கொண்டிருந்த சமகாலத்திலேயே தன்னுடைய கல்விப் பணியையும் தொடங்கி யுத்தம் நிறைவுக்கு வந்து, அக்கொடிய யுத்தத்தினால் துவண்டு போயிருந்த எமது மாணவர்களது கல்விச் செயற்பாட்டை மாவட்டத்தின் மீது அக்கறை கொண்டோரது துணையோடு மீளப் புத்துருவாக்கம் செய்த பெருமை மணிவிழாநாயகனுக்கே உரித்தென்றால் மிகையாகாது.

எனவே ஓய்வுக் காலத்தில் சகல சிறப்புக்களோடு இன்று போல் என்றும் வாழ எல்லாம் வல்ல கனகாம்பிகை அம்பாளது பாதக்கமலங்களைப் பணிவதோடு, ஓய்வின் பின்னரான சமூகம் சார் பணிக்காக அன்புரிமையோடு அவரது கரங்களைப் பற்றி வாழ்த்துகின்றேன்.

எந்திரி. ந.சுதாகரன், பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர்,
கிளிநொச்சிப் பிராந்தியம்



அண்மைக் காலத்தில் கிளிநொச்சி வலய மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதோடு இணைபாடவிதான செயற்பாடுகளிலும் தங்களது திறமைகளை வெளிக்காட்டி வருகின்றனர். 2016 ஆம் ஆண்டிலேயே நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த.(உ/த) பரீட்சை என்பவற்றில் இவ் வலய மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. கிளிநொச்சி வலய மாணவர்களது கல்வி வளர்ச்சிக்கு அரும் பணியாற்றி தனது அகவை அறுபதில் ஓய்வு பெறும் திரு.க.முருகவேல் அவர்களது சேவைக்கு நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு அவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

திரு.செ.உதயகுமார், மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.



அன்றும், இன்றும், என்றும் புன்சிரிப்புடன் இயங்கும் முருகவேல் சேர்

முருகவேல் சேர் அவர்களை 1987 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் க.பொ.த.(உ/த) பௌதீகவியல் கடினமான பாடம் என்பதால் மாணவரிடையே பதற்றம் நிறைந்திருந்தது. அதனால் முதல் நாளில் இருந்து அவரது கற்பித்தல் எமக்கு திடீர் புத்துணர்ச்சியை ஏற்படுத்தியது. அவரின் அன்பான கற்பித்தல் மாணவருக்கு அறிவுரை கூறும்பாங்கு எமக்கு மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியது. இதன் காரணமாக பின்னாளில் பௌதீகவியலினை ஆர்வத்தோடு கற்று பலர் உயர் சித்திகளைப் பெற வழியமைத்தவர் என்பதை பெருமையாக சொல்வதில் நிறைவடைகின்றேன்.

அவர் கிளிநொச்சியில் நிரந்தரமாகக் குடியேறி பலருக்கு சிறப்பான கல்வியினை தொடர்ச்சியாக வழங்கியதனை அனைவரும் அறிவோம். அவர் இந்த மாவட்ட மாணவர்களுக்கும் கல்விச் சமூகத்திற்கும் ஆற்றிய பணி அவரை இந்த மாவட்டத்தின் கல்விப் பணிப்பாளராக உயர்த்தியது. இன்று வரை முருகவேல் சேரிடம் ஆரம்பத்தில் இருந்த உற்சாகமும் துடிப்பும் புன்முறுவலும் அழியாமல் உள்ளது. முருகவேல் சேர் பற்றி பலருக்கு அவரது நேர்மை, வெளிப்படைத்தன்மை, பற்றி தெளிவாகத் தெரியும்.

எந்த விடயத்தையும் தெளிவாக பொருத்தமான நேரத்தில் பொருத்தமான இடத்தில் கூறும் வல்லமை படைத்தவர். அவர் தொடர்ந்தும் கல்விச் சமூகத்திற்கு ஆலோசகராக இருப்பார் எனவும் எதிர்பார்க்கின்றேன்.

Dr.த.சத்தியமூர்த்தி,பணிப்பாளர், யாழ். போதனா
வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.



கிளிநொச்சி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் திரு.கந்தசாமி முருகவேல் அவர்கள் தனது அறுபதாவது அகவையில் ஓய்வு பெறுகின்றார். கல்விப் புலத்தில் பல படிநிலைகளிலும் பணியாற்றிய காலப்பகுதியில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்ட போது அவருடன் அறிமுகம் கிட்டியது.

பௌதீகவியல் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியராக கிளிநொச்சியில் நியமனம் பெற்று பல வைத்தியர்களையும் பொறியியலாளர்களையும் உருவாக்கியவர். இனிய புன்னகையுடன் பண்பான வார்த்தைகள் பேசும் கடவுள் பக்தி கொண்டவர்.

இயல்பாகவே சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்ட இவர் ஓய்வுக்காலத்திலும், இப்பணிகளை சிறப்பாக ஆற்றி சமூகத்தை நல்வழிப்படுத்துவதற்கு இறைவன் ஆரோக்கியத்தையும் உடல் உள நலத்தையும் வழங்க வேண்டும் என்பதோடு எனது இனிய நண்பர் எல்லா செல்வங்களும் பெற்று நீடூழி காலம் வாழ வேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

எந்திரி.வே.பிரேமகுமார், நீர்ப்பாசனப் பணிப்பாளர்,
வடக்கு மாகாணம்.



மணிவிழா நாயகனை மனதாரப் பாராட்டுகின்றேன்.

அகவை அறுபதில் அரச பணியில் ஓய்வு பெறும்
ஆசிரியப் பணியில் மூன்று பெரும் தசாப்தம் பணி
செய்த – எம் நாயகனை
இடைக்காட்டில் கற்று வட்டக்கச்சி வரை பணிசெய்து
மாவிலாறு தொடங்கி முள்ளிவாய்க்கால் வரை
மக்களை துரத்தும் போதெல்லாம் - மண்டியிடாமல் பிரதிப் பணிப்பாளராய்
கல்விக் கூடங்களை ஒருங்கே இணைத்து - கூட்டங்கள் கூட்டி
பாடப்புத்தகங்கள் வழங்கி – பரீட்சைகள் நடத்தி
இருட்டு மடுவில் இருந்து புறப்பட்டு இரும்புக்கம்பி வேலிக்குள் - அடைபட்டு
இருக்க இருப்பிடம் இன்றி படுத்துறங்க – தறப்பாள்களில்
தலையணைகள் எதுவுமில்லை தலைவலிகள் அதிகமாய் இருக்க
தலைமுறைக்கு தவறிழைத்திடக் கூடாதென
தலையங்கங்கள் இடப்படாத பள்ளிகள் நடத்தி,
பாடங்கள் நடத்தி,பரீட்சைகள் வைத்து
மீள் குடியமர்வு என்று சொந்த மண்ணுக்கு அழைத்து
படங்கள் வரைந்து பாதைகள் காட்டி
படுவதற்கு இனியொரு துன்பமில்லை என்பதை உணர்த்தி
சகாக்களின் துன்பம் தாங்காமல் உயர்ந்தது போல
பள்ளிகள் வளர்த்து பரீட்சைப் பெறுபேறுகளை உயரவைத்து
ஓய்வு பெறும் இவ் வேளையில் பலநூறு ஆண்டுகள்
வாழ்கவென வாழ்த்துகின்றேன்.

திரு.சு.தர்மரட்ணம்,
கோட்டக் கல்விப் பணிப்பாளர், பூநகரி.

(அ-7629)



மணிவிழா நாயகரை மனதார வாழ்த்துகின்றேன்.

முருகனின் வேலெனும் நாமத்தைக் கொண்ட கண்ணனின் பக்தரே! ஆண்டுகள் அறுபது கடந்து அகவை அறுபது அடைந்து மணிவிழாக் காணும் மணிவிழா நாயகனே! எமது மண்ணிலே ஆசிரியராகப் பணியைத் தொடங்கி ஒவ்வொரு படிநிலைகளையும் அலங்கரித்து, இறுதியாகக் கிளிநொச்சி மாவட்டத்தின் வலயக் கல்விப் பணிப்பாளர் என்ற ஸ்தானத்தில் அமர்ந்து கல்விப் பணியாற்றிய பெருமகனே . பரந்து விரிந்த பகுதியைக் கொண்ட வலயத்தின் அனைத்துப் பாடசாலைகளையும் பறந்து திரிந்து பணியாற்றியவரே!

துணியும் சமூக ஆர்வலரே! வாழ்க நீடு வளமுடன் வாழ்க!
சுற்றம் சூழ வாழ்க!
உற்றார், உறவினர் மற்றவர் என மகிழ்வுடன் வாழ்க!
வாழ்க பல்லாண்டு மன நிறைவோடு வாழ்க!
ஐ.குகானந்தராசா, கோட்டக்கல்விப் பணிப்பாளர், பளை.

# அரசடி ச.ச.நிலைய ஜன்னல் கண்ணாடிகள் சேதம்



வடலியடைப்பு அரசடி சனசமூக நிலையக் கட்டடத்தின் ஜன்னல் கண்ணாடி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு விசமிகள் சிலரால் அடித்து நொறுக்கப்பட்டன. விசாரணைகளை இளவாலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-82)

# சிவராத்திரியை முன்னிட்டு விசேட பேருந்துச்சேவை

மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் நாளை இடம்பெறும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பயணிகளின் வருகைக்கேற்ப யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்ற இடங்களிலிருந்து பேருந்துச்சேவைகள் இடம்பெறும். பருத்தித்துறை சாலையிலிருந்து-திருக்கேதீஸ்வரம் வரை சேவையில் ஈடுபடும் பேருந்துகளின் ஆசனங்களை முன்பதிவு செய்ய முடியும் என்பதையும் யாழ். மத்திய பேருந்து நிலையத்திலிருந்து காலை 5மணி தொடக்கம் பேருந்து சேவை இடம்பெறும் என இலங்கைப் போக்குவரத்துச் சபையின் (வடக்கு) பிரா-ந்திய முகாமையாளர் (செயலாற்றல்) கே.கேதீசன் அறிவித்துள்ளார். (இ-3)




## மெய்வல்லுநர் போட்டி

கோண்டாவில் சி.சி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை அதிபர் திருமதி சி. நந்தகுமார் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அன்ட்ரா பதிப்பக உரிமையாளர் ததளையசிங்கம், சிறப்பு விருந்தினராக யாழ். கோண்டாவில் இந்துக் கல்லூரி பிரதி அதிபர் சு.தனரூபன்., கௌரவ விருந்தினராக ஜே /120 கிராம சேவையாளர் திருமதி கு.பிரதாபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (5)

## கலந்துரையாடல்


இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலைய கல்வி பீடத்தின் பழைய மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெறவுள்ளது. எனவே பட்டமேற் கல்வி டிப்ளோமா பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (இ-3)

# மகா சிவராத்திரி உற்சவம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணலிங்கேஸ்வரர் மற்றும் கண்ணகியம்மன் ஆலயங்களின் மகா சிவராத்திரி உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை நான்கு சாமபூஜைகளுடன் இடம்பெற்று மறுநாள் சுவாமி வெளிவீதி வலம் வந்து ஆலய கேணியில் சுவாமி தீர்த்தமாடல் இடம்பெறும். இந்நிகழ்வில் ஆலய அற நெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. முன்னாள் ஆலயத்தலைவர் சமய சமூகசேவையாளர் கலக்விசுவ நாதன் பற்றிய சிறப்புச்சொற் பொழிவும் இந்நிகழ்வில் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# இசை ஆராதனை

யாழ். இந்தியத் தூதுவராலயத்தின் அனுசரணையில் வடஇலங்கை சங்கீத சபை வழங்கும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 170 ஆவது இசை ஆராதனை எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை மருதனார்மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபையின் தற்பரானந்தன் அரங்கில் இடம் பெறவுள்ளது. யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரும் வட இலங்கைசங்கீத சபைத்தலைவருமான ந.தெய்வேந்திராஜா தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, யாழ். இந்தியத் தூதுவர் ஆ. நடராஜன், சிறப்பு விருந்தினராக ஓய்வு நிலை யாழ். வலயக் கல்விப்பணிப்பாளரும் முன்னாள் வடஇலங்கை சங்கீதசபைத் தலைவருமான திருமதி. அருளீஸ்வாரி வேதநாயகம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)





க.நவம் மற்றும் ஷியாமளா நவம் ஆகியோர் எழுதிய நான்கு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு கடந்த 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் பேராசிரியர்.எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.



நெடுந்தீவு பிரதேச செயலக சமுர்த்திப்பயனாளிகள், உத்தியோகத்தர்கள் இணைந்து அண்மையில் ஒமலாக் காடு மாதிரி பனந்தோட்டப் பகுதிகளில் சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

# ஐ.நா.சபையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக் கூடாது

## சிவில் அமைப்புக்கள் பகிரங்கமாக வலியுறுத்த வேண்டும் என கஜேந்திரகுமார் கோரிக்கை

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக் கூடாது என வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புக்கள் பகிரங்கமாக வலியுறுத்த வேண்டும் என கோரியுள்ள தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நிராகரித்து, அந்த தீர்மானம் முழுமையான சர்வதேச விசாரணையை நோக்கி பயணிக்க வேண்டும் எனவும் சிவில் அமைப்புக்கள் வலியுறுத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. கந்தர்மடத்தில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மார்ச் மாதம் இலங்கை தொடர்பான அறிக்கையை மனிதவுரிமை ஆணையாளர் வெளியிடவுள்ளார். இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பில் ஆராயப்பட்டு அது தொடர்பிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த ஒரு பின்னணியில் தான் இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. மேலதிக கால அவகாசமாக ஒன்றரை வருடம் கோரவுள்ளதாக அறிவித்துள்ளார்கள். எமது மக்களுக்கு இந்த தீர்மானம் தொடர்பில் ஒரு தெளிவு தேவை. நாம் ஆரம்பம் முதலே கூறி வந்திருந்தோம், இங்குள்ள அரசியல் சூழ் நிலைகளை கையாள்வதற்குதான் தீர்மானம் கொண்டு வரப்பட்டதே தவிர, பொறுப்புக்கூறல் என்ற கோணத்தில் நிறைவேற்றப்படவில்லை. மகிந்த ராஜபக்ஷ இருந்த காலத்தில் அவருக்கு நெருக் கடியை கொடுத்து ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு மட்டும்தான் அந்த தீர்மானங்கள் ஐ.நாவில் கொண்டு வரப்பட்டன.

பாதிக்கப்பட்ட மக்களுடைய ஒத்துழைப்போடு தான் மனிதவுரிமை சம்பந்தப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்ற விதிமுறை அங்கு உள்ளது. இந்த நிலையில் தான் அட்சி மாற்றத்தை மாத்திரம் வைத்துக் கொண்டு வரப்படும் தீர்மானங்களை நிராகரித்து எவ்வாறான தீர்மானங்கள் எங்களுக்கு சரிவரும் என்பதை ஆணித்தரமாக கூறி, வேறு எதனையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது என ஆரம்பத்தில் இருந்தே கூறி வந்துள்ளோம். அதனை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு செய்திருக்க வேண்டும். ஆட்சி மாறியதன் பின்னரும் கூட புதிய ஆட்சியையும் கட்டுப்படுத்தியிருக்க முடியும். நிபந்தனை இல்லாத ஆதரவை வழங்கி ஒவ்வொரு தீர்மானத்தையும் வேறு வல்லரசுகள் பயன்படுத்த நாங்கள் அனுமதித்தமையால் தான் அரசு விரும்பியபடி ஒரு உள்ளக விசாரணை நிறை வேற்றப்பட்டுள்ளது.

இலங்கை அரசு இந்த உள்ளக விசாரணையை விரும்பி கொண்டு, தற்போது சர்வதேச விசாரணையாளர்கள் வேண்டாம் என்பதனை மிக தெளிவாக கூறியுள்ளது. வெறுமனே கண்காணிப்பாளர்களை அனுமதிக்கவே தயாராக இருக்கின்றார்கள். இவ்வாறான சூழலில் தான் இலங்கை தொடர்பான விடயம் ஆராயப்படவுள்ளது. 2015 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி, அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டு உள்ளவற்றை நிறைவேற்றாத நிலையில், மீண்டும் உள்ளக விசாரணைக்கான கால அவகாசத்தை வழங்க போகின்றோமா? என்பது தான் கேள்வி.

இந்த கால நீடிப்பு என்பது இரண்டாவது முறை. ஏற்கனவே இருக்கின்ற மோசமான தீர்மானத்தில் சர்வதேச பங்களிப்பை சேர்த்துக் கொள்ளுங்கள் என்ற அறிவுறுத்தலை கூட இலங்கை அரசு நிராகரித்துள்ள பின்னணியில் தொடர்ந்தும் கால அவகாசத்தை வழங்க போகின்றோம் என்றால், மீண்டும் மீண்டும் தங்களுடைய நலன்களை பாதுகாப்பதற்கும், வெளிநாடுகளுக்காகவே எமது தலைமைகள் செயற்படுகின்றன. இதனை எங்களுடைய மக்கள் தெளிவாக விளங்கி கொள்ள வேண்டும். தமிழ் சட்டத்தரணிகள் ஒரு காத்திரமான அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கால அவகாசம் வழங்கப்படக் கூடாது எனவும், இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றே அவசியம் எனவும் வலியுறுத்தியுள்ளது. அதனை நாங்கள் வரவேற்கின்றோம். கால அவகாசம் தொடர்ந்தும் வழங்குவது என்றால் நிச்சயமாக ஒரு பச்சை துரோகமாக தான் அது இருக்கும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன், தலைவர் சம்பந்தன் இந்த கால நீடிப்பை வழங்க இணங்கி உள்ளனர். இது பாதிக்கப்பட்ட மக்களுடைய நலன்களுக்காக எடுக்கப்படும் தீர்மானமாக இருக்க முடியாது.

இந்த நிலையில் வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புக்கள் இலங்கை அரசுக்கு கால நீடிப்பை வழங்கக் கூடாது என்று பகிரங்கமாக முடிவுகளை எடுக்க வேண்டும். இதோடு முழுமையான சர்வதேச விசாரணையை நோக்கித்தான் இந்த தீர்மானம் வரவேண்டும் என வலியுறுத்த வேண்டும். நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம். மக்கள் ஊடக தமிழ் ஊடாக இவற்றை வலியுறுத்தி உள்ளார்கள். அதனை சிவில் சமூகமும் வலியுறுத்த வேண்டும் என தெரிவித்தார். இந்த சந்திப்பில் கட்சியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரனும் உடனிருந்தார். (இ-4)

# யாழ். நீதிமன்றத்தின் பகிரங்க அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றது.

எனவே குறித்த சான் றுப் பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமி ருப்பின் 02 மாத காலப் பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலை நாட்டும்படி குற்றவியல் நடவடி முறைச் சட்டக் கோவையின் 431(2) இன் பிரகாரம் இத்தால் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸாரால் மன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ள சான்றுப் பொருட்கள்

வழ.இலக்கம் AR/136/17 சான்றுப் பொ.இல.PR/699/16 சான்றுப் பொருள் விபரம் 69273628 இலக்க லுமாலா வர்க்க ஆண்கள் துவிச்சக்கர வண்டி, வழ.இலக்கம் AR/137/17 சான்றுப் பொ.இல. PR/94/16 சான் றுப் பொருள் விபரம் NPVE 4259 இலக்க டிஸ்கவரி மோட்டார் சைக்கிள், வழ.இலக்கம் AR/138/17 சான்றுப் பொ.இல.PR/536/16 சான்றுப் பொருள் விபரம் WPJR 7358 இலக்க HERO HONDA வர்க்க மோட்டார் சைக்கிள்.

மறுதவணை-
16.05.2017

வழ.இலக்கம் AR/142/17 சான்றுப் பொ.இல.PR/99/16 சான்றுப் பொருள் விபரம் NPUV 5643 இலக்க HERO வர்க்க மோட்டார் சைக்கிள், வழ.இலக்கம் AR/143/17 சான்றுப் பொ. இல.PR/79/16 சான்றுப் பொருள் விபரம் 7712899 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கரவண்டி, வழ. இலக்கம் AR/143/17 சான்றுப் பொ.இல.PR/196/16 சான்றுப் பொருள் விபரம் இலக்க மற்ற கறுப்புநிற துவிச்சக்கர வண்டி, வழ. இலக்கம் AR/143/17 சான்றுப் பொ.இல. PR/143/16 சான்றுப் பொருள் விபரம் இலக்கமற்ற மவுண்டன் வர்க்க துவிச்சக்கர வண்டி, வழ.இலக்கம் AR/143/17 சான்றுப் பொ.இல .PR/144/16 சான்றுப் பொருள் விபரம் இலக்கமற்ற லுமாலா வர்க்க துவிச்சக்கர வண்டி.

மறுதவணை-
18.05.2017

வழ.இலக்கம் 26436 சான்றுப் பொ.இல.AR/84/12 சான்றுப் பொருள் விபரம் இலக்க,ம் பெயர் இல்லாத Mofed மோட்டார் சைக்கிள்.

மறுதவணை -
24.04.2017

வழ.இலக்கம் AR/211/17 சான்றுப் பொ.இல.PR/421/16 சான்றுப் பொருள் விபரம் இலக்கம் தெளிவற்ற மோட்டார் சைக்கிள், வழ.இலக்கம் AR/212/17 சான்றுப் பொ.இல.PR/132/16 சான்றுப் பொருள் விபரம் NPXD 2770 சபாரி வர்க்க மோட்டார் சைக்கிள், வழ. இலக்கம் AR/213/17 சான்றுப் பொ.இல. PR/80/15 சான்றுப் பொருள் விபரம் NPMF 7978 TVS வர்க்க மோட்டார் சைக்கிள், வழ.இலக்கம் AR/214/17 சான்றுப் பொ. இல. PR/62/16 சான்றுப் பொருள் விபரம் NPTG 7641 HERO வர்க்க மோட்டார் சைக்கிள், வழ.இலக்கம் AR/215/17 சான்றுப் பொ.இல.PR/197/16 NPVA 6062 பல்சர் வர்க்க மோட்டார் சைக்கிள்.

மறுதவணை-16.05.2017 என பதிவாளர் அறிவித்துள்ளார். (இ)


## விற்பனைக்கு / குத்தகைக்கு

2-ம் குறுக்குத்தெரு பருத்தித்துறையில் (பருத்தித்துறை மத்திய சந்தைக்கு பின்புறமாக) $2^1/_2$ பரப்புக் காணியுடன் கூடிய இரண்டு கடையுடன் கூடிய பேக்கரி விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும்.

நிறுவனமாகவும் அல்லது பேக்கரியாகவும் பாவிக்கும் வகையில் உள்ளது.

விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
0774215879 (C - 7614)



## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா:5 சூரி செவ் 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L/ அவுஸ்திரேலியா<br>தொ.இ: B/6986 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 38செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/4321 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 80செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்A/L/தனியார் தொழில்<br>தொ.இ: B/6987 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 21<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/4329 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை<br>கி.பா: 25செவ் 7 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ்<br>தொ.இ: B/6988 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 28சூரிசெவ் 4 இல்<br>உயரம்: 166cm<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/4330 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>தகைமை/தொழில்:O/L/ சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/6989 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>கி.பா: 70செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BEd/ஆசிரியர்<br>தொ.இ: G/4331 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.





யாழ்.இந்திய துணைத் தூதுவராலயத்தின் அனுசரணையில்
வட இலங்கைச் சங்கீத சபை வழங்கும்

## சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 170 ஆவது இசை ஆராதனை - 2017

காலம்: 26.02.2017 ஞாயிற்றுக்கிழமை
இடம்: வட இலங்கைச் சங்கீத சபை
தற்பரானந்தன் அரங்கு, மருதனார் மடம்
நேரம்: காலை 9.00மணி முதல் பிற்பகல் 1.00மணி வரை

தலைவர்
திரு.ந.தெய்வேந்திரராஜா அவர்கள்
யாழ். வலயக்கல்வி பணிப்பாளரும்
வட இலங்கைச்சங்கீத சபைத் தலைவரும்
பிரதம விருந்தினர்கள்
கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்
உயர்திரு.சோ.மாவை சேனாதிராஜா அவர்கள்
தலைவர் தமிழரசுக்கட்சி
கௌரவ A.நடராஜன் அவர்கள்
யாழ்.இந்தியத்துணைத் தூதுவர்
சிறப்பு விருந்தினர்
திருமதி.அருளீஸ்வரி வேதநாயகம்
ஓய்வு நிலை யாழ். வலயக் கல்விப்பணிப்பாளரும்
முன்னாள் வடஇலங்கைச் சங்கீத சபைத் தலைவரும்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வட இலங்கைச் சங்கீத சபை,
மருதனார்மடம் (சி-1633)

சி.சிவராஜன்
செயலாளர்.





இனுவில் திருப்பதி
அருள்மிகு
திருவேங்கடேஸ்வரர் ஆலய
இலட்சார்ச்சனை விழா -2017
15.02.2017 - 24.02.2017 வரை

தினமும் மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி 7.30 மணிக்கு நிறைவடையும்.
9 ஆம் நாள் இன்று (23.02.2017) விஷ்ணு சகஸ்ர நாமஹோமம்-சர்வசித்தி
சைவப்புலவர் சைவநெறி காவலர் நித்திய தசிதரன் அவர்கள்
விடயம்-விஸ்வரூபம்-மகாவிஷ்ணு
சொற்பொழிவு ஒருங்கமைப்பு (7660)
நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபம், நல்லூர்.
திரு.சண்முகராஜா கணேசலிங்கம், தர்மகர்த்தா
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
021 224 2300



## கிளிநொச்சி உருத்திரபுரம்
## உருத்திரபுரநாயகி உடனுறை
## உருத்திரபுரீச்சரர் சிவாலய

## மகா சிவராத்திரி விழா – 2017.02.24





உருத்திரபுரீச்சரர் அடியார்களே!

தமிழ் மன்னன் இராவணேஸ்வரனால் பலகோடி லிங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்ட சிவபூமி என திருமூலரால் அழைக்கப்பட்ட இலங்கைத் திருநாட்டில் ஏழு ஈச்சரங்களில் ஒன்றான வடபால் கிளிநொச்சி மாநகரில் தொன்மையும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க உருத்திரபுரம் உருத்திரபுரநாயகி உடனுறை உருத்திரபுரீச்சரப் பெருமானின் மகா சிவராத்திரி விழா நிகழும் மங்கலகரமான துர்முகி ஆண்டு மாசித் திங்கள் 12ஆம் நாள் (2017.02.24) வெள்ளிக்கிழமை நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அன்றைய நாளில் சிவனடியார்கள் அனைவரும் ஆசார சீலர்களாக ஆலயத்திற்கு வருகை தந்து நடைபெறும் விசேட பூசைகளில் கலந்து அவனருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மாலை பிரதோச பூசை நடைபெற்று தொடர்ந்து

நிகழ்வுகள் தவத்திரு கணேசானந்த மகாதேவா சுவாமிகள் (மகாதேவா ஆச்சிரமம், ஜெயந்திநகர்) அவர்களின் நல்லாசியுடன் ஆரம்பமாகி நான்கு சாமப் பூசைகளும் நடைபெறும்.

பூசைவிபரம்

1ம் சாமம் : ஸ்நபனாபிடேகத்துடன் 6.00 மணிமுதல் 8.00 மணிவரை
2ம் சாமம் : ஸ்நபனாபிடேகத்துடன் 9.00 மணிமுதல் 10.30 மணிவரை
3ம் சாமம் : லிங்கோற்பவர் பூசை, ஸ்நபனாபிடேகத்துடன் 11.00 மணிமுதல் 1.00 மணிவரை (மேற்படி பூசை செந்தமிழில் நடைபெறும்)
4ம் சாமம் : உருத்திராபிடேகத்துடன் காலை 4.00 மணிமுதல் 5.30 மணிவரை

பாடசாலை மாணவ மாணவிகளின், மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லச்சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.
பூசைகள் முடிவுற்றதும் எம்பெருமான் வீதியுலா வரும் காட்சியுடன் விழா நிறைவுபெற்று மகேஸ்வர பூசை (அன்னதானம்) நடைபெறும்.

இங்ஙனம் : ஆலய அறங்காவலர் சபையினர், உருத்திரபுரீச்சரம், உருத்திரபுரம், கிளிநொச்சி.

அனைவரும் வருக! அவனருள் பெறுக! "இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

# "இராணுவமே விலகிடு எம் நிலத்தை விட்டு"

# காணிகளை மீட்கும் போராட்டங்களுக்கு ஆதரவாக

# முல்லை.மாவட்ட செயலகம் முன்பாக திரண்டனர் மக்கள்







கேப்பாப்பிலவு பிலவுக் குடியிருப்பில் கடந்த 23 தினங்களாக காணி விடுவிப்புக்காக போராடி வரும் மக்களுக்கு ஆதரவாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக புதுக்குடியிருப்பு மையப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை வெளியேறுமாறு கோரி கடந்த 20 நாட்களாக போராடி வரும் மக்களுக்கு ஆதரவாகவும் நேற்று முற்பகல் 10 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக மக்கள், அரசியல் பிரமுகர்கள் ஆகியோரினால் மாபெரும் கவனயீர்ப்பு வீதிமறியல் போராட்டம் முன்னெடுக்கப்பட்டன.

சுமார் 2 மணித்தியாலங்களுக்கு மேலாக தொடர்ச்சியாக முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு வீதியை மறித்து போராடிய மக்கள் வடக்கு, கிழக்கில் இராணுவத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டுமெனவும் மேலும் பல கோரிக்கைகளை முன்னெடுத்து போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் "கையளி...எம் நிலத்தை எம்மிடம் கையளி இலங்கை அரசே!, கேப்பாப்பிலவில் மக்களே வீதிகளில் இராணுவமோ காணிகளில்..., இராணுவமே விலகிடு எம் நிலத்தை விட்டு, நல்லாட்சியில் தமிழர் நிலத்தை காவு கொள்ளாதே, பிலவுக்குடியிருப்பும் புதுக்குடியிருப்பும் உனக்கென்ன சீதனமா இராணுவமே" ஆகிய பதாகைகளை ஏந்தியவாறு கோசங்களையும் எழுப்பியவாறும் கலந்துகொண்டிருந்தனர்.

இதில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன், வடக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான துரவிகரன், க.சிவநேசன், ஆ.புவனேஸ்வரன், எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலருடன் பல்வேறு இடங்களில் இருந்து வருகை தந்த மக்களும் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் தங்கள் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் கையளித்தனர்.(2-281)




# புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக நேற்று மக்கள் கவனயீர்ப்பு





புதுக்குடியிருப்பு மையப் பகுதியிலுள்ள இராணுவத்தை வெளியேறக் கோரியும் பிலவுக் குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாகவும் தொடர்ச்சியாக 20 நாளாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக நேற்றும் காணி விடுவிப்பு போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் 9 ஆவது நாளாக சுழற்சி முறையில் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் குறித்த பகுதியில் திரண்ட பல நூற்றுக்கணக்கான மக்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள்,

"சொத்து இழந்தோம், சுகம் இழந்தோம், சொந்த இல்லத்தைக்கூட நாம் இழந்தோம், பாடத்தை படிக்க பள்ளிக்குச் செல்லும் பாலகப் பருவத்திலே பாதையில் நீதிவேண்டி நின்றோம், நல்லாட்சியில் தமிழர் நிலத்தை காவுகொள்ளாதே" ஆகிய பதாகைகளை ஏந்தியவாறும் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றைய சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் இரண்டாவது நாளாகவும் தனது பாராளுமன்ற அமர்வை புறக்கணித்து பாராளுமன்ற உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் பங்கேற்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.(2-28)

## தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் குடியிருக்கும் காணிகளின் விபரங்கள் கோரி 180 குடும்பங்கள் விண்ணப்பிப்பு

தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் தாம் குடியிருக்கும் காணிகளின் விபரங்களை கோரி 180 குடும்பங்கள் வவுனியா பிரதேச செயலகத்தில் விண்ணப்பித்துள்ளன. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இம் மாதம் 3 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் கடந்த 15-27 வருடங்களாக தாம் நிரந்தரமாக குடியிருக்கும் காணி உரிமையாளர்களின் விபரங்களைக் மக்கள் கோரியுள்ளனர். நீண்ட காலமாக இக் காணிகளில் மக்கள் குடியிருக்கின்ற போதும் அவர்களது காணிகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் அப்பகுதி காணிகள் யாருடைய பெயரில் உள்ளன..?, நீண்ட காலமாக அதில் வசிக்கும் தமக்கு அக் காணிகள் வழங்கப்படாமைக்கான காரணம் என்ன..? என தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பங்களைப் பெற்று 180 குடும்பங்கள் வவுனியா பிரதேச செயலகத்தில் விபரங்களைக் கோரியுள்ளனர்.

அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பின் ஏற்பாட்டில் வவுனியாவின் நெளுக்குளம், ஊர்மிளாக்கோட்டம், காத்தான்கோட்டம், ஈசன் கோட்டம் அம்பிகைபாலன் கோட்டம், தாஸ்கோட்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே இவ்வாறு விண்ணப்பங்களைக் கையளித்துள்ளனர்.

அதனைப்பெற்றுக்கொண்ட வவுனியா பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் அ.ஜெயரட்ணம், 14 நாட்களுக்குள் இது தொடர்பில் அறியத்தருவதாக கூறி, அவர்களது விண்ணப்பங்களைப் பெற்றுக் கொண்டமைக்கான பதில் கடிதத்தை வழங்கியுள்ளார். (2-250)

**பள்ளிச்சிறார்கள் வீதியில்; இராணுவம் எமது காணியில்**

# பிலவுக்குடியிருப்பு விமானப்படை முன்பாக மக்கள் கோசங்கள் எழுப்பி போராட்டம்





எமது உறவுகள் என்ற எண்ணம் இளைஞர்களுக்கு இருக்குமானால் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்க கேப்பாப்பிலவில் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை ஒன்றுகூடுமாறு நேற்றைய தினம் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கேப்பாப்பிலவு பிலவுக் குடியிருப்பில் இடம்பெற்று வரும் தொடர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பிலவுக்குடியிருப்பு இராணுவ முகாமிற்கு முன்னால் நேற்று நண்பகல் 12 மணியளவில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

விமானப்படையினர் நிலைகொண்டுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்கள் இன்று 22 ஆவது நாளாக தொடர்போராட்டத்தை முன்னெடுத்தனர்.

கடந்த 31 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தீர்வின்றிய நிலையில் நேற்றும் தொடர்ந்தது. குறித்த போராட்டத்திற்கு பல்வேறு தரப்பினரும் ஆதரவு தெரிவித்து வருவதுடன், கவனயீர்ப்பு போராட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந் நிலையில் நேற்று நண்பகல் விமானப்படையினரின் முகாமிற்கு முன்னால் ஒன்று திரண்ட மக்கள் காணிகளிலிருந்து விமானப்படையினரை வெளியேறுமாறு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் எதிர்வரும் 25 ஆம் திகதி பிலவுக் குடியிருப்பில் இளைஞர்களை ஒன்று கூடி போராட்டத்திற்கு ஆதரவு தருமாறு போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

இதேவேளை தமது காணிகள் பொருளாதார வளம் நிறைந்த காணிகள் என்பதாலேயே தமது காணிகளை விமானப்படையினர் கையளிப்பதற்கு மறுப்பதாக போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (2-281)

# 40 கிலோ கேரள கஞ்சாப் பொதிகள் மீட்பு

(மல்லாவி )

தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்து ஒன்றில் கேரளக் கஞ்சா 2 கிலோவுடன் பயணித்த சந்தேக நபர் ஒருவரை பொலிஸார் விசேட வீதிப் பரிசோதனையின்போது கைது செய்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னார்பொலிஸ்நிலைய போதைப்பொருள் தடுப்பு பிரிவுப் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து தலைமன்னாரில் இருந்து மன்னார் ஊடாக கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பேருந்தை கடந்த 20ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 11 மணியளவில் மன்னார் தாராபுரம் பகுதியில் வைத்து சோதனை மேற்கொண்ட போது பேசாலை பகுதியில் இருந்து கொழும்பிற்குச் சென்ற நபர் ஒருவரின் உடைமையில் இருந்து சுமார் 2 கிலோ கிராம் எடை கொண்ட கேரள கஞ்சாப் பொதியினை பொலிஸார் மீட்டுள்ளனர்.

கைதான சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது அவரது வீட்டில் பதுக்கி வைத்திருந்த மேலும் 38 கிலோ கிராம் எடை கொண்ட கேரளக் கஞ்சாப் பொதிகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட 40 கிலோ கிராம் எடை கொண்ட குறித்த கஞ்சாப் பொதிகள் இலங்கை பெறுமதிக்கு அமைவாக சுமார் 40 இலட்சம் ரூபாய் பெறுமதி உடையது என தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் கைப்பற்றப்பட்டுள்ள தடயப் பொருட்களுடன் சந்தேக நபரை மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக மன்னார் பொலிஸ் நிலைய தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-15)

# இரு மாதங்களுக்குள் வவுனியாவில் 96 பேர் டெங்கு நோயால் பாதிப்பு

வவுனியாவில் 96 பேர் டெங்குநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். வவுனியாவில் கடந்த இரண்டு மாதங்களுக்குள் 96 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா மேற்பார்வை சுகாதாரப் பொதுப்பரிசோதகர் கணபதிப்பிள்ளை மேஜெயா சூரியன் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

2017 ஜனவரி மாதம் முதல் பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 96 பேர் டெங்குநோயால் பாதிக்கப்பட்டு வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.


இந்த விடயத்தில் அக்கறை கொண்ட வவுனியா சுகாதார வைத்திய அபிவிருத்தி உத்தியோகத்தர் பகுதி (பொதுச்சுகாதாரப் பரிசோதகர், மலேரியா தடை இயக்கம், பூச்சி ஆய்வாளர்கள் ) மேற்கொண்ட விசேட நடவடிக்கை காரணமாக கடந்த வாரம் 11 பேரும் இவ்வாரம் 24 பேருக்கும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக வைத்திய பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

அரச திணைக்களங்கள், விடுதிகள், தனியார் விடுதிகள்,பொதுமக்கள் அனைவரும் தத்தமது சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

மாறாக அசுத்தம் பேணும் சந்தர்ப்பத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.(2-250)




# பரவிப்பாஞ்சான் மக்களுடன் கலந்துரையாடினார் ஆனந்தசங்கரி




(மல்லாவி)

கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் மக்கள் தமது பூர்வீக காணியை மீட்கும் போராட்டத்தை நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தனர்.

இரவு பகலாக தொடர்கின்ற குறித்த போராட்டத்துக்கு அரசியல்வாதிகளின் ஆதரவு பெருகி வருகின்றது.

இந்நிலையில் நேற்றுக் காலை தமிழர் விடுதலை கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி மக்களை சந்தித்து கலந்துரையாடியதுடன் ஆதரவையும் வழங்கினார்.

இதேவேளை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளையும் சந்தித்தார் ஆனந்தசங்கரி.

(2-15-312)

# மகா சிவராத்திரியை முன்னிட்டு விசேட பூஜைகள், நிகழ்வுகள்

மகா சிவராத்திரியை முன்னிட்டு வவுனியா கோவில் குளம் அருள்மிகு ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவிலில் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக் கிழமை விசேட பூசைகளும் விசேட நிகழ்வுகளும் நடை பெறவுள்ளன.

அன்றைய தினம் காலை 6 மணி முதல் மறுநாள் காலை 5.30 மணி வரையில் கும்பப் பூசை, காலை பூசை, உச்சிக் கால பூசை, அபிஷேகம், அர்ச்சனை, வசந்த மண்டபப் பூசை என்பன நடைபெறவுள்ளன.

சிவராத்திரியையொட்டி விசேட அருளுரைகள், சிறப்புரைகள், பண்ணிசை, நாட்டிய நாடகம், பரதநாட்டியம், நாடகம் மங்கள இசை என்பனவும் இடம்பெறவுள்ளன.

நாளை காலை 9 மணி முதல் அடியார்களுக்கு சமய தீட்சை வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்திருக்கின்றனர்.

லிங்கோற்பவருக்கான அபிஷேக காலத்தில் பால் குடம் எடுக்க விரும்புவர்கள் முன்கூட்டியே ஆலயத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை மாலை 6 மணி முதல் மறுநாள சனிக்கிழமை காலை 6 மணி வரையும் ஆலயத் திற் கான விசேட பேருந்து சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. (2)

# எட்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது உணவுத்தவிர்ப்பு



புதுக்குடியிருப்பு மையப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தை வெளியேறுமாறு கோரியும் கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாகவும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக பொதுமக்கள் முன்னெடுத்து வரும் காணி விடுவிப்பு போராட்டம் நேற்று 20 ஆவது நாளை எட்டியுள்ள அதேவேளை சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டம் நேற்று எட்டாவது நாளாகவும் தொடர்ந்தது. (படம்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)

# ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுங்கள் அரசியல் பிரதிநிதிகளிடம் மக்கள் வலியுறுத்து

(பரந்தன்)

கிளிநொச்சி பரவிப் பாஞ்சான் பகுதியில் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்துள்ள தமது பூர்வீக காணிகளை விடுவிக்கக் கோரி காணி உரிமையாளர்களினால் பரவிப்பாஞ்சான் முகாம் முன்பாக நேற்று மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம், வலிந்து காணாமல்காணாமற்போனோர், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்களின் விடுதலை ஆகியன தொடர்பில் தெளிவான தகவல்களை வெளிப்படுத்தக் கோரி உறவினர்களால்நேற்று மூன்றாவது நாளாகவும் கிளிநொச்சி கந்தசாமி ஆலய முன்றலில் முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு போராட்டம் ஆகியன இரவு பகலாக தொடர்கின்றது.

மேற்படி இரண்டு போராட்டங்களிலும் ஈடுபட்டு வரும் மக்கள், தாங்கள் தங்களின் அரசியல் பிரதிநிதிகளால் ஏமாற்றப்பட்டுவிட்டதாகவும், காணி,காணாமல் ஆக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகளின் விடயங்களில் காலத்திற்கு காலம்வெறும்வாக்குறுதிகளை வழங்கி விட்டு அவ்வாறே இருந்து விடுகின்றார்களே தவிர அதன் பின்னர் அதற்கான எவ்வித ஆக்க பூர்வமான நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை என்றும் தெரிவித்த மக்கள் எங்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாக கூறி எங்களுடன் வந்து ஒரு சில மணித்தியாலயங்கள் இருந்து விட்டுச் செல்வதனை தாம் விரும்பவில்லை என்றும் கடந்த காலங்கள் போன்று அவ்வாறு நடந்து கொள்ளாது ஆக்கபூர்வமாக செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் அரசியல் பிரதிநிதிகளிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டத்தில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான செந்தில்நாதன், மயூரன், மயில்வாகனம், தியாகராஜா, இந்திரராஜா ஆகியோரும் பரவிப்பாஞ்சான் மக்களிடம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின்தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்தேசிய மக்கள் முன்னணி செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் நேற்று முன்தினம் கவனயீர்ப்பு போராட்டங்கள் நடைபெறும் இடங்களுக்கு வருகைதந்து தங்களின் ஆதரவை வழங்கியதுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர். (2-312-15)

# ஒரு வருடம் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் நால்வர் குடும்பங்களுடன் இணைப்பு



வவுனியாபூந்தோட்டம்புனர்வாழ்வு நிலையத்தில் ஒரு வருட கால புனர்வாழ்வு பெற்று வந்த முன்னாள் விடுதலைப் புலிகள் 4 பேரை நேற்றுக்காலை சமூகத்துடன் இணைத்து வைக்கும் நிகழ்வில் அவர்களது குடும்பங்களுடன் இணைத்து வைக்கப்பட்டனர்.

வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையப் பணியகத்தில் பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையப் பணிப்பாளர் கேணல் ஹமில்டோன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக புனர்வாழ்வு நிலைய பயிற்சி பொறுப்பாளர் கேணல் சித்திரகுணதுங்க, பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த குணசேகர, புனர்வாழ்வு நிலைய பின்னாய்வு அதிகாரி ஏகன் பெர்னான்டோ, பூந்தோட்டம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமயத் தலைவர், முன்னாள் போராளிகளின் குடும்ப உறுப்பினர்கள், படையினர், பொலிஸார், விமானப் படையினர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

புனர்வாழ்வு நிலையத்தில் ஒருவருட புனர்வாழ்வு பெற்ற மட்டக்களப்பைச் சேர்ந்த தேவராஜா ஜெகதீபன் நங்காசாமி நந்தகுமார் யோசப் முன்டாஸ் வில்லியன், கனேசன் துசாந்தன் ஆகிய நான்கு பேருமே தமது குடும்பத்தினருடன் இணைத்து வைக்கப்பட்டவர்களாவர். (2-250-15)

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நாளை தொடக்கம் வவுனியாவில் தொடர் உணவுத் தவிர்ப்பு

(மல்லாவி )

வவுனியா மாவட்டத்திலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டம் ஒன்றினை நாளை வெள்ளிக்கிழமை காலை முதல் மேற் கொள்வுள்ளதாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் வவுனியா மாவட்ட சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

இராணுவத்திடம் கையளிக்கப்பட்டும் மற்றும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தினர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்திருந்த தொடர் போராட்டத்தை முன்னெடுப்பது தொடர்பான கலந்துரையாடலில் அனைத்து தரப்பினரையும் அழைத்து கலந்தாலோசித்த போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தொடர் உணவு தவிர்ப்பினை மேற் கொண்ட போது பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் நேரில் சென்று வழங்கிய வாக்குறுதியையடுத்து உணவு தவிர்ப்பில் ஈடுபட்ட உறவுகள் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தினை கைவிட்டிருந்தனர்.

எனினும் கொழும்பில் அரச தரப்பினருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் எவ்வித முடிவும் எட்டப்படாத நிலையிலே நாளை வெள்ளிக்கிழமை காலை முதல் தொடர்ச்சியாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக காணாமல் போனோரின் உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

வவுனியாவில் தொடர் போராட்டம் ஒன்றினை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# மாசி மாத இராசி பலன்கள்

## 13.02.2017-13.03.2017



சேமிப்பிலேயே குறிக்கோளாக இருக்கும் கும்ப இராசி அன்பர்களே!

உங்களின் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசிநாதன் சனி 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். எனவே தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும். புதிய நபர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உயரும். அதிகப்படியான இலாபம் கிடைத்து அதன் மூலம் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும்.

குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிவதால், இதுவரை இருந்த இடர்பாடுகள் அகலும். வாங்கிய கடனைக் கொடுக்க வழிபிறக்கும். வாடகைக் கட்டடத்தில் நடக்கும் தொழிலை, சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் யோகம் உண்டு. புதிய முதலீடுகள் செய்ய விரும்புபவர்களுக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

உங்கள் இராசியைப் பொறுத்தவரை 2,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவரது பார்வை உங்கள் இராசியில் பதிகின்றது. தன லாபாதிபதியின் பார்வை பதிவதால் திடீர் தன இலாபம் வர வாய்ப்பு உண்டு. நீண்ட நாட்களாக வங்கிச் சலுகைகளை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு இப்பொழுது அது கைகூடும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரியின் ஆதரவோடு மிகச் சிறந்த வளர்ச்சி காண்பர். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும் நேரமிது.

உங்கள் இராசியில் சப்தமாதிபதி சூரியனோடு, கேது இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே கேது பலத்தால் தடைகள் ஏற்படத்தான் செய்யும். தைரியத்தையும், தன்னம்பிக்கையையும் தக்கவைத்துக் கொள்வது நல்லது. பெற்றோரின் உடல் நலத்தில் கவனம் தேவை.

ராகு-கேதுக்களின் ஆதிக்கம் மேலோங்கியிருக்கும் நேரமிது. எனவே, ஜென்ம கேது, சப்தம ராகுவிற்கு சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை மேற்கொள்வது நல்லது.

அப்பொழுது உங்கள் முயற்சியில் ஏற்பட்ட குறுக்கீடுகள் அகலும். தளர்ச்சி நீங்கித் தகுந்த பலன் கிடைக்கும். வளர்ச்சி நினைக்க இயலாத அளவு உயரும்.

இந்த மாதம் சிவராத்திரி விழா வருகின்றது. சூரியன் உங்கள் இராசியில் இருக்கும் பொழுது சிவனை வழிபடுவது செயற்பாடுகளில் வெற்றியைக் கொடுக்கும். எனவே

## வழிபாட்டால் குறுக்கீடுகள் அகலும் நேரம்!

அதற்குரிய சிறப்பு தினமான சிவராத்திரியன்று சிவபெருமான் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள்.

கும்ப புதனும், மீன புதனும்!

பெப்ரவரி 16ஆம் திகதி கும்ப இராசிக்குப் புதன் செல்கிறார். பஞ்சம அஷ்டமாதிபதி இராசியில் சஞ்சரிக்கும் பொழுது பூர்வீகச் சொத்துத் தகராறுகள் அகலும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். வீடு மாற்றங்களும் நாடு மாற்றங்களும் விருப்பம் போல் நிறைவேறும். மார்ச் 5ஆம் திகதி மீனத்திற்கு புதன் செல்கிறார். அங்கு நீச்சம் பெறும் புதன் நன்மையையே வழங்குவார். அஷ்டமாதிபதி நீச்சம் பெறுவது




ஒருவழிக்கு யோகம்தான். ஆரோக்கியம் சீராகும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் ஆதாயம் கிடைக்கும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள்.

குருவின் வக்ர இயக்கம்!

பெப்ரவரி 22ஆம் திகதி துலாத்தில் குரு வக்ரம் பெறுகிறார். பிறகு மார்ச் 10ஆம் திகதி கன்னி இராசியில், குரு வக்ர இயக்கத்தில் வருகிறார். இந்த வக்ர காலங்கள் அவ்வளவு நன்மையை வழங்காது. விரயத்திற்கு மேல் விரயம் வந்து கொண்டேயிருக்கும். வீட்டு விவகாரங்கள் தலைதூக்கலாம். வரவைக் காட்டிலும் செலவு கூடும்.

வருமானப் பற்றாக் குறையின் காரணமாக கைமாற்று வாங்கும் சூழ்நிலை கூட உருவாகலாம். உறவினர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

மேட செவ்வாயின் சஞ்சாரம்!

பெப்ரவரி 26ஆம் திகதி மேட இராசிக்குச் செவ்வாய் செல்கிறார். சகாய ஸ்தானாதிபதியான செவ்வாய் சொந்த வீட்டில் பலம்பெறும் பொழுது எண்ணற்ற நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் வந்துசேரும். சகோதர ஒற்றுமை பலப்படும்.

இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு வழிபாடும், சர்ப்ப கிரக வழிபாடும் செய்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

நல்ல வாய்ப்புகள் நாடிவரும் மாதம் இது. இல்லத்தில் உள்ளவர்களின் ஒத்துழைப்பு கூடுதலாகக் கிடைக்கும். தொழில், உத்தியோகத்தில் இருந்த தடைகள் அகலும். தொலை தூரத்திலிருந்து நல்ல தகவல் வந்துசேரும். கடை திறப்பு விழா, கட்டடத் திறப்பு விழாவில் கவனம் செலுத்துவீர்கள். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவோடு ஊதிய உயர்வு கிடைக்கலாம். உறவினர் பகை மாறும். சிவன், உமாமகேஸ்வரர் வழிபாடு சிறப்பை வழங்கும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விடாப்பிடியாகச் செயற்பட்டு வெற்றிகளை வரவழைத்துக் கொள்ளும் மீன இராசி அன்பர்களே!

உங்களின் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் குருபகவான் அஷ்டமத்தில் அடியெடுத்து வைக்கிறார். எனவே அலைச்சல் கூடும். ஆதாயம் குறையும். சிறுசிறு பிரச்சினைகள் இல்லத்தில் தலைதூக்கும். எதைச் செய்ய நினைத்தீர்களோ அதை உடனடியாகச் செய்ய முடியவில்லையே என்ற கவலை மேலோங்கும்.

உங்கள் இராசிக்கு அதிபதியானவர் குரு. 3,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். குரு வீட்டில் சுக்ரனும் சுக்ரன் வீட்டில் குருவும் பரிவர்த்தனை பெற்றிருக்கிறார்கள். இந்தப் பரிவர்த்தனை யோகம், ஓரளவுதான் நன்மை செய்யும். அஷ்டமாதிபதி பரிவர்த்தனை என்பது அவ்வளவு நன்மையை அளிக்காது.

பணவரவு திருப்திகரமாக இருந்தாலும் கூட, மனநிம்மதி குறைவாகவே இருக்கும். தனாதிபதி செவ்வாய் உங்கள் இராசியிலேயே இருக்கிறார். காரியங்கள் கடைசி நேரத்தில் கைகூடி வரலாம். சூரியபலம் குறைவாக உள்ளது. எனவே அரசு வழிச் சலுகைகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படலாம். அதிக முயற்சி எடுத்தே ஒருசில காரியங்களை முடிக்கும் சூழ்நிலை உருவாகும். குரு வக்ர நிவர்த்தியாகும் வரை சற்றுப் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்.

அதுமட்டுமல்லாமல் எதை நீங்கள் செய்தாலும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. வீண் விரோதங்களை வளர்த்துக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ளுங்கள். வீடுகட்டுதல், நூதனப் பொருட்கள் வாங்குதல், பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி செலவிடுதல் போன்றவற்றில் ஈடுபாடு செலுத்துவதன் மூலம் மகிழ்ச்சியை வரவழைத்துக் கொள்ள இயலும். சனியின் பலம் நன்றாக இருக்கிறது. 9ஆம் இடத்தில் சனி சஞ்சரிப்பதால், தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல்கள் அகலும். முன்னோர் சொத்துகளில் முறையான பங்கீடுகள் கிடைக்கும்.

கொடுக்கல்- வாங்கலில் ஒழுங்கு ஏற்படவும், வளர்ச்சி கூடவும், தேங்கிய காரியங்கள் சுறுசுறுப்பாக நடைபெறவும் பரிகா

## ஆதாயம் குறைவு! அலைச்சல் அதிகம்!

ரங்கள் செய்வது நல்லது. தேசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளையும் மேற்கொள்ளலாம். அறுபத்து மூவர் வழிபாடும், சிவராத்திரி நாளில் சிவன் வழிபாடும் நன்மையைத் தரும்.

கும்ப புதனும், மீன புதனும்!

பெப்ரவரி 16 ஆம் திகதி கும்ப இராசிக்குப் புதன் செல்கிறார். 4,7 இற்கு அதிபதி 12இல் மறைவது யோகம்தான். இடம், பூமியால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். இல்லம் வாங்கிக் குடியேறும் எண்ணம் நிறைவேறும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். திருமண முயற்சிகளில் இருந்த தடை அகலும். குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

மார்ச் 5 ஆம் திகதி மீனத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். அங்கு புதன் நீச்சம் பெறுகின்றார். இந்தக் காலத்தில் சொத்து விற்பனையில் இருந்த தடை அகலும்.




வாங்கிய சொத்தைக் கொடுத்துவிட்டு, சிலர் புதிய சொத்துகளை வாங்குவதில் ஆர்வம் காட்டுவர்.

குருவின் வக்ர இயக்கம்!

பெப்ரவரி 22 ஆம் திகதி துலாம் இராசிக்குள் குரு வக்ரம் பெறுகிறார். அதன் பிறகு மார்ச் 10 ஆம் திகதி கன்னி இராசிக்குள் குரு வக்ரம் பெறுகிறார். இந்த வக்ர காலம் மிகமிக கவனமாக செயற்பட வேண்டிய காலமாகும். இராசிநாதன் வக்ர இயக்கத்தில் இருக்கும்பொழுது ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். குடும்பத்தில் ஒருவர் மாறி ஒருவருக்கு வைத்தியச் செலவுகள் ஏற் படுகிறதே என்று கவலைப்படுவீர்கள். எதிலும் கவனமுடன் இருப்பது நல்லது. பல காரியங்களில் தாமதம் ஏற்படும். உறவினர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்ள மாட்டார்கள்.

பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகளைச் சமாளிக்க முக்கிய புள்ளிகள் கைகொடுத்து உதவுவர்.

மேட செவ்வாயின் சஞ்சாரம்!

பெப்ரவரி 26ஆம் திகதி செவ்வாய் மேடத்திற்கு செல்கிறார். தனாதிபதி பலம்பெறும் இந்த நேரம், உங்களுக்கு யோகமான காலமாகும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வரவு திருப்தி தரும். தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். இந்த மாதம் வியாழக்கிழமை தோறும் குருபகவான் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!

குடும்பச்சுமை கூடும் மாதம் இது. மனநிம்மதி குறையக்கூடும். கடுமையாக உழைத்தாலும் காரியங்கள் முடிவடைவதில் தாமதம் ஏற்படலாம்.

அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்குமா? என்பது சந்தேகம் தான். எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் உங்களுக்கு இருப்பதால், எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. கணவன்-மனைவி இருவரும் அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதி கிடைக்கும். பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது. மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக் கொள்ள வாய்ப்புகள் கைகூடி வரும்.

குருவழிபாடும், குலதெய்வ வழிபாடும் நன்மையை வழங்கும். பணவரவு திருப்திகரமாக இருந்தாலும் உடனுக்குடன் செலவாகிவிடும்.

(முற்றும்)

# பிம்ப அரசியலிலிருந்து விடுபட வேண்டிய தருணம்

தாமதமாக வந்திருந்தாலும் சொத்துக் குவிப்பு மேல் முறையீட்டு வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று. இதனை உணர்ந்து, இத்தீர்ப்பை முன் வைத்து உடனடியாக ஓர் அரசியல் விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தை வளர்த்தெடுக்க வேண்டும். இப்போதைக்கு பொதுமக்கள் இத்தீர்ப்பை மிகவும் எளிமைப்படுத்தி புரிந்து வைத்திருக்கின்றனர்.

தமிழக முதல்வராகப் பொறுப்பேற்கத் துணிந்த சசிகலாவின் அகந்தையை அடக்கி அவரையும் அவருடைய உறவினர்களையும் (சுதாகரன், இளவரசி) சாட்டையைச் சுழற்றி சிறைக்கு விரட்டிய "நாயகன்" என்றே இத்தீர்ப்பை அவர்கள் பார்க்கின்றனர்.


அதுவே அவர்களுக்கு உடனடிப் பரவசத்தையும் மன நிம்மதியையும் அளிக்கிறது. அதனாலேயே ஊடகங்களும் இந்த உணர்வுகளுக்கு மட்டும் பிரத்தியேக முக்கியத்துவம் கொடுத்துவருகின்றன. அடுத்தடுத்து நிகழும் அரசியல் பரபரப்புகளும்கூட இதற்கொரு காரணம்.

இந்த ஆரவாரத்தில், நாம் பெரிதும் விவாதிக்க மறக்கும் அல்லது விவாதிக்க மறுக்கும் ஒரு முக்கியமான அம்சம் இது: இந்த வழக்கின் முதன்மையான குற்றவாளி ஜெயலலிதாவே என்று அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டிருக்கிறது உச்ச நீதிமன்றம். இதன் பொருள் ஜெயலலிதா இன்று உயிருடன் இருந்திருந்தால் அவர் தன் முதல்வர் பதவியை இழந்திருப்பார், சிறையும் சென்றிருப்பார் என்பதே!

## வரலாறு விடுவிக்காது

மரணம், இந்த இரண்டிலிருந்தும் அவரை விடுவித்துவிட்டது. ஆனால், வரலாறு அத்தனை சுலபத்தில் அவரை விடுவிக்கப் போவதில்லை. விடுவிக்க நாம் அனுமதிக்கவும் கூடாது. காரணம், இது ஜெயலலிதா எனும் ஒரு தலைவர் சம்பந்தப்பட்ட விவகாரம் அல்ல. இனிவரும் காலங்களில் ஒவ்வொரு ஊழல்வாதிக்கும் இது எச்சரிக்கையாக அமைய வேண்டும்.

அந்த வகையில், உடனடியாக நாம் செய்ய வேண்டியது ஒன்று இருக்கிறது. இத்தீர்ப்பின் ஒளியில் ஜெயலலிதா என்னும் புனித பிம்பத்தை வெளிப்படையாக நொறுக்க வேண்டும் என்பதே அது. ஏனென்றால், தீர்ப்பு வெளிவந்த பிறகும், ஜெயலலிதாவை வணங்கப்பட வேண்டிய ஒரு திருவுருவாகத்தான் அ.தி.மு.க. உயர்த்திப் பிடித்துக் கொண்டிருக்கிறது.



இரண்டாகப் பிளவுபட்ட இரு துண்டுகளும் "அம்மாவின் புகழுக்கு உரிமை கோருவதை நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

## "சிறு தெய்வ" வழிபாடு

ஓ.பி.எஸ்.தரப்பு சாதுரியமாக, சசிகலாவை மட்டும் வில்லியாக மாற்றி ஜெயலலிதாவை ஒரு சிறு தெய்வமாக உயர்த்திக் கொண்டிருக்கிறது. "அம்மா வழியில் ஊழலற்ற ஆட்சி" என்னும் நகைமுரண் முழக்கத்தை மேலதிகப் பலத்துடன் அவர்கள் முன்வைத்து வருகிறார்கள். சசிகலா குடும்பத்தின் நிழலில் உயிர்த்திருக்கும் இரண்டாவது துண்டு, ஒருபடி மேலே சென்று, அம்மாவோடு சேர்த்து சின்னம்மாவையும் ஒரு சிறு தெய்வமாக மாற்ற முடியுமா என்று முயன்றுவருகிறது. "அம்மா"வை ஏற்றவர்களால் "சின்னம்மா"வை ஏற்க முடியாமல்போனதால், இந்த முயற்சி எடுபடாமல் போய்விட்டது. மொத்தத்தில் பிரச்சினை, "சின்னம்மா"தானே தவிர, "அம்மா" இல்லை. சிறைக்குச் சென்றவர் அவர்தானே?

திமுக, அ.தி.மு.க. இரண்டும் அண்ணாவை முன்னிறுத்தியதைப் போல், பிளவுபட்ட இரு குழுக்களும் "அம்மா"வை முன்னிறுத்தி பலப்பரீட்சையில் இறங்கியிருக்கின்றன. ஓ.பி.எஸ், சசிகலா இருவருமே மெரினாவில் உள்ள ஜெயலலிதாவின் நினைவிடத்துக்குச் சென்று வணங்கி, தங்களுடைய விசுவாசத்தைப் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றனர். ஜெயலலிதாவின் உண்மையான அரசியல் வாரிசாகத் தங்கள் தரப்பைக் காண்பித்துக்கொள்வதன் மூலமே இந்தப் போட்டியில் வெற்றிபெற முடியும் என்பதே அவர்களுடைய நம்பிக்கையாக இருக்கிறது. "ஜெயலலிதாவின் ஆன்மா" குறித்து இருவருமே பேசுகிறார்கள்.

## கலக அரசியலும் மறுவருகையும்

ஜெயலலிதாவின் சமாதிக்கு அருகில் தியானம் செய்ததன் மூலம் தன் கலக அரசியலை ஒருவர் தொடங்கினார் என்றால், சிறைக்குச் செல்வதற்கு முன் அதே சமாதியின் மீது சத்தியம் செய்து, தன்னுடைய அரசியல் மறுவருகை தொடர்பில் சபதம் போட்டிருக்கிறார் இன்னொருவர். அந்த வகையில், அ.தி.மு.க. முகாமுக்குள் இப்போது நடைபெறுவது ஜெயலலிதாவின் பிம்பத்துக்கு உரிமை கோருவதற்கான வெளிப்படையான அதிகாரப் போட்டியே தவிர வேறில்லை.

ஜெயலலிதாவை முதன்மையான குற்றவாளியாக இவர்கள் இருவராலும் ஏற்க முடியாது. அவ்வாறு செய்வது அவர்களுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தும் என்பதோடு, அவர்களுடைய இரு தரப்பையும் எதிர் காலத்தையும்கூட கேள்விக்கு உட்படுத்தும். அவர்களுக்கு ஜெயலலிதாவின் ஆன்மா தேவைப்படுகிறது. எனவே, அவர்கள் இந்தத் தீர்ப்பை ஆன்மாவின்வழி கடந்துசெல்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பவாத நிலைப்பாட்டைக் கொண்டு அவர்கள் தங்களுடைய அரசியல் பிரவேசத்தை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

## ஜனநாயகக் கடமை

ஆனால், தீர்ப்பின் சாராம்சத்தை ஏற்றுக் கொள்ளும் எவரொருவராலும் இந்த இரு அரசியல் பிரவேசங்களையும் சகித்துக் கொள்ள முடியாது. ஜெயலலிதாவின் பிம்பம் என்பது முறைகேடுகளைக் கொண்டு வளர்த்தெடுக்கப்பட்ட ஒன்று என்பதை இத்தீர்ப்பு உறுதிப்படுத்துகிறது. ஊழல், மிரட்டல், அதிகார முறைகேடு, ஜனநாயகமற்ற தன்மை ஆகியவற்றைக் கொண்டு வளர்க்கப்பட்ட பிம்பம் அது என்பதற்கான அதிகாரபூர்வமான சாட்சியம்தான் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு. ஒரு குற்றவாளி முதல்வராவதிலிருந்து இந்தத் தீர்ப்பு நம்மைக் காப்பாற்றியிருக்கிறது. அதேசமயம், ஒரு குற்றவாளியைத்தான் நாம் பல்லாண்டுகள் ஆட்சியாளராக வைத்திருந்தோம் என்பதையும் இதே தீர்ப்பு சுட்டிக்காட்டியிருக்கிறது. ஒரே சமயத்தில் மகிழ்ச்சியையும் குற்றவுணர்வையும் இது நமக்கு ஏற்படுத்துகிறது.

இந்தக் குற்றவுணர்விலிருந்து விடுபட வேண்டும் என்றால், முதலில் ஜெயலலிதா என்னும் பிம்பத்திலிருந்து தமிழகத்தை மீட்க வேண்டும். அவருடைய பெயரை முன்னிறுத்தி புதிய அரசியல் வாய்ப்புகள் உருவாவதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இன்னும் ஒரு படி மேலே சென்று, ஒட்டுமாத்த பிம்ப வழிபாட்டு உணர்விலிருந்தும் விடுபடும் முயற்சிகளைத் தொடங்க வேண்டும். ஜனநாயகத்தை நேசிக்கும் ஒவ்வொருவரின் கடமை இது.

பிம்ப வழிபாடு என்பது வலிமை மிகுந்த போதை. அந்த மயக்கத்திலிருந்து மக்கள் விடுபட வேண்டும் என்றால், இந்தத் தீர்ப்பை ஒரு கருவியாக, அறிவார்ந்த சமூகம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அணுக முடியாத கடின ஆங்கிலத்தில் இருக்கும் தீர்ப்பைத் தமிழில் கொண்டுசென்று அனைவருக்கும் பரப்புரை செய்ய வேண்டும். அதற்கு இதுவே தோதான தருணம் என்பதை தீபா என்னும் புதிய அரசியல் பிரவேசம் உணர்த்துகிறது!

மருதன்
த ஹிந்து


# சபாநாயகர் தனபால் மீது நம்பிக்கையில்லா தீர்மானம்

## தி.மு.க. கடிதம் கையளிப்பு

சபாநாயகர் தனபால் மீது நம்பிக்கை இல்லா தீர்மானத்தை தி.மு.க. கொண்டு வந்துள்ள நிலையில், இதற்கான கடிதம், சட்டசபை செயலாளரிடம் நேரில் கொடுக்கப்பட்டுள்ளது. சென்னை தலைமைச் செயலகத்துக்கு தி.மு.க. செயல் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான மு.க.ஸ்டாலின் நேற்று (செவ்வாய்க்கிழமை) வருகை தந்த தோடு, அவருடன் டி.கே.எஸ். இளங்கோவன் எம்.பி., எதிர்க்கட்சி துணைத் தலைவர் துரைமுருகன், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் அறையில்ஆலோசனை செய்த அவர்கள், பின்னர் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவருவதற்கான கடிதத்தை சட்டசபை செயலாளர் ஜமாலுதீனிடம் நேற்று முன்தினம் வழங்கினர். மேலும், அந்த கடிதத்தின் பிரதியை சபாநாயகரிடமும் வழங்கியுள்ளனர். பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவித்த அவர்,

"சபாநாயகர் தனபால் உள் நோக்கத்தோடு நடந்து கொண்ட முறையின் அடிப்படையில், அவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்கான கடிதத்தை முன்கூட்டியே சட்டசபைச் செயலாளரிடம் கொடுத்துள்ளோம். இது மட்டுமன்றி அதன் பிரதியை சபாநாயகரிடமும் வழங்கியிருக்கிறோம். மேலும் என்னுடைய உடை கிழிபட்டது தொடர்பில், ஆளுநரிடம் முறையாக முறைப்பாடு அளித்துள்ளோம். ஜனாதிபதியையும் சந்தித்து முறைப்பாடு அளிக்கயிருக்கிறோம். இதற்கிடையில், நீதிமன்றத்திலும் முறையிட்டிருக்கிறோம். எனவே, சட்டப்படி அதை சந்திப்போம்'என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)




# எடப்பாடி பழனிச்சாமி அரசிற்கு எதிராக

# திருச்சியில் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.கவினர் உண்ணாவிரதப் போராட்டம்





(திருச்சி)

சட்டசபையில் கடந்த 18ஆம் திகதி எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான அமைச்சரவை மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்தது. அப்போது தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் மீது சபைக்காவலர்களால் நடத்தப்பட்ட தாக்குதலில் எதிர்க்கட்சி தலைவர் மு.க.ஸ்டாலின் சட்டை கிழிந்தது. மேலும் தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அனைவரும் குண்டுக்கட்டாக தூக்கி வெளியேற்றப்பட்டனர்.

இதற்கு தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர். ஜனநாயக படுகொலை நடந்துள்ளதாகவும் அவர்கள் கருத்து தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தை கண்டித்து தமிழகம் முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் 22ஆம் திகதி தி.மு.க. சார்பில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என்று தி.மு.க. செயல் தலைவரும், எதிர்க்கட்சி தலைவருமான மு.க.ஸ்டாலின் அறிவித்தார். அதன்படி நேற்று தமிழகம் முழுவதும் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது.


திருச்சியில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்திற்கு மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கினார். இதற்காக திருச்சி,தென்னூர், அண்ணாநகர், உழவர் சந்தை மைதானம் தேர்வு செய்யப்பட்டு அங்கு பிரமாண்ட பந்தல் போடப்பட்டது.

உண்ணாவிரதத்தில் கலந்து கொள்வதற்காக மு.க. ஸ்டாலின் நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு கார் மூலம் திருச்சி வந்தார். முன்னதாக சமயபுரம் டோல்பிளாசா அருகே திருச்சி மாவட்ட செயலாளர் கே.என்.நேரு எம்.எல்.ஏ. தலைமையில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் இரவு தனியார் ஹோட்டலில் தங்கிய அவர் நேற்றுக் காலை 8.45 மணிக்கே போராட்டம் நடைபெறும் பந்தலுக்கு வந்து உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். உண்ணாவிரத மேடையில் மு.க.ஸ்டாலின், கே.என். நேரு, திருச்சி சிவா எம்.பி. மற்றும் தலைவர்கள் அமர்ந்திருந்தனர்.

பிரமாண்ட பந்தலில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கதிரைகள் போடப்பட்டு அதில் தி.மு.க. சார்பு அணி நிர்வாகிகள், கூட்டணி கட்சியினர், இளைஞர்கள், பொதுமக்கள் அமர்ந்திருந்தனர்.

உண்ணாவிரதம் நடைபெறும் தென்னூர், உழவர் சந்தை மைதானம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் சுமார் 500இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். மேலும் உண்ணாவிரத மைதானத்தை சுற்றிலும் பல்வேறு இடங்களில் கண்காணிப்புக் கமராக்கள் அமைத்து பொலிஸார் தீவிரமாக கண்காணித்தனர். (இ-12)



# தொலைநோக்குப் பார்வையுடன் அமெரிக்கா செயற்பட வேண்டும்

எச்-1 பி விசா விவகாரத்தில் அமெரிக்கா தொலைநோக்கு பார்வையுடன் செயற்படவேண்டும் என்று பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்க நாட்டில் நிரந்தர குடியுரிமை பெறாமல் அங்கு தங்கி வேலை செய்வதற்காக வெளிநாட்டினருக்கு அந்த நாடு 'எச்-1 பி விசா' வழங்கி வருகிறது. இந்த விசாக்கள் இந்தியா மட்டுமல்லாது உலக நாடுகளில் பலவற்றிலும் மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. குறிப்பாக ஐ.டி. என்றழைக்கப்படுகிற தகவல் தொழில் நுட்பத் துறையில் பணியாற்றுகிறவர்கள் மத்தியில் இந்த விசாவுக்கு தனி மரியாதை உள்ளது.

இந்த நிலையில், எச்1பி விசா நடைமுறையில் கடுமையான கட்டுப்பாடுகளை விதிப்பதற்கான நடவடிக்கைகளை அந்நாட்டு அரசு மேற்கொண்டு வரும் நிலையில், பிரதமர் மோடி திறன் வாய்ந்த ஊழியர்களை பணியமர்த்தும் விவகாரத்தில் தொலைநோக்குப் பார்வையுடன் அமெரிக்கா செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இந்தியாவுக்கு அரசுமுறைப் பயணமாக வந்துள்ள அமெரிக்க நாடாளுமன்ற எம்.பிக்களிடம் நேற்று பிரதமர் மோடி இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும், அமெரிக்க எம்.பிக்களிடம் இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவை மேம்படுத்துவது குறித்தும், ஒருங்கிணைந்து செயற்படுவது குறித்தும் பிரதமர் மோடி ஆலோசித்தார். இந்த தகவல் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-12)

# ஜல்லிக்கட்டுக்கு எதிராக மீண்டும் மல்லுக்கட்டும் பீட்டா



ஜல்லிக்கட்டு மற்றும் கம்பாளா போட்டிகளுக்கு எதிராக வழக்கு தொடர்வது குறித்து சட்ட நிபுணர்களுடன் ஆலோசித்து வருவதாக பீட்டா அமைப்பு தெரிவித்துள்ளது.

மத்திய அரசின் மிருக வதை தடுப்புச் சட்டம் 1960 இல் திருத்தம் கொண்டு வந்து தமிழக அரசு கடந்த 21 ஆம் திகதி அவசர சட்டம் பிறப்பித்தது. இச்சட்டம் தமிழக சட்டப்பேரவையில் கடந்த 23 ஆம் திகதி ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குப் பின் நிரந்தர சட்ட வடிவம் பெற்றது.

தமிழக அரசின் புதிய சட்டத்துக்கு எதிராக கம்பாசன் அன்லிமிடெட் பிளஸ் ஆக்ஷன் (கியூபா), பெடரேஷன் ஆப் இண்டியன் அனிமல் புரொடக்ஷன் ஆர்கனைசேஷன் (எப்ஐஏபிஓ), அனிமல்ஈக்வாலிடி ஆகிய தொண்டு அமைப்புகள் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகளில் தடை விதிக்கும்படி வாதிடப்பட்டது.

கடந்த மாதம் 31 ஆம் திகதி இம்மனுக்களை விசாரித்த உச்ச நீதிமன்றம் ஜல்லிக்கட்டு தொடர்பான தமிழக அரசின் சட்டத்துக்கு இடைக்கால தடை விதிக்க மறுத்துவிட்டது. இதனால், தமிழகத்தில் இந்த ஆண்டு ஜல்லிக்கட்டு போட்டிகள் நடந்து முடிந்துள்ளன.

இத்தகைய சட்டம்கொண்டு வருவதற்கான அவசியம் குறித்து தமிழக அரசு, 6 வாரங்களுக்குள் பதிலளிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள நிலையில், கர்நாடக மாநிலத்திலும் கம்பாளா போட்டிகளை நடத்தும் வகையில் மிருக வதை தடுப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வந்து சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுகுறித்து டில்லியில் கருத்து தெரிவித்துள்ள 'பீட்டா இந்தியா' அமைப்பின் கால்நடைகள் பிரிவு இயக்குநர் மணிலால் வலியதே, 'ஜல்லிக்கட்டு மற்றும் கம்பாளா தொடர்பான சட்டங்களை எதிர்த்து ஒன்றாக வழக்கு தொடர்வதா அல்லது தனித்தனியாக வழக்கு தொடர்வதா என்பது குறித்து சட்ட நிபுணர்களுடன் ஆலோசித்து வருகிறோம்.

இன்னும் ஓரிரு தினங்களில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வோம்' என்று கூறியுள்ளார். (இ-12)

# அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரை நியமித்தார் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக்கேல் பிளின் இராஜினாமா செய்ததையடுத்து, அவருக்குப் பதில் புதிய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக ஹெர்பர்ட் ரேமண்ட் மெக்மாஸ்டர் நியமிக்கப்பட்டுள்ளார்.



அமெரிக்க 45 ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றுள்ள டொனால்ட் ட்ரம்ப், தேசிய பாதுகாப்பு ஆலோசகராக மைக்கேல் பிளினை நியமித்திருந்தார்.

அமெரிக்க பாதுகாப்புத் துறை புலனாய்வு பிரிவின் முன்னாள் தலைவரான மைக்கேல், டொனால்ட் ட்ரம்பின் தீவிர ஆதரவாளர். இவர், இதற்கு முன்னர் தேசிய பாதுகாப்பு தொடர்பாக டிரம்ப்புக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி வந்ததுடன், அவரது தேர்தல் பிரசார கூட்டங்களில் ஆரம்ப நிலை பேச்சாளராக இருந்து வந்துள்ளார்.

இந்நிலையில், அமெரிக்கா, ரஷ்யா மீது விதித்திருக்கும் தடைகளை அகற்றுவது குறித்து அமெரிக்க சட்டத்திற்கு எதிரான வகையில், ரஷ்ய தூதரோடு கலந்துரையாடியதாக பிளின் மீது குற்றச்சாட்டு எழுந்தது. இந்த குற்றச்சாட்டு தொடர்ந்து சர்ச்சையை ஏற்படுத்தி வந்த நிலையில், மைக்கேல் பிளின் தனது பதவியை கடந்த சில தினங்களுக்கு முன் இராஜினாமா செய்தார். சுமார் மூன்று வாரங்கள் மட்டுமே அவர் பதவியில் நீடித்தார்.

பிளின் பதவி விலகியதையடுத்து, தற்காலிக தேசிய பாதுகாப்பு ஆலோசகராக ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி ஜோசப் கெய்த் கெல்லாக் நியமிக்கப்பட்டு பணிகளை கவனித்து வந்தார்.

இந்நிலையில், ட்ரம்ப் தன்னுடைய தேசிய பாதுகாப்பு ஆலோசகராக, லெப்டினன்ட் ஜெனரல் ஹெர்பர்ட் ரேமண்ட் மெக்மாஸ்டரை நியமித்துள்ளார்.

தற்காலிக தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டிருந்த கெய்த் கெல்லாக், மெக்மாஸ்டருக்கு அடுத்த நிலையில், பணியாற்ற உள்ளார். அவர், தேசிய பாதுகாப்பு சபையில் பணியாளர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (இ-12)

# நீரிலும் வானிலும் செல்லக்கூடிய வகையில் உலகின் மிகப்பெரிய விமானம் தயாரிப்பு




நீரிலும், வானிலும் செல்லக் கூடிய வகையில் உலகின் மிகப் பெரிய விமானத்தை சீனா தயாரித்து வருகின்றது.

இந்த ஆண்டு இறுதியில் விமானத்தை சோதனை ஓட்டத்திற்கு அறிமுகப்படுத்தலாம் என செய்திகள் வெளியாகியுள்ளன.

தென்சீனக் கடல் பகுதியில்தனது இராணுவ பலத்தை மேம்படுத்தும் வகையில் சீன அரசானது, நிலத்திலும், வானிலும் செல்லக்கூடிய அதிநவீன விமானத்தை உருவாக்கியுள்ளது.

வானில் பறந்துகொண்டிருக்கும் போதே நிலத்திலும், நீரின் மேற்பரப்பிலும் இறங்கும் வகையில் இந்த விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

AG600 எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த விமானம் 37 மீற்றர் மொத்த நீளமும், 38.8 மீற்றர் நீளமுள்ள இறக்கையையும் கொண்டது.

53.5 தொன் சுமைகளை எடுத்துக்கொண்டு புறப்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இவ்விமானம், 20 தொன் நீரையும் சுமந்து செல்லும் வகையில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இடைவிடாமல் 4500 கி.மீ.பறக்கும் வல்லமை கொண்ட இந்த விமானம் வானில் பறக்கும் போது 53 தொன் சுமையை தாங்கக் கூடிய சக்தி கொண்டது.

நடுக்கடலில் ஏதேனும் கப்பல் விபத்து ஏற்படும் சமயத்தில் விரைந்து சென்று மீட்கும் வகையிலும், நிலப்பரப்பில் காட்டுத் தீ பற்றி எரிந்தால் உடனே சென்று அணைக்கும்வகையிலும் இவ்விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக சீன இராணுவப் பொறியாளர்கள் கூறியுள்ளனர்.

இந்த அதிநவீன விமானம் இந்த ஆண்டில் சோதனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டு விரைவில் இராணுவத்தில் இணைக்கப்படும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-12)

# பாரிஸை அழிக்க சதித்திட்டம் திறமையால் முறியடிப்பு

(பாரிஸ்)

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் பயங்கர தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த மூன்று தீவிரவாதிகள் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

Marseille பகுதியில் பாரிஸ் தீவிரவாத தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட தேடுதல் வேட்டையில் மூன்று பேரும் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் 38 வயதுடையவர் என தெரிய வந்துள்ளது. கடந்த ஜனவரி மாதம் முதல் இவர்களை கண்காணித்து வருவதாக பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது.

பிரான்சில் தீவிரவாத அட்டகாசங்கள் அதிகரித்து வரும் நிலையில் தீவிரவாத தடுப்பு படையினர் நாட்டில் அதிரடி சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த பெப்ரவரி 3ம் திகதி லூவரில் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவ வீரர் ஒருவர் தாக்கப்பட்டார். அதன் பின்னர் நடந்த சோதனையில் தீவிரவாத தாக்குதலுக்கு திட்டம் வகுத்திருந்த நான்கு பேர் அதிரடியாக கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-12)





# பறக்கும் டாக்ஸியை அறிமுகப்படுத்துகிறது டுபாய்

(டுபாய்)

டுபாயில் பறக்கும் டாக்ஸி (Taxi) சேவை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

டுபாயில் உலக நாடுகளின் உச்சி மாநாடு நடைபெற்று வருகிறது. இம்மாநாட்டில் பல்வேறு நாட்டினரும் பங்கேற்றுள்ளனர்.

இதில் வீதி மற்றும் போக்குவரத்து ஆணையத்தின் சார்பில் டாக்ஸி சேவையாக, ஒருவர் மட்டும் பயணிக்கும் வகையிலான பறக்கும் கார் என்றழைக்கப்படும் தானியங்கி பறக்கும் வாகனம் பார்வைக்கு வைக்கப்பட்டது.



எதிர்வரும் ஜூலை மாதம் குட்டி விமானம் போன்று காணப்படும் இந்த வாகனம் பயன்பாட்டிற்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

"ஹோவர் டாக்ஸி" என்று குறிப்பிடப்படும் இந்த பறக்கும் வாகனம் அதிகபட்சம் மணிக்கு 160 கிலோ மீற்றர் வேகத்தில் பயணிக்கும் திறன் வாய்ந்தது. தரையிலிருந்து 300 மீற்றர் உயரத்தில் பறந்து செல்லும்.

தரைக்கட்டுப்பாட்டு மையம் மூலமாக, பறக்கும் காரின் வழித்தடம், வேகம், இறங்கும் இடம் உள்ளிட்டவை கண்காணிக்கப்படும்.

இதன் நீளம் 12 அடி, அகலம் 14 அடி, உயரம் 5.2 ஆகும்.

இது நவீன தொழில் நுட்பத்தில் தானாக இயங்கும். பயணி இதில் அமர்ந்து எதிரே இருக்கும் தொடுதிரையில் செல்ல வேண்டிய இடத்தைக் குறிப்பிட்டால் அங்கே தரையிறக்கி விடும்.

தொடர்ந்து 30 நிமிடம் பறக்கும் இந்த வாகனம் அதிகபட்சமாக 2 மணி நேரம் பற்றரிகளை சார்ஜ் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. (இ-7)

# கலைத் தரிசனம்

## நெறியாளர் கி.தவராசா அவர்களுடனான சந்திப்பு

*முல்லைமணன் என்ற புனைப்பெயரைக் கொண்டவர் முல்லைத்தீவு மணற்குடியிருப்புக் கிராமத்தில் 1954-07-29 ஆம் திகதி பிறந்த இவர் ஆரம்பக்கல்வியை மு/ றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயத்தில் பயின்றார். பாடசாலைக் காலத்தில் பாடல், பேச்சு, நாடகம், கவிதை, விமர்சனம், விவாதம் போன்ற துறைகளில் ஈடுபட்டு பின்னாளில் இத்துறைகளில் சிறந்து விளங்கினார். சாம்பிராட்ட அசோகன் , மனுநீதி கண்ட சோழன், சிலை எடுத்த செம்மல், சோக்கிரட்டீஸ் போன்ற நாடகங்களில் நடித்து நடிப்பில் தனக்கென ஓர் இடத்தில் மிளிர்ந்தார். கலாபூஷணம் பொன் சேதுபதி அவர்களை ஆரம்பக் குருவாகக் கொண்டு நாடக உலகில் பிரவேசித்தார். சோக்கிரட்டீஸ் நாடகத்தில் சோக்கிரட்டீஸ் பாத்திரமேற்று நடிப்புலகில் மிகவும் பாராட்டைப் பெற்றார்.*

*இதனால் இவரை சோக்கிரட்டீஸ் என்று நாடக உலகு அழைக்கலாயிற்று. 2016 இல் வன்னிக் குறோஸ் கலாசாரப் பேரவையினால் சிறந்த நடிகருக்குமான விருதையும் யாழ். குறும்படத் தயாரிப்பு நிறுவனத்தினால் சிறந்த நடிகருக்கான விருதையும் பெற்றார். நெறியாளர் கி.தவராசா அவர்கள் வலம்புரிக்குத் தன்னைப் பற்றியும் கலைப்பணி பற்றியும் கூறியவற்றை இங்கே தருகின்றோம்.*



■ ***தங்கள் கலை வாழ்க்கையைப்பற்றி கூற முடியுமா?***

கலை வாழ்வு என்பது பொதுவாக நான் பாடசாலையில் கல்வி கற்ற காலத்தில் சாம்பிராட்ட அசோகன், மனோகரா, பராசக்தி, வீரபாண்டிய கட்டபொம்மன், மனுநீதி கண்ட சோழன் , சிலை எடுத்த செம்மல், சோக்கிரட்டீஸ் போன்ற நாடகங்களில் நடித்தேன். கிட்டத்தட்ட பதினைந்து வயதிலே நான் நாடகங்களில் நடிக்க ஆரம்பித்தேன். பின்னாளில் பழிக்குப்பழி, உடைந்த உள்ளம், அரிச்சந்திரா, இரத்தசிம்மாசனம், ஓதல்லோ, கனவு அனார்க்கலி போன்ற பண்டார வன்னியனின் நாடகங்களில் நடித்தேன். அதில் நான் பாடசாலையில் நடித்த சோக்கிரட்டீஸ் என்ற ஓரங்க நாடகம் முல்லை. மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் 1972 ஆம் ஆண்டு நடந்த நாடகப்போட்டியில் முதல் பரிசாக தங்கப்பதக்கத்தை பெற்றுக் கொண்டது. எனக்கு நாடகம், நெறியாள்கை செய்தவர்களை நான் அவசியம் குறிப்பிட வேண்டும். அமரர் சாண்டோ அந்தோனிப்பிள்ளை ஆசிரியர், அமரர் செ.ம.சவரிமுத்து ஆசிரியர், மனோரஞ்சிதம் ஆசிரியை, செ. மருசீலன் (குண்டு மணி), செ.சிவராசா கலாபூஷணம், பொன் சேதுபதியவர்கள் கலாபூசணம், புவனா இரட்ணசிங்கம், ஒப்பனைக்கலைக்கும் கலாபூஷணம் எஸ்.எஸ். மணியம், கலாபூஷணம் சி.பாராபரம், நாடகக்கலைஞர் எஸ். அன்ரன் போன்றோர்.

■ ***நாடகம் தவிர்ந்த கலைகளில் தாங்கள் ஈடுபட்டதுண்டா?***

குறும்படங்களில் நடித்துள்ளேன். நண்பர்கள் கலை வட்டாரம் தயாரித்த செருப்பு. எனது நெறியாள்கையில் நடித்த கண்ணீர் கணங்கள். யாழ்ப்பாணத்தில் ஒருவன் என்ற குறும்படத்தில் அத்தோடு முல்லை. வர்மனின் பகைவரோ என்ற படத்திலும் நடித்து வருவதோடு கனவுக் கற்பாறை படத்தை நெறியாள்கை செய்யவுள்ளேன். அத்தோடு எனது நீண்ட நாள் கனவான பிறந்த மண் என்ற குறும்படத்தையும் இயக்கவுள்ளேன். ஒரு பாடல் காட்சியில் நடித்துள்ளேன்.

■ ***தங்களின் எழுத்துத் துறை பற்றி கூற முடியுமா?***

நான் பாடசாலையில் கல்வி பயிலும் காலத்தில் தமிழ் மீது நல்ல ஆர்வம் கொண்டவன். அப்போது வாசிப்பை நாள் விரும்பி செய்வேன். வாசிப்பு என்றால் அதற்கு வகுப்பில் என்னைத்தான் அழைப்பார்கள். கவிதையாக இருக்கலாம், சிறுகதையாக இருக்கலாம், உரையாடல்களாக இருக்கலாம், ஏன் நாடகமாகக் கூட இருக்கலாம். எதுவாக இருந்தாலும் அதை பாவத்துடன் செய்து காட்டி பாராட்டைப் பெறுவேன். அந்த வகையில் எனக்கு எழுத வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. 1990 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இடைவிடாது தமிழமுதம், பிருந்தாவனம், வானவில், ஈழநாதம், சுடரொளி, நிதர்சனம் போன்றவற்றில் கவிதை, கட்டுரை, சிறுகதை போன்றவை எழுதி வருகின்றேன். ஊடகங்களுக்கு முப்பத்தைந்து சிறுகதைக்கு மேல் எழுதியுள்ளேன். நான் முதன் முதலாக புதுவெள்ளம் என்ற சிறுகதை எழுதி அதைத் தொடர்ந்து எழுதி வருகின்றேன்.

■ ***இச்சமயத்தில் தாங்கள் ஏதாவது எழுத்துத்துறையில் தங்களை அடையாளப் படுத்தியுள்ளீர்களா?***

எழுத்துத்துறையில் நாம் ஏதாவது எம்மை அடையாளப்படுத்த வேண்டும் என்ற அவா எல்லா படைப்பாளிக்கும் உண்டு. அந்த வகையில் நானும் அதற்கு விதிவிலக்கானவன் அல்ல. தற்போது நான் எழுதிய மடி சுமந்த நிலா என்ற கவிதைத் தொகுப்பு கவிஞர் புரட்சி அவர்களின் இடைவிடாத முயற்சியால் வெளியிட எண்ணியுள்ளேன். அத்தோடு வங்கக்கடலோரக் கனவுகள் என்ற குறுநாவல் எழுதியுள்ளேன். மேலும் சூரியன் சுட்டெரிக்கும் என்றும் கவிதை தொகுப்பும் முப்பது ஈழத்து கவிஞர்களின் கவிதைத் தொகுப்பில் எடுத்து ஆய்வு செய்து அதையும் வெளியிட எண்ணியுள்ளேன். அவற்றோடு யேசுகாவியம் ஒன்றும் எழுதியுள்ளேன்.

அத்தோடு கவியரங்கம், பட்டிமன்றங்கள் போன்றவற்றிலும் ஈடுபடுவது. மேலும் ஒரு குறுநாவல் ஒன்று எழுதியபடியுள்ளேன். இங்ஙனமாக நான் வாழும் போது எதையாவது எழுத வேண்டும் என்ற தணியாத தாகம் என்றும் எழுந்த வண்ணமே உள்ளது.

■ ***தாங்கள் இதுவரை பெற்ற விருதுகள் பற்றி?***

2016 வன்னிக்குறோஸ் கலாசாரப் பேரவையால் பண்டார வன்னியன் நாடகத்தில் புவியமுகன் பாத்திரமேற்று நடித்தமைக்காக சிறந்த நடிகருக்கான விருது பெற்றேன். அதேபோன்று யாழ். குறுந்திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தார் சிறந்த நடிகருக்கான விருது வழங்கிக் கௌரவித்தனர்.

■ ***தாங்கள் இதுவரை நெறியாள்கை செய்த நாடகங்கள்?***

ஆரம்பத்தில் அனார்க்கலி, மனுநீதிகண்ட சோழன், கூழாமுறிப்பு புனித சூசையப்பர் ஆலயத்தில் திருமறைக் காவலன் என்ற கிறிஸ்தவ நாடகம், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மாணவர்களுக்கு (1990 ஆம் ஆண்டு முன்) பழக்கிய நாடகம் முதலாவது இடத்தைப் பெற்றது. அடுத்து பாரதி இல்ல சிறுவர்களுக்கு நெறியாள்கை செய்த பண்பாரவண்ணியன் செம்மனச் செல்வி. இந் நாடகம் அறநெறிப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றுள்ளது. அதேபோன்று பாரதி சிறுவர் இல்லத்தினர்களுக்கு சமுதாய அரக்கன், மானுடச் சிக்கல், ஏரோதன் (கிறிஸ்தவ நாடகம்) கர்ணன். இந் நாடகம் தேசிய மட்டத்திற்கும் வரை சென்றது என்பது குறிப்பிடத்தக்கது. அத்தோடு இந் நாடகத்தின் பாத்திரத் தெரிவுகள் அனைவராலும் பாராட்டப் பெற்றது.

■ ***தாங்கள் ஓர் எழுத்தாளர், நாடக நடிகர், நாடக இயக்குநர், குறும் திரைப்பட நடிகர், இயக்குநர். அத்தோடு சமூக ஆர்வலர், ஆசிரியர் என்ற இத்தனை விடயங்களிலும் ஈடுபாடு கொண்டவர். அது எங்ஙனம் தங்களால் முடிகிறது?***

ஒரு மனிதனின் சிந்தனை நேர் கொண்ட பாதையில் செல்ல வேண்டும். அது மட்டுமல்ல, என்னால் இந்த சமூகத்திற்கு என்ன செய்ய முடியும் என நான் சிந்திப்பதால் வருகின்ற சந்தர்ப்பங்களை நல்ல முறையில் பயன்படுத்தி கொள்கின்றேன். அத்தோடு எனது பாரியாரும் வீட்டு நிர்வாகத்தில் முழுநேரம் கவனம் செலுத்துவதால் இப் பணிகளில் என்னால் ஈடுபட முடிகின்றது என்றால் அது மிகையாகாது.

■ ***தங்களைக் கலையுலக வாழ்வில் ஈடுபடத் தூண்டியது எது என குறிப்பிட முடியுமா?***

நான் சிறுவயதிலிருந்தே சினிமாப்படம் பார்ப்பதில் மிகவும் ஆர்வமுள்ளவன். அந்த வகையில் ஆரம்பகாலம் தொட்டு சிவாஜி, எம்.ஜி.ஆர், ஜெமினி, போன்ற நடிகர்களின் படமும் தற்போது கமல், ரஜினி, விஜய், சூர்யா, அஜித் போன்ற நடிகர்களின் படமும் ஏன் தற்போதைய படங்களும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது பார்ப்பதுண்டு. குறிப்பாக சிவாஜி கணேசன் அவர்களின் நடிப்பு என்னை கவர்ந்தமையினால் நான் நடிப்புத்துறையில் கால்பதிக்க காரணமாயிருந்தது. பொதுவாக நல்ல ரசிகனே சிறந்த கலைஞனாகி றான். எனது ரசிப்புத் தன்மை தான் அதுமட்டுமல்ல மனம் திறந்து பாராட்டும் குணம் எனக்கு இருப்பதால் கலையுலகில் என்னால் பயணிக்க முடிகிறது.

■ ***இளைஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் நீங்கள் கூறுவது என்ன?***

இக்கால இளைஞர்களில் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்ட இளைஞர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களில் அதைச் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையுள்ளவர்கள் சாதிப்பார்கள். அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். அதே சமயம் வாழ்வை எப்படியும் வாழலாம் என்ற நினைப்பில் வாழும் இளைஞர்கள் மேல் எனக்கு ஆழ்ந்த அனுதாபம் ஏற்படுகிறது. இவர்கள் எதையும் சாதிக்க முயல்வதில்லை. சாதிக்கமுடியும் என்ற நம்பிக்கையும் எழுவதில்லை. ஏன் இவர்களால் முடியாது? முடியும். வாழ்வை அற்ப சுகங்களுக்கு பலியிடாமல் நல்ல ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டி எழுப்ப அவர்களால்தான் முடியும். அவர்கள் சிறிது காலம் சிந்தித்தால் வாழ்வு அவர்களுக்கு சொர்க்கமாய் மாறும். எதிர்காலம் சிறக்கும். எமது சந்ததிகளின் வாழ்வியல் வேர் கலை, கலாசாரம், பாரம்பரியம், பண்பாடு என்பவைகள் பற்றிப் பிணைந்து எதிர்காலம் ஒளிமயமாகும் என்பதே எனது அபிப்பிராயம்.

நேர்காணல்:
**ஜெயம் ஜெகன்**



மனுநீதி கண்ட சோழனாக நடிக்கும் போது

# அபுதாபி பாதுகாப்பு கண்காட்சியில் ருவான் விஜேவர்த்தன பங்கேற்பு






பிந்திய நவீன தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்ட நவீன ஆயுத, தளபாடங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ள, அபுதாபியில் நடைபெறும் ஐடெக்ஸ்-2017 அனைத்துலக பாதுகாப்பு கண்காட்சியில், இலங்கை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன பங்கேற்றுள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்சின் தலைநகரான அபுதாபியில் இந்தக் கண்காட்சி, கடந்த 19ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இந்தக் கண்காட்சியில் பங்கேற்க இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, ஐக்கிய அரபு எமிரேட்சின் ஜனாதிபதி, ஷேக் கலிபா பின் சையட் அல் நஹ்யன் அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த நிலையில் ஜனாதிபதியின் சார்பில் இந்தக் கண்காட்சிக்கு, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன பங்கேற்றுள்ளார்.

தரை, கடல் மற்றும் வானில் போரிடுவதற்கான அனைத்து பாதுகாப்பு தளபாடங்களும், பிந்திய தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள நவீன போர்த்தளபாடங்களும், இந்தக் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. (இ-7)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்தை புறந்தள்ளி ஐ.தே.கவில் இணைய ரத்ன தேரர் முயற்சி



(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் இடையில் 2015ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை மீறி, ஐ.தே.கவில் சேர்வதற்காக, ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலிய ரத்னதேரர், ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துள்ளதாக, ஹெல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், அக்கட்சியின் இணைத் தலைவர் வண. ஹெடிகல்லே விமலசார தேரர், இக்குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இரு கட்சிகளுக்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம், ஹெல உறுமயவுக்கென ஒதுக்கப்பட்ட தேசியப் பட்டியல் மூலமான நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கான இடத்திலேயே, ரத்ன தேரர் நியமிக்கப்பட்டதாகத் தெரிவித்த விமலசார தேரர், ஐ.தே.கவில் இணைவதற்கு, ரத்னதேரருக்கு உரிமை கிடையாது என்று குறிப்பிட்டார்.

எனினும், நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படும் முடிவை, ரத்னதேரர் மீளப்பெற்றுக் கொண்டால், அவரை மீண்டும் கட்சியில் சேர்த்துக் கொள்வதற்குத் தயாராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

"வண. ரத்னதேரர், தனது முடிவை வாபஸ்பெற்று, ஹெல உறுமயவுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டதைப் போல, ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் அவர் இணைய முடியாது. ஜனாதிபதி கலந்து கொள்ளும் நிகழ்வுகளில் கலந்துகொண்டு, ஐ.தே.கவினதும் ஜனாதிபதியினதும் விருப்பை வெல்வதற்கு, அவர் முயல்கிறார். அவருக்கெதிரான ஒழுக்காற்று விசாரணைகளிலிருந்து தப்புவதற்கு, இது வழி கிடையாது" என்று விமலசார தேரர் குறிப்பிட்டார்.

ரத்னதேரர் தொடர்பான ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்வதற்காக, தனது தலைமையில் ஹெல உறுமயவின் மத்திய குழுவினால் செயற்குழு ஒன்று உருவாக்கப்பட்டதாகத் தெரிவித்த விமலசார தேரர், அச்செயற்குழு, தனது பணிகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்தார். (இ-3-7)

# அபிவிருத்தி குறித்த சட்டமூலம் வடக்கு சபையால் நிராகரிப்பு

## சபாநாயகர் கரு தெரிவிப்பு



அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள, அபிவிருத்தி தொடர்பான சட்டமூலத்தை வடக்கு மாகாணசபை நிராகரித்துள்ளதாகவும் கிழக்கு மாகாணசபை இதற்கு ஒப்புதல் அளிப்பதை நிறுத்தி வைத்துள்ளதாகவும், சபாநாயகர் கரு ஜயசூரிய நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

அபிவிருத்தி தொடர்பான சட்டமூலம் மாகாணசபைகளின் ஒப்புதலுடனேயே நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நிலையில், இந்தச் சட்டமூலம் முதலில் மாகாணசபைகளுக்கு அனுப்பப்பட்ட போது, அனைத்து மாகாணசபைகளும் அதனை நிராகரித்திருந்தன.

மாகாண சபைகளின் அதிகாரங்களில் தலையீடு செய்வதாக உள்ளது என்று இந்த சட்ட மூலம் நிராகரிக்கப்பட்டதையடுத்து, சில திருத்தங்களுடன் மீண்டும் மாகாண சபைகளின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிலையில், வடக்கு மாகாணசபையின் அமர்வில் இந்த சட்டமூலம் அதிகாரப்பகிர்வுக்கு எதிரானது என்று அனைத்து உறுப்பினர்களாலும் நிராகரிக்கப்பட்டது. இதுபற்றி நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சபாநாயகர் அறிவித்தார்.

அதேவேளை, தற்போது முன்மொழியப்பட்டுள்ள அரசியலமைப்பு மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வரையில், இந்தச் சட்டமூலத்தை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதை நிறுத்தி வைத்திருப்பதாக, கிழக்கு மாகாணசபையினால் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், மத்திய, வடமேல், சப்ரகமுவ, மேல், தென், மற்றும் ஊவா மாகாண சபைகள் இந்தச் சட்டமூலத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளன.

வடமத்திய மாகாண சபை இன்னமும் இந்த அபிவிருத்தி சட்டமூலத்துக்கு ஒப்புதல் அளிக்கவில்லை என்றும் சபாநாயகர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

மாகாணசபைகளின் இந்தக் கருத்து தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3-7)

# இன்று ஒரு தகவல்

## தூண்டுபவர்களை அனுமதிக்கலாமா?

உங்க வீட்டு வேலைக்காரி சரியில்லை, மாத்துங்க. என்னங்க உங்க அண்ணன் உங்களை இலட்சியமே பண்ண மாட்டேங்குறாரு.

உன் பெண்டாடிக்கு உம் மேலே கொஞ்சம் கூட அக்கறை கிடையாதுப்பா.

இப்படி ஏதாவது ஒன்றை யாரேனும் சொல்லி வைக்கிறார்கள் என்றால், அடடா! இவர்களுக்குத்தான் நம் மீது எவ்வளவு அக்கறை என்று மகிழ்ந்தும் நெகிழ்ந்தும் உருகியும் போய்விழுகிறோம். அதே தலைப்பில் அவர்களைப் பேச அனுமதித்தீர்கள் என்றால் உலகத்திலேயே இந்த மூன்று பேர்தாம் நம்முடைய தலை யாய விரோதிகள் என்பது போல் அரை மணி நேரம் விவாதித்து விட்டு அவர்கள் பாட்டுக்கு எழுந்து போய் விடுவார்கள்!

அவ்வளவுதான்! நமக்கு மண்டை குடையும். பூப்போன்ற மனசும் இரும்பாய் ஆகிவிடும். தூய எண்ணங்களைக் கொண்டிருந்தால் அவை முழுக்க அழுக் குப் படிந்து விடும். நாமும் இவர்களது கண்ணோட்டத்திலேயே சிந்திக்க ஆரம்பிப்போம். வேலைக்காரியை விரட்டி விடலாம் மற்ற இருவரை? விரோதப் பார்வை பார்க்க ஆரம்பிப்போம். விளைவு? பூசல்கள், விரிசல்கள்!

நட்புப் போர்வையும் உறவுப் பொன்னாடையும் போர்த்துக் கொண்டு நம்மீது மிகுந்த அக்கறை கொண்டவர்களாக நடித்து நமக்குக் குழிதோண்டுபவர்கள் இவர்கள்.

ஒரு மாமனார் தன் மாப்பிள்ளை மீது மிகுந்த அக்கறை காட்டுவது போல் பேசி, தாய்க் குடும்பத்திலிருந்து அவரைப் பிரித்து தன்னோடு சேர்த்துக் கொண்டார். நெருங்கி வாழ ஆரம்பத்த மாப்பிள் ளைக்கு மெல்ல அண்டி வாழ வேண்டிய சூழ்நிலை உருவானது. நன்கு மதிப்பு கொடுத்த மாமனார் மெல்ல மரியாதைகளைக் குறைக்க ஆரம்பித்தார். வாங்க மாப்பிள்ளை சாப்பிடலாம் என்ற நிலை மாறி போய்ச் சாப்பிட்டுங்க எந்திரிங்க என்று சொல்லும் நிலை ஆகிவிட்டது.

தாய் குடும்பத்தைக் கடுமையாக விரோதித்துக் கொண்டு வெளியேறி விட்டதால் அங்கும் இவரால் திரும்பிப் போக முடியவில்லை. கௌரவம் தடுத்தது. இங்கோ கௌரவம் போய்விட்டது. ஒரே கோணத் தில் சிந்தித்தால் இப்படித்தான் ஆகும்.

மாமனாருக்கு மாப்பிள்ளையைக் கெடுக்கும் நோக்கம் அறவே இல்லை தான். ஆனால் பக்குவமற்ற அவரது சிந்தனை அவரை அப்படிச்செய்ய வைத்து விட்டது. இப்படிப் பட்டவர்களின் கைப் பாவைகளாக ஆகி சுய சிந்தனையும் இல் லாமல் வீணாகிப் போகிற கும்பலில் நாமும் ஒருவராக இருந்து விடக்கூடாது. ஏதோ பிரியத்தில் இப்படிப் பேசுகிறார்கள் என்கிற கோணத்தில் மட்டுமே சிந்திக்க வேண்டும் அல்லது புரியாமல் பேசுகிறார்கள் பேசட்டும் என எண்ண வேண்டும் காரணகாரியத்தோடு. நமக்கு வேண்டியவர்களைப் பற்றித் தவறாகச் சொல்லி துண்டு போடு பவர்கள் உண்டு. இவர்களையெல்லாம் அதிகமாகவே பேசவே அனுமதிக்கக் கூடாது. எனக்குத் தெரியும் நீங்கள் இதில் தலை யிடாதீங்க எனும் பாணியில் இவர்களுக் குச் சூட்டு வைத்தியம் செய்ய வேண்டி யது அவசியம். இவர்கள் சொல்லுவதில் உள்ள நியாயத்தை ஆராய்வதோடு ஏன் இவர்கள் இப்படி நம்மவர்களைப் பற்றி நம்மிடமே தவறாகச் சொல்லுகிறார்கள் இவர்களது உள்நோக்கம் என்ன என்று நாம் சிந்திக்க வேண்டும் விடை தெரியும் விடயம் விளங்கும்.

இதை விடுத்து அவர்கள் சொல்வதை வேதமாக ஏற்று சாவி கொடுத்த பொம்மையைப் போலக் குதித்துக் கொண்டிருக்கக் கூடாது.

**லேனா தமிழ்வாணன்**

# பிணைமுறிகள் வழங்குவதற்கு கோலம் கிடையாது - இந்திரஜித்



பிணைமுறிகள் எப்போது தேவைப்படுகின்றனவோ, அப்போதெல்லாம் வழங்கப்படும் என்று பதிலளித்த மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, பிணைமுறிகளை வழங்குவதற்கான கோலமொன்று கிடையாது எனத் தெரிவித்தார்.

எனினும் கடந்த காலங்களில் பிணைமுறிகள் வழங்கப்பட்ட சடுதியான நிலைமையைப் பார்த்து ஆச்சரியமடைவதாகவும் தெரிவித்தார்.

திறைசேரிப் பிணைமுறிகள் சம்பந்தமாக விசாரிப்பதற்காக ஜனாதிபதியால் அமைக்கப்பட்டுள்ள திறைசேரி முறிகளை வழங்குதல் தொடர்பாகப் பரீட்சித்துப் பார்க்கும் மற்றும் புலனாய்வு செய்யும் ஜனாதிபதி புலனாய்வு ஆணைக்குழு, தனது பகிரங்க அமர்வுகளை, கடந்த 19 ஆம் திகதி ஆரம்பித்தது. இந்த அமர்வு, முற்பகல் 10.30 இற்கு ஆரம்பமாகும் என்றும், அதன்போது ஆஜராகுமாறும் அவருக்கு, ஏற்கனவே நோட்டீஸ் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

எனினும், ஆணைக்குழுவின் அனுமதியை பெற்று அவர் சுமார் 45 நிமிடங்கள் தாமதித்தே, ஆணைக் குழுவுக்கு வருகைதந்தார். உயர் நீதிமன்ற நீதியரசர்களான கே.டி.சித்திரசிறி, பிரசன்ன சுஜீவ ஜயவர்தன மற்றும் ஓய்வுபெற்ற பிரதி கணக்காய்வாளர் நாயகம் கந்தசாமி வேலுப்பிள்ளை ஆகியோர் அடங்கிய ஆணைக்குழுவின் முன்னிலையில் மத்திய வங்கியின் தற்போதைய ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, சாட்சியமளித்தார்.

சட்டமா அதிபர் திணைக்கள வழக்குரைஞர்களும் பிணைமுறி விவகாரத்துடன் சம்பந்தப்பட்ட பேர்பெச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனத்தின் சட்டத்தரணிகளும் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.

முதல்நாளான நேற்று முன்தினம் மத்திய வங்கியின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் திறைசேரிப் பிணைமுறிகள் சம்பந்தமாகவும், விளக்கங்கள் கோரப்பட, அவற்றுக்கு ஆளுநர் பதிலளித்தார்.

அரச கடன் தொடர்பாகவும் உள்நாட்டுக் கடன் தொடர்பாகவும் மத்திய வங்கியின் எந்தெந்தப் பிரிவுகள் செயற்படுகின்றன, ஒவ்வொரு பிரிவிலும் எவ்வகையான உட்பிரிவுகள் காணப்படுகின்றன என்பது தொடர்பாக, ஆளுநர் விளக்கமளித்தார். உள்நாட்டுக் கடன்கள் தொடர்பாக திறைசேரிக் கடன், திறைசேரிப் பிணைமுறி ஆகியன காணப்படுகின்றன எனவும், திறைசேரிக் கடன்கள், நாட்கணக்கானவை எனவும் பிணைமுறிகள், 2 தொடக்கம் 30 ஆண்டுகள் வரையான காலத்துக்குச் செல்லக்கூடியன எனவும், கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போது ஆளுநர் தெரிவித்தார்.

அப்போது ஆணையாளரான நீதியரசர் பிரசன்ன சுஜீவ ஜெயவர்த்தன, 50 ஆண்டுகளுக்குப் பிணைமுறி வழங்கப்படுவது வழக்கமா?, அவ்வாறான நினைவு உள்ளதா? என ஆளுநரிடம் வினவினார்.

அதற்கு அவர், "அவ்வாறான ஒன்று பற்றி எனக்குத் தெரியாது" என்று பதிலளித்தார். பிணைமுறி தொடர்பாக கொள்கை முடிவை, அரசாங்கமே எடுக்குமென விளங்கவைத்த ஆளுநர், முகவராகச் செயற்படுவது மாத்திரமே மத்திய வங்கியின் செயற்பாடு எனத் தெரிவித்தார். (இ-7)

# தனியார் நீதிமன்றமா இது கூடத்தெரியாதா ?

## ஜே.வி.பியை விமர்சித்த சபை முதல்வர்



(கொழும்பு)

'உலகில் எந்த நாட்டிலும் நீதித்துறையை தனியார் மயப்படுத்தும்முறை இல்லை. இதனைக் கூட அறியாதவர்கள் உள்ளமைதான், மக்கள் விடுதலை முன்னணியின் இன்றைய நிலைக்கு காரணம்" என, சபை முதல்வரும் உயர்கல்வி அமைச்சருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "இலங்கையில் கல்வி கற்கும் மருத்துவ மாணவர்கள், பட்டம் பெற்றதும் நாட்டை கைவிட்டு வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்று விடுவதால் தான், நாட்டில் வைத்தியர்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. அதன்காரணமாகத்தான் தனியார் மருத்துவக் கல்லூரிகளை உருவாக்க இடமளிக்க வேண்டியுள்ளது" என்றார். அதன்போது குறுக்கிட்டுக் கேள்வியெழுப்பிய பிமல் ரத்நாயக்க எம்.பி,

"மருத்துவர்கள் பற்றாக் குறையினால் தனியார் மருத்துவ கல்லூரி உருவாக்க அனுமதி வழங்க நடவடிக்கை எடுத்தால், இலங்கையில் விசாரணையின்றி காலதாமதமாகக் காணப்படும் வழக்குகளை விசாரிக்க தனியார் நீதிமன்றங்களை உருவாக்க வீரர்களா?" என்றார்.

அதற்குப் பதிலளித்த உயர் கல்வியமைச்சர், "உலகில் எந்த நாட்டிலும் நீதித்துறையை தனியார் மயப்படுத்தும் முறை இல்லை. இதனைக் கூட நீங்கள் அறிந்திருக்கவில்லை. இவ்வாறானவர்கள் இருப்பதால் தான், 35 உறுப்பினர்களை நாடாளுமன்றத்தில் கொண்டிருந்த மக்கள் விடுதலை முன்னணி, இன்று 5 உறுப்பினர்களாகக் குறைவடைந்துள்ளது" என்று கடுமையாக விமர்சித்தார். (இ-7)

# பல மில்லியன் ரூபாய் பெறுமதியான சிகரெட்டுகள் துறைமுக கொள்கலனில்

மீன்தொட்டிகள் என்ற பெயரில், நாட்டுக்குள் கொண்டு வர முயலப்பட்ட பல மில்லியன் ரூபாய் பெறுமதியான சட்டவிரோத சிகரெட்டுகள் அடங்கிய கொள்கலன், கொழும்புத் துறைமுகத்தில் பல வாரங்களாகக் காணப்படுவதாக, அதிகாரிகள் தெரிவித்துள்ளர்.

20 அடி நீளமான அந்தக் கொள்கலன், சிங்கப்பூரிலிருந்து கப்பல் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டு, ஜனவரி மாதத்தின் மூன்றாம் வாரத்தில், கொழும்பை வந்தடைந்துள்ளது.

மீன்தொட்டிகளே அந்தக் கொள்கலனில் காணப்படுவதாக, தெரிவிக்கப்படுகிறது.


எனினும், அதிகாரிகளுக்கு ஏற்பட்ட சந்தேகம் காரணமாக, கொழும்பை வந்தடைந்த மூன்றாவது நாளுக்குள், அந்தக் கொள்கலன் திறக்கப்பட்டு, சோதனையிடப்பட்டுள்ளது. அதன்போதே, சட்டவிரோத சிகரெட்டுகள் காணப் பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது.

கொள்கலனின் திறக்கும் பகுதிக்கு அண்மையாக, மீன்தொட்டிகள் வரிசைக்கிரமமாக அடுக்கப்பட்டுக் காணப்பட்ட போதிலும், அவற்றின் பின்னால், சிகரெட்டுகள் காணப்பட்டுள்ளன.

பல வாரங்களாகியும், அந்தக் கொள்கலன் ஏன் துறைமுகத்தில் காணப்படுகிறது என அதிகாரிகளிடம் வினவியபோது, குறித்த கொள் கலனுக்குள் காணப்பட்ட சட்டவிரோத சிகரெட்டுகளை, சுங்கத் திணைக்கள அதிகாரிகள் முதலில் தவறவிட்ட நிலையில், இரண்டாவது தடவையாகச் சோதிக்க வேண்டியேற்பட்டதாகவும், ஆரம்ப கட்ட விசாரணைகள் நிறைவடைந்த பின்னர், இவை ஊடகங்களுக்கு விரைவில் காண்பிக்கப்படுமெனவும், அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-7)

# அனைத்துக் கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் அரசியல் தீர்வை வழங்கும் சாத்தியம்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



இரண்டு பிரதான கட்சிகள் மற்றும் ஏனைய கட்சிகளின் இணக்கப்பாட்டுடன் அரசியல் தீர்வை வழங்கும் சாத்தியம் இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அனைத்து மக்களையும் ஒன்றிணைத்து ஒரே இலங்கையை உருவாக்குவதே நாட்டின் பெரும்பாலான மக்களின் விருப்பமாகுமென்றும் பிரதமர் தெரிவித்தார்.

அமரர் விஜயகுமாரதுங்கவின் 29 ஆவது நினைவு தின வைபவத்தில் கலந்து கொண்டு பிரதமர் உரையாற்றினார்.

கொழும்பு பிஷப் கல்லூரி அரங்கில் விஜயகுமார மன்றம் இந்த வைபவத்தை நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்தது.

பெரும்பாலான மக்களின் கருத்திற்கு செவிசாய்த்து இலங்கையின் அடையாளத்தைப்பேணி அனைத்து இனங்களுக்கும் மதங்களுக்கும் கலாசாரங்களுக்கும் மதிப்பளிக்கக்கூடிய ஒரே இலங்கையை உருவாக்குவதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

யுத்தத்தின் பின்னர் நாட்டில் சமாதானம் ஏற்படும் என மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால், அந்த எண்ணம் ஈடேறவில்லை. அதனால், 2015 ஆம் ஆண்டில் மக்கள் இரண்டு பிரதான கட்சிகளிடமும் இந்த சவாலை ஒப்படைத்தனர்.

இனவாதத்தையும் மத பேதங்களையும் ஏற்படுத்த சில சக்திகள் முயற்சித்தாலும் அது வெற்றியளிக்கவில்லை. இனங்களையும் மதங்களையும் அடிப்படையாகக் கொண்ட அரசியலை ஒரே யடியாக நிறைவுக்கு கொண்டு வர முடியாது.

நாட்டை முன்னேற்ற கிடைத்த இந்த இறுதி சந்தர்ப்பத்தின் மூலம் பயனடைந்து கொள்ள வேண்டும். நாட்டின் பெரும்பாலான மக்களினதும் உலக நாடுகளினதும் முழுமையான ஒத்துழைப்பு இலங்கைக்கு கிடைத்துள்ளது.

அதிகாரத்தை பகிர்ந்தளிப்பது தொடர்பில் இரண்டு பிரதான கட்சிகளும் 2015 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்தன என்றும் தெரிவித்தார். (இ-3-7)

# புலிகளின் தொப்பிகளை லண்டனுக்கு அனுப்பியவர்களுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் சின்னம் பொறிக்கப்பட்ட தொப்பிகளை லண்டனுக்கு அனுப்ப முயற்சித்தவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

தொப்பிகளை அனுப்ப முயற்சித்த போது கைது செய்யப்பட்ட விடுதலை புலிகளின் முன்னாள் குற்றப்புலனாய்வு உறுப்பினர் உட்பட 3 பேர் மீண்டும் விளக்கமறியலில் வைக்க நேற்று உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர்கள் நேற்று கொழும்பு மேலதிக நீதவான் அருனி ஆட்டிகல முன் ஆஜர்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, நீதிமன்றத்தில் அடிப்படை எதிர்ப்பை தாக்கல் செய்து பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் இந்த வழக்கை தொடர்ந்து முன்னெடுத்து செல்ல முடியாது என தெரிவித்துள்ளார்.

எனினும் நீதவான் அந்த அடிப்படை எதிர்ப்பை நிராகரித்துள்ளார். (இ-7)

# ஆசியாவின் சிறந்த உணவகங்கள்; இலங்கைக்கு இரண்டு இடங்கள்

பாங்கொங்கில் இடம்பெற்ற உலக உணவகங்கள் தொடர்பான விருது வழங்கும் விழாவில் இலங்கையைச் சேர்ந்த இரண்டு உணவகங்களுக்கும் கௌரவம் அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய ஆசியாவின் சிறந்த 50 உணவகங்களின் பட்டியலில் 29 ஆவது இடத்தில் மினிஸ்ரி ஒப் கிரப் மற்றும் 49 ஆவது இடத்தில் நிஹோன் பஷி என்ற இலங் கையில் இயங்கும் இரு உணவகங்கள் இடம்பிடித்துள்ளன. இந்தப் பட்டியலில் முதலிடத்தை தாய்லாந்தைச் சேர்ந்த உணவகம் கைப்பற்றியுள்ளது. (இ-7)

# 74 அகதிகளின் சடலம் மீட்பு



வடஆபிரிக்க நாடான லிபியாவிலிருந்து அகதிகளாக தப்பி செல்ல முயன்ற 74 பேரின் சடலங்கள் கரை ஒதுங்கியுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. லிபியாவின் தலைநகர் திரிபோலிக்கு அருகே கடலோரத்தில் சேதமடைந்த படகில் சில உடல்கள் உள்ளது தெரியவந்தது.

அதைத் தொடர்ந்து, சர்வதேச தொண்டு நிறுவனங்கள் மேற்கொண்ட சோதனை யில், படகு மற்றும் கடலோரப் பகுதியில் இருந்த 74 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

லிபியாவில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு போர் மற்றும் நிலையான அரசு இல்லாத காரணத்தால், அங்குள்ளவர்கள், ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

இதை பயன்படுத்தி பலர், அதிக பணத்தை பெற்று, படகுகள் மூலம், மிகவும் ஆபத்தான மத்திய தரைக்கடல் வழியாக அழைத்துச் செல்கின்றனர்.

அவ்வாறு செல்லும் போது, படகுகள் விபத்தில் சிக்கி, பலர் உயிரிழப்பது தொடர் கதையாகி வருகிறது. (இ-12)

# மலேசியாவில் இலங்கையர் அடித்துக் கொலை

## இந்தியர் கைது

மலேசியாவில் இலங்கையர் ஒருவரைக் கொலை செய்ததாக, இந்திய ஊழியர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 9ம் திகதி காலை சுமார் 9மணியளவில் இந்தக் கொலை இடம் பெற்றுள்ளதாக குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, சம்ப வத்தில் சந்தேகநபருடன் பணிபுரிந்த 50 வயதான, சுமித் நிஷாந்த சில்வா என்ற இலங்கையரே மரணித்துள்ளதாக வெளிநாட்டு ஊடகச் செய்திகள் தெரிவித்துள்ளன.

மேலும், இது தொடர்பில் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் 30 வயதான துர்க ரோகெட்டலி எனும் இந்தியப் பிரஜையாவார். ஊழியர்கள் தங்கும் விடுதியில் வைத்து, நடைபெற்ற வாக்கு வாதம் வலுவடைந்ததை அடுத்து, துர்க ரோ கொங்கிரீட் துண்டு ஒன்றினால் சுமித்தைத் தாக்கியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திலேயே சுமித் நிஷாந்த பலியாகியுள்ளதாக கூறப்படுகின்றது. (இ-7)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் கோணேசபிள்ளை சுந்தரலிங்கம் (மேத்திரியார்)

தோற்றம் : 1935.06.09
மறைவு : 2017.01.25

உங்கள் நீங்கா நினைவுகளை மனதில் பதித்து ஆண்டவன் அடியில் சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.

கடந்த 25.01.2017 வல்வெட்டித்துறையில் காலமான கோணேசபிள்ளை சுந்தரலிங்கம்(மேத்திரியார்) அவர்களின் 31ஆம் நாள் நினைவஞ்சலி 24.02.2017 நாளை வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/7632)

எ.ஜி.எ.ஒழுங்கை, நெடியகாடு, வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்
மகன் (077 300 1875)
மருமகன் (077 310 782)


# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 995

Search for people, places and things | Nagendram Home

### சுதா




### சிந்து




### காண்டீபன்



சின்னம்மா..ஏன் மூணு தட்டு தட்டிட்டு நிறுத்திட்டாங்க..?


உள்ளே இருந்து. 'yes..come in' என்று சத்தம் வந்தத கேட்டு பயந்துட்டாங்களாம்.

### குகதாசன்

மனைவி : நம்ம பையன் எங்க பணம் வைத்தாலும் எடுத்திட்டு போயிடறாங்க...
கணவன் : அவனுடைய காலேஜ் புத்தகத்தில் வை... பத்திரமாக இருக்கும்.



### துவாரகன்




### கஜரூபன்

உனது கடைசி ஆசை என்ன?.




சரியாக வாதாடாமல் எனக்கு தூக்குத் தண்டதனை கிடைப்பதற்குக் காரணமான எனது வக்கீலையும் என்னுடன் தூக்கில் போட வேண்டும்.

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# கொழும்பு நகரிலும் பெரிய கொழும்பு நகரிலும் (Megapolis) தமிழர்கள் ஒரு பார்வை



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

கொழும்பு நகர தமிழ்மக்களும் பெரிய கொழும்பு தமிழ் மக்களும் பல்வேறு சமூக- பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கி வரு கின்றனர். காலத்துக்குக் காலம் பாதுகாப்பு பிரச்சினைகளும் தலை தூக்கி வாழ்வின் ஸ்திரத்தன் மையை பாதிப்பதைக் கண்டோம். நகரில் தமிழ் மக்களின் வேலைவாய்ப்பு , பொருளாதார நடவடிக்கைகளில் பங்கு குறைவடைந்துள்ளன. முன் னர் அரச சேவை முக்கிய இடம் வகித்த தமிழர்கள் இன்று மிகச் சிறியளவிலேயே இத்துறையில் பங்காற்றுகின்றார்கள். கொட்டாஞ்சேனை , வெள்ளவத்தை போன்ற இடங்கள் தமிழ் அரசாங்க சேவகர்களால் கட்டி வளர்க்கப்பட்ட இடங்களாகும். அரச துறையைப் போல முன்னர் குறிப்பாக மொத்த வியாபாரத்தில் தமிழர்களின் பங்கு உயர்வாக இருந்தது.இன்று நகர வர்த்தகத்தில் தமிழர்களின் பங்கு வெகுவாக குறைந்துவிட்டது. இன்று பெரும் எண்ணிக்கையான தமிழ் குடும்பங்கள் கொழும்பில் தங்களின் ஓய்வூதியத்திலும், வெளிநாடுகளில் வசதியும் பிள்ளைகளின் உதவியு டன் வாழ்வதைக் காணலாம் . தொழில்துறைகளில் கூடுதலாக தனியார் நிறுவனங்களில் நடுத்தர கீழ் நிலைப் பதவிகளிலேயே தமிழர்கள் தொழில் புரிவதைக் காணமுடி கின்றது. பொருளாதாரத்திலும் தொழில் துறையிலும் தமிழர்கள் மத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மேலும் வீட்டு வசதியை நோக்கின் கொழும்பு வடக்கு, கொழும்பு மத்தி மற்றும் கொலன்னாவை பகுதியில் வாழும் தமிழ் மக்கள் மிகவும் நெருக்கமான குடியிருப் புகள் மற்றும் சேரி, குப்ப வாழ்க் கையை அனுபவிக்கின்றனர். அரச வீடமைப்பு திட்டங்களில் இவர்களுக்குரிய பங்கு கிடைக்கின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

கொழும்பு நகரில் சரி பெரிய கொழும்பு தமிழ் பிள்ளைகள் தங்கள் தாய்மொழியான தமிழ் மொழியில் கல்வியைப் பெறுவதில் மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். மேற்கு மாகாணத்தில் 75 தமிழ் மொழி பாடசாலைகளும் மற்றும் இரு மொழிப் பாடசாலைகள் இருக்கின்ற பொழுதும் இப் பாடசாலைகள் பௌதீக, ஆசிரியர் வளம் குறைந்ததாகவும், க.பொ.த உ/த வகுப்புகளில் விஞ்ஞானம் கற்க முடியாதது மான நிறுவனங்களாக வுள்ளன. கம்பஹா மாவட்டத்தில் வத்தளை–ஜா–எல–களனி பிரிவு களில் 60,000 தமிழ் மக்கள் வாழும் பொழுது அங்கு எத்தனை தமிழ் பாடசாலைகள் இருக்கின்றன. இத னால் இப் பகுதி தமிழ் பிள்ளை கல்வியை பெறுவதில் பெரும் சிரமம் கொள்கின்றார்கள். சிறிய எண்ணிக்கை உள்ளூரிலும் ஒரு பகுதி பம்பலப்பிட்டிக்கு செல்ல இன் னொரு பிரிவு முஸ்லிம் பாடசா லைகளிலும் இன்னொரு பிரிவு சிங்கள மொழியிலும் இன்னொரு பிரிவு தேசியப் பாடசாலைகளிலும் கல்வி கற்க வேண் டியதாகவுள்ளது. அதனால் இப் பிள்ளைகள் தங்கள் மொழி, சமயம், பண்பாடு போன்ற பலவற்றை இழக்க வேண் டியுள்ளது. வத்தளையில் தமிழ் மகா வித்தியாலயம் அமைக்கப்படும் என்று கடந்த பல வருடங்களாக அரசாங்கம், அரசியல் வாதி கள் கூறி வந்தனர். சில மாதங்க ளுக்கு முன்னர் அத்திபாரமும் போடப்பட்டது. எனினும் இத் திட்டம் கிடப்பில் போடப்பட்டதாக பேசப்ப டுகின்றது. இது போலவே களுத் துறை மாவ்ட்டத்தில் மத்துகம பகுதி யில் பெரிய தமிழ் பாடசாலை அமையவிருக்கிறது. அமைக்கப் போகிறோம் என பெரிய எடுப்பில் பேசப்பட்டது. முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை.

இதேபோல வெள்ளவத்தையில் அமரர் மகேஸ்வரனால் ஒரு பெரிய தமிழ்ப் பாடசாலை அமைக்க முற்பட்ட பொழுதும் அவருடைய அகால மரணத்தினால் இத் திட்டம் கைகூடவில்லை.

மேல் மாகாணத்தில் தமிழ் கல்வியை முன்னேற்ற கொழும்பு வல யத்திலுள்ள 20 பாடசாலைகள், ஹோமாகம வலயத்திலுள்ள 5 பாட சாலைகளும், பிலியந்தல கல்வி வலயத்திலுள்ள 3 பாடசாலைகளும், ஸ்ரீ ஜயவர்த்தன புர கல்வி வலயத்திலுள்ள 2 பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பு வலயத்தில் 3 பாடசாலைகளும் களனி வலயத்தில் மூன்று பாடசா லைகளும் இருக்கின்றன. இவ்விரண்டு வலயத்திலும் இருக்கும் தமிழ் மாணவர்களுக்கு போதிய பாடசாலைகள் இல்லை. இதனால் இவ்வ லயத்திலும், நீர்கொழும்பு வலயந் திலும் புதிய பாடசாலைகள் அமைக் கப்பட வேண்டும். குறிப்பாக வத் தளை தமிழ் மகா வித்தியாலயம் காலதாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டும்.

களுத்துறை மாவட்டத்தில் 39 தமிழ் பாடசாலைகள் இருப்பினும் இவைகள் மிகவும் வளர்ச்சியடைந்த சிறு பாடசாலைகள் தோட்டப்புற பாடசாலைகளே அதிகம். இவைக ளுள் க.பொ.த உ/தரம் கற்க கூடிய பாடசாலைகள் ஒரு சிலவே இருக்கின்றன. அதிலும் க.பொ.த உ/த விஞ்ஞானம் பிரிவு யாதெரு பாடசாலையிலும் இல்லை இப் பகுதி மக்கள் கொழும்பு பாடசாலைகளி லேயே உயர்தர வகுப்புகளை கற்க முடியும். பல்கலைக்கழக அனுமதி யில் கொழும்பு மாவட்ட வெட்டுப்புள்ளி களுத்துறை மாவட்ட வெட்டு புள்ளியிலும் உயர்வாகும்.

உரோமன் கத்தோலிக்க மக்கள் தொகையிலும் கிறிஸ்தவர்கள் தொகை யிலும் தமிழ் மக்களின் பங்கு ஏறக் குறைய அரைவாசிக்கும் கிட்டியதா கும்.இச் சமய நிறுவனங்களால் நிர் வகிக்கப்படும் பெரிய கல்லூரிகளில் சென்.பீற்றர் கல்லூரி, சென்.ஜோசப் கல்லூரி, பம்பலப்பிட்டி திருக்குடும்பக் கன்னியர் மடம், கொட்டாஞ்சேனா திருக்குடும்ப கன்னியர் மடம், சென். தோமஸ் கல்லூரி, கொழும்பு லேடீஸ் கல்லூரி, கொழும்பு விசப் லேடீஸ் கல்லூரி, கொழும்பு சென்.பிறெஞ்சட் கன்னியர் மடம், கொல்பிட்டி மெதடிஸ் பெண்கள் பாடசாலை, வெஸ்லி கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கூட நகர தமிழ் மாணவர்கள் தொகைக்கு ஏற்ப வகுப்புக்கள் ஒதுக்கப்படவில்லை.

இச் சமய நிறுவனங்கள் நடத்தும் பெரிய பாடசாலைகளில் ஒவ்வொரு பிரிவிலும் ஒரு வகுப்புமாத்திரமே தமிழ் மொழிப் பிரிவுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதுபோல பெரிய அரச கல்லூரிகளிலும் றோயல் கல்லூரி, டி.எஸ்.சேனநாயக்க , இசிபதானா கல்லூரிகளில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட தமிழ் மொழி பிரிவு வகுப்புக்களே இருக்கின்றன.

இக் கல்லூரிகள் தங்கள் சமயப் பிரிவினர் ஒரு பகுதியினரது பிரச் சினையையும் கல்லூரி இனப் பரம்பலை கவனித்திருப்பின் தமிழ் வகுப்புகளை அதிகரித்திருப்பர். இனி யாவது காலம் தாழ்த்தாது தமிழ்ப் பிள்ளைகளுக்கு நியாயம் கிடைக் கச் செய்யுங்கள்.

மேல் மாகாண தமிழ்ப் பாடசாலைகள், இருமொழிப் பாடசாலைகள் விருத்தி செய்யப்படாவிட்டால் தாய் மொழிக் கல்வியை இழப்பதுடன் சர்வதேசப் பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்பி பெரும் செலவை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

மேல் மாகாண உள் வலயத்தில் ஒரு சில பாடசாலைகள் அபிவிருத்தி செய்தால் தான் இவ் வலயத்தில் சிதறி வாழும் தமிழ்ப் பிள்ளைகளுக்கு நல்ல கல்வி கிட்டும்.

வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரியே இலங்கையில் இந்துக்களால் நடத்தும் ஒரேயொரு தனியார் பெண்கள் கல்லூரியாகும். இந்த நிறுவனத்தை வளர்த்தெடுத்த வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகத்திற்கும் கழகத்தின் இன்றைய தலைவர் திருமதி சிவநந்தினி யோகேந்திரா துரைசாமி சமூகத்தின் பாராட்டுக்குரியவர்.

மேலும் மருதானை தொழில் நுட்பக் கல்லூரி, இரத்மலானை தொழில் நுட்பக் கல்லூரிகளில் தொழில் நுட்பக் கல்வியில் பல கற்கை நெறிகள் தமிழ் மொழியில் இடம்பெறவேண்டும்.

மேற்கு மாகாண தமிழ்ப் பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்த மத்திய அரசு மாகாண சபை மற்றும் கல்வியியலாளர்கள் , சிவில் சமூகத்தினர் கடுமையாகவும் மேன்மையாகவும் உழைக்க வேண்டும்.

மேற்கு மாகாணத்தில் 4 இலட்சம் தமிழ் மக்கள் வாழ்கின்ற பொழுதும் இம் மக்களின் தலைவர்கள் வத்தளையில் ஒரு தமிழ்ப் பாடசாலையை அமைக்க முடியாத கையாலாகாத நிலையை நோக்கும்பொழுது மிகவும் கவலையாக இருக்கின்றது.

கொழும்பு வாழ் தமிழ் மக்கள் மொழிப் பிரச்சினையாலும் மற்றும் பல்வேறு பிரச்சினைகளால் அரச நிறுவனங்களில் மருத்துவ வசதி, பெற முடியாதுள்ளது. தமிழ் மக்கள் மருத்துவ வசதியைப் பெறுவதற்கு தனியார் துறையை நாட வேண்டியுள்ளது. இதனால் தமிழ் மக்கள் பெருமளவு செலவு செய்து கடனாளியாகின்றார்கள். தமிழ் மக்கள் அரசு மருத்துவ வசதிகளைப் பெற பின் நிற்கக்கூடாது. இது போல அரசும் தமிழ் மக்கள் அரச மருத்துவ சேவையைப் பெறுவதில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நிவர்த்திக்க வேண்டும்.

இதுபோல தமிழ் மக்களின் மரண வீட்டுச் செலவு கொழும்பில் மிகவும் உயர்வாக இருக்கின்றது. மரண சங்கங்கள் அமைப்பதன் மூலம், சமய நிறுவனங்களின் உதவி மூலம், சமூக விழுமிய மாற்றங்கள் அமைப்பதன் மூலம் இதற்குத் தீர்வு காண முடியும்.

கொழும்பு நகரில் வாழும் தமிழ் மக்கள் இப் பிரதேசத்துக்குரிய நிறு வனங்களில் குறிப்பாக மாநகர சபை பிரதேசசபைகள், மாவட்ட நிர்வாகம், கல்வி நிர்வாகம் போன்ற விடயங்களில் கூடிய கரிசனை கொண்டு தங்களுக்குரிய இடத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சமூக உணர்வில்லாமலும் பங்கு பற்றாமலும் இருந்தால் யாரும் எதையும் கொடுக்கப் போவதில்லை.

கொழும்பு வாழ் மக்கள் தங்களுக்குரிய பாராளுமன்ற பிரதிநிதிகளை, மாகாணசபை பிரதிநிதிகளை உள்ளூராட்சி பிரதிநிதிகளை சரியாக தெரிவு செய்ய பழகிக் கொள்ள வேண்டும். 1947-1984 வரையும் கொழும்பு மாவட்டத்திலிருந்து ஒரு தமிழரும் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படவில்லை.

1947-1960 இற்கு இடையில் கொழும்பு மத்திய தொகுதியில் இருந்தும் கொழும்பு வடக்கு தொகுதியிலிருந்தும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படக் கூடிய வாய்ப்பு இருந்தும் தமிழர்கள் அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்த தெரியாது விட்டார்கள். 1960 இல் கொழும்பு மத்திய தொகுதி மூன்று அங்கத்தவர் தெரிவு செய்யவும் கொழும்பு தெற்குத் தொகுதி இரட்டை அங்கத்தவர் தொகுதியாகவும் உருவா க்கப்பட்ட நிலையிலும் கூட தமிழர் ஒருவராவது தெரிவு எந்தவொரு தொகுதிகளிலிருந்தும் தெரிவு செய்யப்படவில்லை. திரு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும் திரு. வேணாட் சொய்சாவும் 1960 ஜூலையில் போட்டியின்றி இத்தொகுதியில் தெரிவு செய்யப்பட்டார்கள்.

1984 இல் முதல் முதலாக திரு செல்லச் சாமி கொழும்பு மத்திய தொகுதியில் இருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். விகிதாசாரத் தேர்தல் முறை திரு செல்லச்சா மியும், திரு.சி.இராசதுரையும் தெரி வாகக்கூடிய நிலையிலும் ஒரு வரே பாராளுமன்றத்துக்குத் தெரிவானார். ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு திரு. பி.பி. தேவராஜனும் திரு. ஆர். யோகராஜ னும் பாராளுமன்றத்துக்குத் தெரி வானார்கள். அடுத்த தேர்தலில் திரு. மகேஸ்வரனும் திரு. மனோ கணேசனும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

திரு.ரி.மகேஸ்வரனின் அகால மரணத்தால் கொழும்பு மாவட்டம் செயல்திறன் கொண்ட பாராளுமன்ற அங்கத்தவரை இழந்தது. இவர் உயிருடன் இருந்திருந்தால் கொழும்பு வாழ் தமிழ் மக்கள் பெரும் நன்மையடைந்திருப்பார்கள். இவர்களைத் தொடர்ந்து திரு. பிரபா கணேசனும் , தற்பொழுது மீண்டும் மனோகணேசனும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற அங்க த்தவராக சேவை செய்கின்றார். கொழும்பு மாவட்டத்தில் இரண்டு பாராளுமன்ற தமிழ் அங்கத்தவர்களை பெற தகுதி இருந்தும் தமிழ் மக்களின் பொறுப்பற்ற வாக்களிப்பால் ஒரு பாராளுமன்ற அங்கத்தவரை இழந்து நிற்கின்றார்கள். இதனால் தமிழ் மக்களினது அபி விருத்தியே தடைப்படும்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் இருந்து மேல்மாகாணசபைக்கு தமிழ் மக்கள் தங்கள் மக்கள் தொகைக்கு ஏற்ற பிரதிநிதிகளை தெரிவு செய்யவில்லை.

கம்பஹா, களுத்துறை மாவட்டங்களில் யாரும் தெரிவு செய்யப் படவில்லை என்பது கவலைக்குரியது. இது போல கொழும்பு மாநகரசபை மற்றும் உள்ளூராட்சித் சபைகளில் தங்கள் மக்கள் தொகைக்கு ஏற்ற பிரதிநிதிகளை தமிழ் மக்கள் ஒற்றுமையாகத் தெரிவு செய்யவில்லை. மக்கள் பிரதிநிதிகள் இல்லாது விட்டால் அச்சமூகம் அபிவிருத்தியில் பின் நிற்கும்.

மேல் மாகாணத்தில் கொழும்பு திம்பிரிகசாய, தெஹிவளை, இரத் ம லான, கொலன்னாவ, வத்தள, நீர்கொழும்பு பிரதேச செயல கங்கள் இரு மொழி நிர்வாகப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் நடைமுறையில் இப்பிரதேச செயலகங்களில் தமிழ் மொழி சிறப்பாக அமுல்படுத்துவதில்லை. இது குறித்தும் தமிழ் மக்கள் பெரிதும் கவலைப்படுவதாகவும் தெரிய வில்லை. கொழும்பு மாநகர சபைப் பகுதியில் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் வாழ்ந்த பொழுதிலும் தமிழ்மொழி அங்கும் சிறப்பாக அமுல்படுத் தப்படுவதில்லை. இதேபோல் தெஹிவளை, கொலன்னாவ, வத்தள, நீர்கொழும்பு உள்ளூராட்சி மன்றங்களிலும் தமிழ்மொழி அமுலாக்கல் மிகவும் குறைவு.

கொழும்பு நகர தமிழ் மக்கள், மேல்மாகாணத்தமிழ் மக்கள் தங்களது உரிமைகள், வாழ்வாதார மேம்பாட்டுக்கும் சமூக மேம்பாட்டுக்குரிய வசதி வாய்ப்புக்களை முழுமையாக மத்திய அரசிடம் இருந்தோ, மாகாண சபையிடம் இருந்தோ பெறுவதில் கடின ஈடுபாடு காட்டவில்லை. சமூகம் தனது தேவைகள் குறித்து துடிப்பாக இல்லாது இருந்தால் இவர்களது முன்னேற்றமே தடைப்படும். மேற்கு மாகாண தமிழ் மக்களின் மேம்பாட்டுக்கு தமிழ் தலைமைகள், சிவில் சமூக அமைப்புகளின் கடின உழைப்பும் இன்று தேவையான தொன்றாகும். (முற்றும்)

# மக்கள் விரும்பும் வகையில் என்னுடைய எதிர்கால அரசியல் பயணம் இருக்கும்

## ஓ.பன்னீர்செல்வம் அறிவிப்பு

மக்கள் விரும்பும் வகையில், என்னுடைய எதிர்கால அரசியல் பயணமும், மக்கள் சேவையும் இருக்கும் என்று முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் உறுதிபட தெரிவித்துள்ளார்.

முன்னாள் முதலமைச்சரும், அ.தி.மு.கவின் புதிய அணிக்கு தலைமை ஏற்று இருக்கும் ஓ.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை செய்தியாளர்களை சந்தித்த போதே மேற்குறித்தவாறு தெரிவித்துள்ளார். மேலும் செய்தியாளர்கள் எழுப்பிய பல கேள்விகளுக்கு பதிலளித்த அவர் கூறுகையில், 'எதிர்வருகின்ற 24ஆம் திகதி மறைந்த 'அம்மா' ஜெயலலிதாவின் பிறந்த தினம் கொண்டாடப்படவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

11 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், மேலும் பல சட்டமன்ற உறுப்பினர்கள் எனக்கு ஆதரவு அளிக்க நிச்சயமாக முன்வருவார்கள்.

உண்மையான அ.தி.மு.கவை நிர்ணயிப்பது அ.தி.மு.கவின் அடிப்படை தொண்டர்களும், மக்களும்தான். எங்களுக்கு அ.தி.மு.க. தொண்டர்கள் மற்றும் மக்களின் ஆதரவு நூற்றுக்கு நூறு சதவீதம் இருக்கிறது.

இதற்கெல்லாம் காலம் நிச்சயம் பதில் சொல்லும். எம்.ஜி.ஆர். மறைந்த போது ஜானகி அணி, ஜெயலலிதா அணி என்று 2 அணிகள் இருந்தன. இதில் ஜெயலலிதாவுக்கு சட்டமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இல்லை. ஆனால் தொண்டர்கள், மக்களின் ஆதரவு முழுமையாக இருந்தது.

அதேபோல தான் எங்களிடமும் இப்போது சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவு இல்லையென்றாலும் அம்மாவின் தொண்டர்களின் முழு ஆதரவும் இருக்கிறது.


தமிழ்நாடு முழுவதிலும் இருந்து மக்கள் எனக்கு பரிபூரண ஆதரவை தொலைபேசிகளிலும், நேரிலும் தெரிவித்து வருகின்றனர்.


ஜெயலலிதா மீது மக்கள் வைத்த நம்பிக்கையை, அவருடைய உண்மை தொண்டனாகிய என்மீது வைத்திருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும், பொறுப்பையும் கொடுத்திருக்கிறது.

அதற்கேற்றாற்போல் என்னுடைய எதிர்கால அரசியல் பயணமும், மக்கள் சேவையும் இருக்கும்' என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)

# யுத்த அங்கவீனர்களை கணக்கிட காலம் தேவை

## மீள்குடியேற்ற அமைச்சர் கூறுகிறார்





வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த காலப்பகுதியில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக அங்கவீனமடைந்தவர்கள் தொடர்பில் கணக்கிடுவதற்கு, இன்னும் இரண்டுவார கால அவகாசம் வேண்டுமென, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் கோரி நின்றார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் நேரத்தின் போது, ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும் எம்.பியுமான டக்ளஸ் தேவானந்த கேட்டிருந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற யுத்தத்தின் காரணமாக அங்கவீனர்களான பலர் உள்ளனர்.

அவர்களில், குறிப்பிடத்தக்கதொரு தொகையினரின் முள்ளந்தண்டுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தின் காரணமாக இடுப்புக்கு கீழ் பகுதி செயலிழந்துள்ளது என்பதை அறிவீர்களா? அத்துடன், இடம் பெயர்ந்துள்ள இவர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளதோடு இன்னும் சிலர் இது வரை குடியமர்த்தப்படவில்லை என்பதையும் அறிவீர்களா, அங்கவீனமுற்ற நபர்கள், வீடுகளுக்கு பிரவேசித்தல் மற்றும் மலசல கூடங்களைப் பயன் படுத்துதல் ஆகிய வசதிகள் தொடர்பாக கவனம் செலுத்தி அவர்களுக்கு பொருத்தமான விதத்தில் நிர்மணங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பீர்களா?" என்றும் வினவியிருந்தார்.

இதன் போதே அமைச்சர் சுவாமிநாதன் மேற்கண்டவாறு கால அவகாசம் கோரினார். (இ-7)

# சந்திரிகாவின் கருத்துக்கு பதிலளிக்க வேண்டும்

## அரசிடம் கோருகிறார் ஜி.எல்.பீரிஸ்



வடக்கிலுள்ள இராணுவத்தினர், அங்குள்ள பெண்களை பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு இன்னமும் உள்ளாக்கிவருவதாக, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பில், அரசாங்கம் பதிலளிக்க வேண்டுமென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான ஜீ.எல்.பீரிஸ், கேட்டுக் கொண்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகத்துக்குத் தலைமை தாங்கும் சந்திரிகா குமாரதுங்கவால் வெளிப்படுத்தப்பட்ட இந்தக் கருத்துகள், பாரதூரமானவை எனத் தெரிவித்த பீரிஸ், ஜெனிவாவில் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில், இலங்கைப் படையினருக்கு எதிராகப் பயன்படுத்தப்படுமெனவும் எச்சரித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை எனக் குறிப்பிட்ட பீரிஸ், இவற்றிலிருந்து தம்மைத் தாமே இராணுவத்தினர் தான் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமெனத் தெரிவித்துவிட்டு, அமைதியாக இருக்கக்கூடாது என அரசாங்கத்திடம் தெரிவித்தார். "பாரதூரமான குற்றச்சாட்டுகள், கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டபோது, அப்போதைய வெளிவிவகார அமைச்சரான நான், அரசாங்கத்தின் சார்பில் அந்தக் குற்றச்சாட்டுகளை மறுத்தேன்.

ஆனால் இன்று, இக்குற்றச்சாட்டுகளை அரசாங்கம் மறுத்துள்ளது, ஆனால் அரசாங்கம், இவ்விடயத்தில் மௌனம் காக்கிறது" என அவர் தெரிவித்தார்.

நாட்டின் ஜனாதிபதியாகவும் முப்படைகளின் தளபதியாகவும் இருந்த சந்திரிகா குமாரதுங்கவின் இக்கருத்து, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தினூடாக, பாதுகாப்புப் படைகள் மீதான குற்றச்சாட்டை நியாயப்படுத்த, சர்வதேச சமூகத்தால் பயன்படுத்தப்படுமெனவும், பீரிஸ் தெரிவித்தார். கடந்த வாரம் கருத்துத் தெரிவித்திருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, நாட்டின் படையினர், அரச அதிகாரிகள் ஆகியோரால் யுத்தத்தால் விதவைகளாக்கப்பட்ட பெண்கள் உள்ளிட்டவர்கள் பாலியல் துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதாகத் தெரிவித்திருந்தார். அந்தக் குற்றச்சாட்டை, இராணுவம் மறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# பெங்களூரிலிருந்து தமிழக சிறைக்கு சசிகலாவை மாற்றுவதை அனுமதிக்க முடியாது

## கர்நாடக அரசு தரப்பு சட்டத்தரணி ஆச்சார்யா திட்டவட்டம்



சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை பெற்று பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலாவை அங்கிருந்து தமிழக சிறைக்கு மாற்றுவதை அனுமதிக்க மாட்டோம் என்று கர்நாடக அரசுத் தரப்பு சட்டத்தரணி ஆச்சார்யா தெரிவித்தார்.

சொத்துக் குவிப்பு வழக்கில் 4 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகிய 3 பேரும் பெங்களூர் பரப்பன அக்ரஹாரா மத்திய சிறையில் கடந்த 15ஆம் திகதி அடைக்கப்பட்டனர். சசிகலா கோரிய பல வசதிகள் சிறையில் அவருக்கு வழங்கப்படவில்லை.

அவரை சந்திக்க வரும் சட்டத்தரணிகள், உறவினர்கள், கட்சியினரிடம் சிறைத் துறை கண்டிப்புடன் நடந்து கொள்கிறது. இதற்கிடையில், பெங்களூர் சிறையில் இருந்து சசிகலாவை தமிழக சிறைக்கு மாற்ற வேண்டும் என அவரது தரப்பு சட்டத்தரணிகளிடம் கோரிக்கை எழுந்துள்ளது. சொத்துக் குவிப்பு வழக்கில் கர்நாடக அரசு தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ஆச்சார்யா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியதாவது.

சிறைத்துறை விதிகளின் படி கைதியை ஒரு மாநிலத்துக்குள் மாற்றுவதானால், சம்பந்தப்பட்ட சிறை உயரதிகாரிகள் முடிவெடுக்கலாம். வேறு மாநிலம் என்றால் இரு மாநில அரசுகள், சிறைத் துறை அதிகாரிகள் கலந்து பேசி முடிவெடுப்பார்கள். ஆனால், உச்ச நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர் என்பதால் அதுபோன்ற நடைமுறைகள் சசிகலாவுக்கு பொருந்தாது. அரசியல் காரணங்களால் தான் இந்த வழக்கு தமிழகத்தில் இருந்து கர்நாடகாவுக்கு உச்ச நீதிமன்றத்தால் மாற்றப்பட்டது. இவ்வழக்கில் அரசியல் கட்சிகளின் நேரடி தொடர்பு இருப்பதால் சசிகலாவை அவ்வளவு எளிதாக தமிழக சிறைக்கு மாற்ற முடியாது. உச்ச நீதிமன்ற அனுமதி பெற்றே மாற்ற முடியும்.

மேலும், தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி நடக்கும் சூழலில், அக்கட்சியின் பொதுச் செயலாளரான சசிகலாவை அங்குள்ள சிறைக்கு மாற்றினால், சரியாக தண்டனை அனுபவிப்பாரா? என்பது சந்தேகமே. எனவே, இதை அனுமதிக்க முடியாது. இது தொடர்பாக வழக்குத் தொடரப்பட்டால், சசிகலாவை தமிழக சிறைக்கு மாற்ற கர்நாடக அரசு தரப்பில் எதிர்ப்பு தெரிவிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை சொத்துக் குவிப்பு வழக்கில் 3ஆம் தரப்பான தி.மு.க. பொதுச் செயலாளர் க.அன்பழகனின் தரப்பும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அன்பழகன் தரப்பு சட்டத்தரணி பாலாஜி சிங் கூறும்போது, "ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்டுள்ள சசிகலா, பெங்களூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்தால் மட்டுமே உச்ச நீதிமன்றம் ஆசித்த தண்டனையை அனுபவிப்பார். தமிழகத்துக்கு மாற்றினால், சிறையை விருந்தினர் மாளிகையாக மாற்றிவிடுவார்கள்.


அங்கு சசிகலா சொகுசு வாழ்க்கை வாழ்வார். நீதிமன்ற தண்டனை, காற்றில் பறக்கவிடப்படும். நீதியையும், தண்டனையையும் நிலை நாட்டும் வகையில் அவர் பெங்களூர் சிறையில் தான் இருக்க வேண்டும். தேவைப்பட்டால் உச்ச நீதிமன்றத்துக்கு அருகில் உள்ள திஹார் சிறைக்கு மாற்றலாம் என தி.மு.க. சார்பாக நீதிமன்றத்தில் தெரிவிப்போம்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)




# புகழ் போதை

உன் தந்தை என் தந்தையிடம் நிலங்களை விற்கவும் இல்லை. என் தந்தை வாங்கவும் இல்லை." பிறகு நான் ஏன் பொய் சொன்னேன் என்று பார்க்கிறாயா?நீ இரக்கம் காரணமாக மக்களுக்கு கண்மூடித்தனமாக வாரி வாரி இறைத்தாய். உன்னைப் புகழின் உச்சியில் வைத்து மதுவை விட அதிகமான போதையை உண்டாக்கி உன்னால் இலாபம் அடைந்து வந்தனர் மக்கள். "அவர்களை உனக்கு அடையாளம் காட்டவே, இனி உன் சொத்துக்கெல்லாம் நானே சொந்தக்காரன் என்று சொன்னேன். இதைக் கேட்டவுடன் நீ ஒன்று மில்லாதவன் என்று தெரிந்த ஊர் மக்கள் நீர் இல்லாத குளத்தை விட்டு காக்கைகள் பறந்து செல்வதைப் போல், உன்னை விட்டு ஓடிவிட்டனர். இந்த நன்றி கெட்டவர்களிடம் இனி, நீ எப்படி நடக்க வேண்டும்?" என்றான் மாணிக்கம்."நண்பா! என்னை வஞ்சித்து வாழ்ந்தவர்களை உன்னால் அடையாளம் கண்டு கொண்டேன். இனி ஆற்றில் போட்டாலும் அளந்துதான் போடுவேன். புகழ் போதையில் மூழ்க இருந்த என்னை கைகொடுத்து தக்க சமயத்தில் காப்பாற்றி விட்டாய். உனக்கு நான் எப்படி நன்றி சொல்வதென்று தெரியவில்லை." என்று நா தழுதழுக்க கூறினான் கேசவன். நீதி: இரக்கம் காட்டலாம். ஆனால், ஏமாளியாகி விடக்கூடாது.

தொடரும்.






◆ 1847 - மெக்சிக்கோ-அமெரிக்கப் போர்: மெக்சிக்கோவின் புவெனா விஸ்டா நகரில் அமெரிக்கப் படைகள் மெக்சிக்கோ படைகளைத் தோற்கடித்தன.

◆ 1870 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: மிசிசிப்பியில் இராணுவ ஆட்சி முடிவடைந்து அமெரிக்கக் கூட்டணியில் மீண்டும் இணைக்கப்பட்டது.

◆ 1887 - பிரெஞ்சு ரிவியேராவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 2,000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

◆ 1893 - ருடொல்ஃப் டீசல் டீசல் இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.

◆ 1903 - கியூபா குவாண்டானமோ விரிகுடாவை ஐக்கிய அமெரிக்காவுக்கு முடிவற்ற குத்தகைக்குக் கொடுத்தது.

◆ 1904 - 10 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு ஐக்கிய அமெரிக்கா பனாமா கால்வாயின் உரிமையைப் பெற்றுக் கொண்டது.

◆ 1905 - ரோட்டரி அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

◆ 1917 - சென் பீட்டர்ஸ்பேர்க்கில் முதலாவது மக்கள் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றதன் மூலம் பெப்ரவரி புரட்சி ஆரம்பமானது.

◆ 1919 - இத்தாலியில் பெனிட்டோ முசோலினி பாசிசக் கட்சியை ஆரம்பித்தார்.

◆ 1941 - புளூட்டோனியம் முதற்தடவையாக உருவாக்கப்பட்டது.

◆ 1944 - செச்னிய மற்றும் இங்குஷ் மக்கள் கட்டாயமாக மத்திய ஆசியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர்.

◆ 1945 - இரண்டாம் உலகப் போர்: பிலிப்பைன்சின் தலைநகர் மணிலா அமெரிக்கப் படைகளினால் விடுவிக்கப்பட்டது.

◆ 1947 - அனைத்துலக தரநிர்ணய தாபனம் (ISO)ஆரம்பிக்கப்பட்டது.

◆ 1966 - சிரியாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அரசு கவிழ்க்கப்பட்டது.

◆ 1991 - தாய்லாந்தில் இராணுவத் தலைவர் சுந்தொங் கொங்சொம்பொங் தலைமையில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் பிரதமர் சட்டிச்சாய் சூன்ஹாவென் பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.

◆ 1997 - ரஷ்யாவின் மீர் விண்வெளி நிலையத்தில் தீவிபத்து ஏற்பட்டது.

◆ 1998 - மத்திய புளோரிடாவில் இடம்பெற்ற சுழற்காற்றில் 42 பேர் கொல்லப்பட்டனர்.

◆ 2007 - இங்கிலாந்தில் கிறேரிக் என்ற இடத்தில் புகையிரதம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் கொல்லப்பட்டு 22 பேர் காயமடைந்தனர்.

பிறப்புகள்

◆ 1633 - சாமுவேல் பெப்பீசு, பிரித்தானியக் கடற்படைத் தளபதி (இ. 1703)

◆ 1868 - டபிள்யூ. இ. பி. டுபோய்ஸ், ஆபிரிக்க அமெரிக்க சமூக உரிமையாளர் (இ. 1963)

◆ 1915 - எஸ். ராஜரத்தினம், சிங்கப்பூரின் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர்

◆ 1924 - அலன் கோர்மாக், நோபல் பரிசு பெற்ற இயற்பியலாளர். (இ. 1998)

◆ 1965 - மைக்கேல் டெல், டெல் நிறுவனத்தை ஆரம்பித்தவர்.

◆ 1954 - ராஜினி திராணகம, இலங்கையின் மனித உரிமை செயற்பாட்டாளரும் பெண் உரிமை செயற்பாட்டாளரும். (இ. 1989)

◆ 1983 - அசீஸ் அன்சாரி, அமெரிக்க நடிகர்

இறப்புகள்

◆ 1503 - அன்னமாச்சாரியார், கர் நாடக இசைக் கலைஞர் (பி. 1408)

◆ 1719 - சீகன் பால்க், ஜெர்மனிய மதகுரு (பி. 1682)

◆ 1821 - ஜோன் கீற்ஸ், ஆங்கிலக் கவிஞர் (பி. 1795)

◆ 1848 - ஜான் குவின்சி ஆடம்ஸ், ஐக்கிய அமெரிக்காவின் 6வது குடியரசுத் தலைவர் (பி. 1767

◆ 1855 - கார்ல் ஃப்ரெடெரிக் காஸ், கணிதவியலர் (பி. 1777)

◆ 1973 - டிக்கின்சன் ரிச்சார்ட்ஸ். நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர். (பி. 1895)

சிறப்பு நாள்

◆ புருணை - விடுதலை நாள் (1984)

◆ கயானா - குடியரசு நாள் (1970)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 140 | 70 | 120 | 120 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 90 | 110 | 110 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 200 | 200 | 220 | 200 | 180 |
| தக்காளி | 40 | 60 | 40 | 50 | 50 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 60 | 70 | 80 | 60 |
| கோவா | 20 | 60 | 20 | 30 | 40 | 40 | 40 |
| கரட் | 40 | 60 | 40 | 60 | 60 | 120 | 40 |
| பூசணி | 60 | 60 | 30 | 60 | 90 | 60 | 50 |
| புடோல் | 50 | 60 | 40 | 80 | 60 | 80 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 60 | 60 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 110 | 100 | 100 | 120 | 70 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 400 | 150 | 180 | 140 | 200 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 100 | 100 | 80 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 50 | 60 | 130 | 50 |
| பயற்றங்காய் | 100 | 160 | 80 | 120 | 180 | 140 | 120 |
| லீக்ஸ் | 50 | 60 | 60 | 150 | 160 | 80 | 50 |
| பீற்றூட் | 80 | 60 | 40 | 60 | 70 | 80 | 40 |
| கறிமிளகாய் | 150 | 160 | 130 | 150 | 160 | 200 | 160 |
| முருங்கைக்காய் | 700 | 800 | 400 | 500 | 600 | 500 | 300 |
| போஞ்சி | 100 | 100 | 100 | 100 | 110 | 120 | 100 |
| கத்தரிப்புள்ளா | 100 | 100 | 60 | 100 | - | 100 | 80 |
| கீரை - பிடி | 30 | 20 | 30 | 40 | 30 | 40 | 25 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 | 100 | 120 | 60 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 20-50 | 60 | 60 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 180 | 200 | 150 | 180 | 180 | 200 | 120 |
| வெங்காயப்பூ | 60 | 60 | 40 | 60 | 80 | 80 | 40 |
| முள்ளங்கி | 40 | 100 | 30 | 60 | 80 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 40 | 30 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 15 | 20 | 20 | 20 | 25 |
| புடலை | 50 | 60 | 50 | 50 | 50 | 60 | 60 |

> பாம்புக்கு வாலும் மீனுக்கு தலையும் காட்டும் விலாங்கு மீன் போல
>
> – தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நடப்பதை வெளிப்படுத்துவது கூட்டமைப்பின் பொறுப்பு

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் என்பார் வள்ளலார்.

உள்ளொன்றும் புறமொன்றுமாக பேசுவது பேசுபவர்க்கும் கேட்பவர்க்கும் அழிவைத் தருமேயன்றி ஆக்கத்தைத் தரமாட்டாது.

அதனால்தான் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும் என்று வள்ளலார் வேண்டி நின்றார்.

இன்றைய அரசியலில் இந்த நிலைமை தாராளமாக இருப்பதைக் காணமுடிகிறது.

அதிலும் குறிப்பாக தமிழ் அரசியல் தலைமையிடம் உள்ளும் புறமும் வேறுபட்ட நிலைமை இருப்பது மிகப்பெரும் பயங்கரமான விளைவுகளைத் தரக்கூடியதாகும்.

தமிழ் மக்கள் தங்களால் தெரிவு செய்யப்பட்ட தமிழ் அரசியல் தலைமை தமக்கு விசுவாசமாக நடந்து கொள்ளும் என்று அதீதமாக நம்புகின்றனர்.

ஆனால், எங்கள் தமிழ் அரசியல் தலைமையோ தென்பகுதியில் ஒரு கதை தமிழர் தாயகமான வடக்கு கிழக்கில் இன்னொரு கதை; வெளிநாடு சென்றால், அங்கு புலிகளுக்கு எதிரானவர்களுடன் ஒரு கதை; தமிழர்களுக்கு உரிமை வேண்டுமென விசுவாசமாக விரும்புவர்களுடன் வேறொரு கதையாக அவர்களின் அரசியல் பிழைப்பு நடந்து கொண்டிருக்கிறது.

இத்தகைய நேர்மைத்தன்மையில்லாத போக்கு அரசியல் தலைமை மீது தமிழ் மக்களிடம் மிகப்பெரியதொரு வெறுப்பு நிலையை ஏற்படுத்தும் என்பது மறுக்க முடியாத உண்மை.

தாங்கள் செய்வது நியாயமானது என்று காட்டிக் கொள்வதற்கு நியாயபூர்வமான ஆதாரங்களை முன்வைப்பதே பொருத்துடையது.

உள்ளொன்றும் புறமொன்றுமாகப் பேசுவது தமிழ் மக்களுக்கு புதிய அரசியல் தலைமை தேவை என்ற நினைப்பை ஏற்படுத்தி விடும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான தமிழ் மக்களின் ஆதரவு என்பது விடுதலைப் புலிகள் ஞானஸ்தானம் வழங்கிய ஒரு கட்சி என்பதால் கிடைத்ததாகும்.

அதே ஆதரவு தொடர்ந்து கிடைக்கும் என்று கூட்டமைப்பின் தலைமை கருதுமாக இருந்தால் அது மிகப்பெரும் மடமைத்தனமாகும்.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன் மீது நம்பிக்கை கொண்டுள்ள தமிழ் மக்களுக்கு விசுவாசமாக நடந்து கொள்ள வேண்டும்.

இதைவிடுத்து தமிழ் மக்களுக்கு எதிராகவும் இலங்கை அரசுக்கு விசுவாசமாகவும் நடந்து கொள்வதில் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை தொடர்ந்தும் அக்கறை செலுத்துமாக இருந்தால், நிலைமை மிகமோசமாகும் என்பது மறுக்க முடியாத உண்மை. முதலில் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறுவது கூட்டமைப்பின் கடமை.

இப்போதிருக்கின்ற சூழ்நிலையில் கூட்டமைப்பு மீதான தமிழ் மக்களின் நம்பிக்கை வேகமாகக் குறைந்து செல்கிறது. நல்லாட்சி மட்டுமல்ல; நாம் தெரிவு செய்து பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்த கூட்டமைப்பும் எங்களை ஏமாற்றுகிறது என்ற சிந்தனை தமிழ் மக்களிடம் ஏற்படத் தலைப்பட்டுள்ளது.

எனவே இதிலிருந்து கூட்டமைப்பு தன்னை பாதுகாக்க வேண்டுமாயின், என்ன நடக்கிறது? நாங்கள் என்ன செய்கிறோம்? ஜெனிவாக் கூட்டத்தொடரில் எங்களின் நிலைப்பாடு என்ன? என்பது பற்றியெல்லாம் உடனுக்குடன் தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

இதைச் செய்யாதவிடத்து கூட்டமைப்பு எங்களுக்கு அநீதி இழைக்கிறது என்று தமிழ் மக்கள் கருதுவர்.

இக்கருத்து நிலை, இந்த ஜென்மத்தில் பாராளுமன்றப் பதவி இல்லை என்றொரு களநிலையைத் தந்துவிடும். கவனம்.

## இந்திய மீனவர்களைக் கட்டுப்படுத்த களத்திலிறங்கும் கடற்றொழிலாளர்கள்

(கரணவாய்)

இந்தியமீனவர்களின்அத்துமீறல்களுக்கு இலங்கை அரசும், கடற்படையும் ஒரு கிழமைக்குள் நல்ல தீர்வொன்றைப் பெற்றுத் தரவில்லையாயின் அத்து மீறும் இந்திய படகுகளை நாமே கடலில் சென்று பிடிக்க வேண்டிய நிலைவரும் என வடமராட்சி கடற்றொழிலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் தொடர்ச்சியான அத்துமீறல்கள் காரணமாக தினம் தினம் உள்ளூர் மீனவர்கள் பாரிய நட்டத்தினை எதிர்கொண்டு வருகின்றனர்

இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. அவர்களிகளின் இழுவைப் படகுகள், குல்லாலம்பாடி போன்றவை எமது கடல் வளங்களைச் சுரண்டுவது மாத்திரமின்றி எமது தொழில்களுக்கும் சேதம் விளைவிப்பதை கைகட்டிப் பார்த்திருக்க முடியாது.

எனவே ஒரு கிழமைக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு அரசாங்கமும் கடற்படையும் நல்ல தீர்வினைப் பெற்றுத்தரும் என நம்புகின்றோம். இல்லையேல் நாமே கடலில் சென்று அத்துமீறும் படகுகளைப் பிடிப்போம் எனவும் கடற்றொழிலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.(இ-60)

## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின்வருடாந்தபொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவர் யோ. யோன் அனிஸ்ரன், செயலாளர் யோ. நெடுஞ்செழியன், பொருளாளர் கு. நிசாந்தன், உபதலைவர் மு. பவீஸ்கரன், உப செயலாளர் க.கிருஷ்ணகுமார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3, 64)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இவ்வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் பெற்றோர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி புதன் கிழமை பிற்பகல் ஒருமணிக்கு பாடசாலையின் தம்பையா மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

எனவே சகல பெற்றோர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பாடசாலை அதிபர் திருமதி.வி. சண்முகரட்ணம் அறிவித்துள்ளார். (இ-3)

## வடமராட்சி கடற்பரப்பில் நேற்று அதிகாலை இந்திய இழுவைப் படகு மோதியதில் உள்ளூர் மீனவரின் படகு பாரிய சேதம்

### தந்தையும் மகனும் மயிரிழையில் உயிர் தப்பினர்

(கரணவாய்)

வடபகுதிக் கடலில் தென்னிந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்து வரும் நிலையில் நேற்று அதிகாலை இந்திய இழுவைப்படகு மோதியதில் உள்ளூர் மீனவரின் படகு ஒன்று முற்றாக சேதமடைந்ததுடன் மீனவர்கள் இருவர் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளனர்.

வடமராட்சி கடற்பரப்பில் நேற்று அதிகாலையில் உள்ளூர் மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது பெருமளவான தென்னிந்திய மீனவர்களின் படகுகள் வெளிச்சமின்றி வந்தன.

இதில்இழுவைப்படகுஒன்று அதிகாலை 5.30 மணியளவில் கரையில் இருந்து ஏழு கடல்மைல் தொலைவில் உள்ளூர் மீனவர்களின் படகினை மோதியது.

இதில் படகு பாரிய சேதமடைந்ததுடன் அதில் இருந்த தந்தை, மகன் ஆகிய இரண்டு மீன்வர்கள் ஏனையோரின் உதவியுடன் காப்பாற்றப்பட்டனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு முறையிடப்பட்டுள்ளதாக வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் பை. அருள்தாஸ் தெரிவித்தார். (இ-60)

## சிவராத்திரி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரசாலை நுணாவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை சிவராத்திரி உற்சவம் மாலை 6.30 மணிமுதல் விஷேட பூஜை, அபிஷேகம் என்பவற்றுடன் இடம்பெறும். (3)

## சிவதீட்சை வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சிவ வாரத்தை முன்னிட்டு சிவ தீட்சை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை அகில இலங்கை சைவ மகா சபையால் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளது.

அந்த வகையில் காரைநகர் சைவ மகாசபை பணிமனையில் காலை 8 மணிக்கும், கீரிமலை குழந்தை வேல் சமாதி சிவ ஆலயத்தில் முற்பகல் 11 மணிக்கும் செந்தமிழ் சிவாச்சாரியார்களால் சிவ தீட்சை வழங்கப்படவுள்ளது.

அத்துடன் திருகோணமலை கின்னியாவென்னீரூற்று சிவாலயத்தில் காலை 9 மணிமுதல் தென்கைலை ஆதீன முதல்வர் அகத்தியர் அடிகளாரால் சிவதீட்சை வழங்கப்படவுள்ளது.

எந்தவித கட்டணங்களும் அறவிடப்படாமல் நடைபெறும் இந்த சிவ தீட்சை வழிபாட்டில் பக்தர்கள் கலந்து கொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (3-9)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

இருபாலை சி.சி.த.க. பாடசாலையும் யாழ். பாலம் சர்வதேச பாடசாலையும் இணைந்து நடத்தும் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.பாடசாலை அதிபர் ஆ.பாலச்சந்திரன், சர்வதேச பாடசாலை அதிபர் செல்வி ரீனஸ்ரீ கிங்ஷ்லி ஆகியோரின் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ்.வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா, **Well Spring** நிகழ்ச்சித் திட்ட பணிப்பாளர் தி.லோகினி எலிஸ், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், **A.M.G.**நிறுவன மேலாளர் ஈ. நிமலன், பாடசாலை பழைய மாணவி வசந்தி சச்சி தம்பதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3-136)

⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிமை பிற்பகல் 1.30 மணியளவில் பாடசாலை அதிபர் குமுதினி அசோக்குமார் தலைமையில் பாடசாலை ஆலய முன்றலில் இடம் பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலயக் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் அருணாசலம் அகிலதாஸ், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் மரியன்னை தேவாலய பங்குத்தந்தை அருட்கலாநிதி அன்ரன் மத்தாயஸ் மற்றும் கோப்பாய் இலங்கை வங்கி முகாமையாளர் மெஜிதா தினேஷன், கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் தா.லக்ஷன், கோப்பாய் பொதுச்சுகாதார உத்தியோகத்தர் பா.சயந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் யாழ்.வலய ஆரம்பப் பிரிவு ஆசிரிய ஆலோசகர் நளினி அகிலதாஸ் பரிசில்களை வழங்கி கௌரவிப்பார். (3-136)

⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄ ⅄

(யாழ்ப்பாணம்)

யாழ்.வளலாய்அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் க. ரவீந்திரன் தலைமையில் இடம்பெறும் . இதில் பிரதம விருந்தினராக வடமாகாணசபை உறுப்பினர் வே.சிவயோகன், சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கோட்ட உலக உணவுத்திட்ட உத்தியோகத்தர் அ.கபிலன், நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் எஸ். கஜேந்திரன், வளலாய் மீள்குடியேற்றத் தலைவர் எஸ்.துரைரட்ணம், கௌரவ விருந்தினராக கிராம சேவையாளர் எஸ்.சாந்தரூபன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-136)

## பொதுக்கூட்டம்

யாழ். வட்டு மூளாய் றோட் ஐக்கிய நாணய சங்கத்தின் 84ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கக் காரியாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கூட்டுறவுச் சமூகத்தினர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## பிரபஞ்ச ரத வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் கெற்பேலி கிழக்கு தரவையம்பதி ஸ்ரீ வீரபக்திரேஸ்வரர் (லிங்கேஸ்வரர் ஆரணியம்) பிரபஞ்ச ரத வெள்ளோட்டம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை இடம் பெறும். (இ-3)

## கவிதைத்தொகுதி வெளியீடு

(கரணவாய்)

த.அஜந்தகுமாரின் நான் அவளுக்கு ஒரு கடலைப் பரிசளித்தேன் எனும் கவிதைத் தொகுதி வெளியீடு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெறும். (3-60)

## நினைவுப் பேருரை நிகழ்வு

அமரர் பண்டிதர் கணபதிப்பிள்ளை செல்லத்துரையின் நூற்றாண்டு நினைவுப் பேருரை நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.யாழ். இந்துக் கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா தலைமையில் இந்நிகழ்வு இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

## வீதியோட்ட போட்டிக்கு விண்ணப்பிக்குக

அல்வாய் இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. மரதன் ஓட்டம் ஆனது நாளை 24 ஆம் திகதி காலை 5.30 மணிக்கு நடை பெறும். முதல் பரிசாக 10,000 ரூபாய் பணப்பரிசும் இரண்டாம் பரிசாக 5,000 ரூபாய் பணப் பரிசும் மூன்றாம் பரிசாக 3,000 ரூபாய் பணப்பரிசும் வழங்கப்படும்.

முதல்பத்துஇடங்களைப்பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும். இப் போட்டியில் கலந்து கொள்வோர் 077 840 0787 , 077 220 6736 ,077 236 7535 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்துக. (க)

## *Northern challenger* உதைபந்தாட்டம்

# குருநகர் பாடும்மீனை வீழ்த்தியது மயிலங்காடு ஞானமுருகன் வி.க.




வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் Northern Challengers உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் (20-02-2017) அன்று நடந்து முடிந்த சுப்பர் 8 சுற்று இரண்டாவது ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக த்தை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக் கழகம் மோதியது.

இடைவேளை வரை பரபரப்பான ஆட்டத்தில் இரு அணிகளும் விளையாடிய போதும் இடைவேளையின் பின் ஞானமுருகன் விளையாட்டுக்கழகத்தின் ஆட்டம் வேகம் பிடித்தது.

ஆட்டநேர முடிவில் 2.0 என்ற ரீதியில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியது ஞான முருகன் விளையாட்டுக்கழகம். இதன் மூலம் A பிரிவில் முதலிடத்திற்கு வந்துள்ளதுடன் அரை இறுதி வாய்ப்பையும் பெற்று விட்டது ஞானமுருகன் விளையாட்டுக் கழகம். (க)

## இன்றைய போட்டிகள்

ஞான தீபம் இளையோர் திறன் விருத்தி மையம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்துடன் இணைந்து நடத்தும் 23 வயதுக்குட் பட்டோருக்கான கரப்பந்தாட்டச்சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும் போட்டியில் யாழ்ப்பாணம் OMI விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும்

மாலை 6.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சண்டிலிப்பாய் யுத் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கெருடாவில் விவேகானந்தா விளையாட்டுக்கழகமும்

இரவு 7.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் அச்சுவேலி கலைமகள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கச்சாய் லொலிக்கிங்ஸ் விளையாட்டுக் கழகமும்

இரவு 8 மணிக்கு நடை பெறும் போட்டியில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அச்சுவேலி தோட்டி வாலிபர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# பருத்தித்துறை பிரதேச செயலக பெண்களுக்கான கபடிப் போட்டி

## பருத்தித்துறை ஐக்கியம் சம்பியன்



பருத்தித்துறை பிரதேச செயலக பெண்களுக்கான கபடிப் போட்டியில் (21.02.2017) அன்று பருத்தித்துறை ஐக்கியம் மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் பருத்தித்துறை ஐக்கியத்தை எதிர்த்து பருத்தித்துறை சென். தோமஸ் வி.கழகம் மோதியது.

போட்டி தொடங்கியது முதல் சென். தோமஸ் அணி தனது பலமான விளையாட்டின் ஊடாக ஐக்கியம் வீரர்களை நிலைகுலைய வைத்தனர். போட்டியில் 10நிமிடத்தில் புள்ளி 06:19 என சென். தோமஸ் மிகப் பலமான நிலையில் காணப்பட்டது. அவர்களின் விளையாட்டுக்கு ஈடுகொடுக்க முடியாத ஐக்கியம் நிலை குலைய இடைவேளையின் போது 26:12 என சென். தோமஸ் முன்னணி வகித்தது.

இடைவேளையின் போது ஐக்கியம் வீராங்கனைக்கு பல விதமான நுட்பமுறைகள் பயிற்றுவிப்பாளரால் வழங்கப்பட கழக மூத்த உறுப்பினர்கள் மற்றும் கழக வீரர்களும் அவர்களுக்கு ஆலோசனைகளும் ஆதரவும் வழங்க வீறு கொண்ட ஐக்கியம் இடைவேளையின் பின் தனக்குரிய பாணியில் வேகமாக விளையாட தொடங்கினார்கள். இறுதியில் 47:41என்ற புள்ளியின் அடிப்படையில் சம்பியன் ஆனது பருத்தித்துறை ஐக்கியம் அணி. (க)

# பூப்பந்தாட்ட பயிற்சிப் பட்டறை



வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் வட மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் 20 வயதிற்கு குறைந்த பூப்பந்தாட்ட வீர, வீராங்கனைகளை ஒன்றிணைத்து உலக தமிழ் பூப்பந்து பேரவையின் (WTBF) அனுசரணையுடன் மன்னார் மாவட்டத்தின் உள்ளக விளையாட்டு அரங்கில் இரண்டு தினங்களுக்கான பயிற்சிப்பட்டறை மற்றும் 20 வயதின் கீழான வடமாகாண பூப்பந்து அணியை உருவாக்கும் செயற்றிட்டமும் அண்மையில் மன்னார் பொது விளையாட்டு அரங்கின் உள்ளக மைதானத்தில் இடம் பெற்றது.

நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரனும் இவ் விசேட பயிற்சி பட்டறைக்காக கனடாவில் இருந்து உலக தமிழ் பூப்பந்து பேரவையின் (WTBF) சார்பாக வருகை தந்த ஜெயகாந்தனும் மன்னார் மாவட்ட பூப்பந்து சங்கத்தின் தலைவர் மற்றும் விளையாட்டு அதிகாரிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

குறித்த பயிற்சிப் பட்டறையில் வடக்கு மாகாணம் தழுவியதாக நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

அத்தோடு இதில் இருந்து உருவாகும் வடக்கு அணியினர் எதிர்வரும் ஆடி மாதம் கனடாவில் நடைபெறவுள்ள பூப்பந்து சுற்றுப் போட்டிக்கு செல்லவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (க-281)



**நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா 2017 (20.02.2017) அன்று நடைபெற்ற இறுதி நாள் நிகழ்வுகளிலும் கனவான்களின் அணி, சிறந்த நன்னடத்தை அணியாக அரியாலை ஐக்கிய கழகம் தெரிவு செய்யப்பட்டது.**

# அமெ.காங்கிரஸ் குழுவினர் ஜனாதிபதியுடன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க காங்கிரஸ் பிரதிநிதிகள் குழுவினர் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தனர்.

குடியரசுக் கட்சி காங்கிரஸ் உறுப்பினர் பீட்டர் ரொஸ்கம் தலைமையில் ஜனநாயகக் கட்சி காங்கிரஸ் உறுப்பினர்களான டேவிட் பிரைஸ், ஜெரால்ட் ஈகொனோலி மற்றும் குடியரசு கட்சி உறுப்பினர் அட்ரியன் ஸ்மித் ஆகியோரே இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இருநாடுகளுக்கிடையிலான இருதரப்பு உறவுகளை பலப்படுத்தல், ஜனநாயக நிறுவனங்களைப் பலப்படுத்தல் மற்றும் அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் இருகட்சி ஆணைக்குழுவான ஜனநாயக பங்கேற்பு சபைக்கும் (HD) இலங்கை பாராளுமன்றத்திற்குமிடையிலான உறவுகளை மேம்படுத்தல் என்பவையே இவ்விஜயத்தின் நோக்கமாகும்.

அமெரிக்காவுக்கும் இலங்கைக்குமிடையிலான இருதரப்பு உறவுகள் பலமான நிலையில் இருப்பது குறித்து திருப்தி வெளியிட்ட ஜனாதிபதி, பொருளாதாரம் மற்றும் முதலீட்டுத் துறைகள் உள்ளிட்ட இருதரப்பு உறவுகளை மேலும் பலப்படுத்த இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாக தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் நாட்டில் கொண்டுவரப்பட்டுள்ள பரிமாற்ற செயன்முறைகள் குறித்து காங்கிரஸ் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பீட்டர் ரொஸ்கன் அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் சார்பாக தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

நல்லிணக்கம், நாட்டின் அபிவிருத்தி, நல்லாட்சி மற்றும் பிரஜைகள் உரிமைக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பாராட்டத்தக்கதாகும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், பொருளாதார அபிவிருத்தியை நோக்கிய இலங்கையின் சவால்மிக்க பயணத்தில் அமெரிக்கா இலங்கைக்கு ஆதரவாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் மற்றும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர். (செ-11)

## நில மீட்புக்கு ஆதரவு...

விமானப்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமது காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி கேப்பாப்பிலவு மக்கள் முன்னெடுத்துள்ள போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தென்பகுதி மக்களும் இணைந்ததாக வடபகுதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி கேப்பாப்பிலவு மக்கள் ஆரம்பித்துள்ள போராட்டம் நேற்று 23ஆவது நாளை எட்டியிருந்த நிலையில் குறித்த போராட்டத்திற்கு பல தரப்பினரும் ஆதரவை வழங்கி வருகின்றனர்.

கேப்பாப்பிலவு பகுதியில் விமானப்படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட பெரும் கண்டனப் போராட்டம், யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தின் முன்பாக நேற்றுக் காலை 9 மணியளவில் ஆரம்பமாகி யாழ். மாவட்ட செயலகம் வரை பேரணியாக சென்று மாவட்ட செயலகம் முன்பும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம், யாழ்.மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம், திருகோணமலை மாவட்ட மீனவ ஒத்துழைப்பு இயக்கம், டெலிகொம் மனிதவலு போராட்ட ஒற்றுமை முன்னணி உட்பட தென்பகுதி மக்களுடனான பல்வேறு அமைப்புக்கள் குறித்த போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

கேப்பாப்பிலவு மக்களுக்கு ஆதரவு தெரிவித்து முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டத்தின் போது அரசியல் கைதிகளது விடுதலை, காணாமலாக்கப்பட்டோர் கண்டறியப்பட வேண்டும் மற்றும் இராணுவத்தால் அபகரிக்கப்பட்டுள்ள தமிழர் நிலங்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இதேவேளை "நல்லாட்சி அரசே எமது நிலமே எமது வாழ்வு", "இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள எமது காணிகள் உடனே விடுவிக்கப்பட வேண்டும்", "பிலவுக்குடியிருப்பு மக்களின் போராட்டத்துக்கு தீர்வு என்ன?" என்பன போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.

கேப்பாப்பிலவு உட்பட இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமிழ் மக்களது காணிகள் விரைவில் விடுவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ள தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வடகிழக்கு இணைப்பாளர் அன்ரனி ஜேசுதாசன், காணிகள் விடுவிக்கப்படும்வரை தேசிய ரீதியில் போராட்டங்கள் முன்னெடுக்கப் படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை யுத்தத்தைக் காரணம் காட்டி அபகரிக்கப்பட்ட மக்களது காணிகள் விடுவிக்கப்படாவிட்டால், குறித்த காணிகளுக்குள் அத்துமீறி நுழைவோம் என்று வலிகாமம் வடக்கு மீள்குடியேற்ற குழு தலைவர் எஸ். சஜீவன், நல்லாட்சி அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதுமாத்திரமன்றி தமது சொந்த நிலங்கள் கடற்படையினராலும் அபகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள மக்கள், காணிகள் விடுவிக்கப்படும் வரை போராட்டம் தொடரும் என்றும் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்ட செயலகத்தின் முன்னால் இடம்பெற்ற போராட்டத்தின் நிறைவில் காணி விடுவிப்பு தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திய மகஜர், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்தெசுகுணவதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நிலமீட்புக்கான மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ்ப்பாணம் - நெடுந்தீவிலும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப் பட்டிருந்தது.

கேப்பாப்பிலவு மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலமீட்பு போராட்டங்களுக்கு வலுச்சேர்க்கும் முகமாக போராட்டம் முன்னெடுக்கப் பட்டுள்ளது. இந்த போராட்டத்திற்கு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலர் இணைந்து தமது ஆதரவை வழங்கியுள்ளனர். (செ-4,9)

# காணி விடுவிப்பு குறித்து
# காலக்கெடுவை தெரிவிக்குமாறு இராணுவத்திடம் அரசு கோரிக்கை

பாதுகாப்பு படையினர் வசமுள்ள எஞ்சியிருக்கும் தனியார் காணிகள் எப்போது விடுவிக்கப் படும் என்பது தொடர்பாக காலக்கெடுவொன்றை தெரிவிக்குமாறு ஜனாதிபதியும் பிரதமரும் இராணுவத்திடம் கேட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனால் நேற்று நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் தகவல்களின்படி 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இருந்து தற்போதுவரை கணிசமானளவு தனியார் காணிகள் விடுக்கப்பட்டுள்ளன. அத்துடன், இன்னும் 4 ஆயிரத்து 162 ஏக்கர் காணிகள் விடுக்கவிக்கப்படவுள்ளன.

எனினும், எஞ்சியிருக்கும் தனியார் காணிகள் எப்போது விடுவிக்கப்படும் என்பது தொடர்பான காலக்கெடுவொன்றை கூறுமாறு ஜனாதிபதியும் பிரதமரும் தானும் இராணுவத்திடம் கேட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கூறியுள்ளார். (செ-11)

## நல்லாட்சி அரசும்...

அரசின் நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர். கடந்த அரசைப் போன்றே இந்த அரசும் தம்மை கொடுமைப் படுத்துகின்றது என்ற உணர்வு அவர்களுக்குள் ஏற்பட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வுகாணப்பட்டிருந்தால் ஆயுதப் போராட்டம் ஏற்பட்டிருக்காது.

எனவே இனியாவது இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் தீர்வு காணப்பட வேண்டும்.

அர்த்தபூர்வமான அதிகாரப் பகிர்வுக்குஅரசியலமைப்பின்ஊடாக தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் நம்பிக்கை ஏற்பட்டது. புதிய அரசு மீது பல எதிர்பார்ப்புக்கள் இருந்தன.

அரசுக்கு ஒத்துழைப்புக்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு வழங்கியுள்ளது. அந்த வகையில் ஐக்கிய இலங்கைக்குள் தீர்வை காண்பதற்கு நாம் தயாராகவே இருக்கிறோம்.

அதில் எமது கௌரவமும் எமது பிரதேசத்தில் நாமே எமது தலைவிதியை தீர்மானிக்கும் உரிமையும் பாதுகாக்கப்பட வேண்டும்.

நாடு சுதந்திரம் அடைந்ததில் இருந்து இந்த பிரச்சினையால் கடந்த காலங்களில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான தமிழ் மக்கள் நாட்டை விட்டுச் சென்றுள்ளதுடன் ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அதேபோல் பாதுகாப்பு படையினரும் எமது போராளிகளும் ஏனைய சிவில் மக்களும் உயிரிழந்துள்ளனர்.

காணிப் பிரச்சினை, காணாமற் போனோர் விவகாரம், அரசியல் கைதிகள், உண்மை மற்றும் நல்லிணக்கம், இழப்பீடு, காணாமற் போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் மீள நிகழாமை என்பன நிலைமாற்றுகால நீதியின் அடிப்படை விடயங்களாக உள்ளன.

இவற்றுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்றும் மேற்படி விடயங்கள் தொடர்பில் அரசின் செயற்பாடுகளால் எமது மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இந்த விடயத்தில்நாம்வெளிப்படையாக இருத்தல் வேண்டும். கடந்த அரசை போன்று இந்த அரசும் தம்மை கொடுமைப்படுத்துவதாக மக்கள் கருதுகின்றனர்.

மேற்படி பிரச்சினைகளை முன்னைய அரசைப் போன்றே இந்த அரசும் கையாண்டு வருவதாக மக்கள் நம்புகின்றனர்.

ஒட்டுமொத்த படையினரும் போர்க்குற்றங்களை இழைத்தார்கள் என்று நான் கூறவில்லை.

உயர்மட்டங்களில் இருந்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பிரகாரம் அவர்கள் செயற்பட்டு இருக்கலாம். சில படையினர் பாலியல் பலாத்காரம் மற்றும் படுகொலை போன்ற தனிப்பட்ட ரீதியிலான குற்றங்களில் ஈடுபட்டிருக்கலாம்.

அவை பற்றி தகுந்த விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட்டு தண்டனை வழங்கப்பட வேண்டும்.

ஜே.வி.பி கிளர்ச்சியின் போது இளம் பெண்ஒருவர்படையினராலேயே படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

அவர்கள்தொடர்பில் கண்டறியப்பட்டு தண்டனையும் வழங்கப்பட்டது.

ஆகவே அவ்வாறு தவறிழைத்தவர்கள் அதன் விளைவுகளையும் அனுபவிக்க வேண்டும்.

அத்துடன் படையினருக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான மனக்கசப்புக்கும் முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

டி.எஸ்.சேனநாயக்க பிரதமராக இருந்த காலத்தில் படைத்தளபதிகளாக தமிழர்கள் இருந்திருக்கின்றனர்.

ஆகவே தமிழ் மற்றும் முஸ்லிம் இனத்தவர்களும் படையில் அங்கம் வகிக்க வேண்டும்.

எனவே மேற்படி விடயங்களை நல்லாட்சி அரசாங்கம் கவனத்தில் எடுத்துசெயற்பட வேண்டும்என வலியுறுத்துகின்றேன் என சம்பந்தர் தனது உரையில்குறிப்பிட்டார். (செ-1)

## இலங்கைக்கு 3 நாட்...

தற்காக அண்மையில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்திருந்தது.

இந்த குழுவின் விசேட அறிக்கையொன்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மார்ச் மாதம் 15ஆம் திகதி சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் குறித்து பேசப்படவுள்ளது.

இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து எதிர்வரும் மார்ச் மாதம் 22ஆம் திகதி கலந்துரையாடப்படவுள்ளது.

இலங்கையின் சார்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உள்ளிட்ட பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர்.

முன்னதாக இலங்கை தொடர்பில் பெண்களை கைது செய்து, தடுத்து வைத்து பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் குற்றங்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்படும் ஆறு இராணுவ அதிகாரிகளின் விபரங்களை சர்வதேச மனித உரிமை அமைப்பொன்று ஐக்கிய நாடுகள் அமைப்பிடம்கையளித்திருக்கிறது.

விபரங்களுடன் கூடிய ஆவணங்களுடன்இரகசியமான இணைப்பில் 6 புகைப்படங்களை உள்ளடக்கப்பட்டுள்ளதாக தென்னாபிரிக்காவின் ஜொகன்னஸ்பேர்க்நகரை தலைமையகமாக கொண்டு இலங்கையில் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பு அறிவித்திருந்ததுடன்,

இந்த விபரங்களை இலங்கை அரசாங்கத்திடம் கையளித்து நம்பிக்கையான விசாரணையை நடத்தும் வரை அவர்கள் அனைவரையும் பணியில் இருந்து இடைநீக்கம் செய்யுமாறு பெண்களுக்கு எதிரான வேறுபாடுகள் தொடர்பான ஐ.நா குழு கோரும் என தாம் எதிர்பார்ப்பதாக இலங்கையில் உண்மை மற்றும் நீதிக்கான சர்வதேச அமைப்பின் பணிப்பாளர் யஷ்மின் சூகா தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இலங்கை குறித்த விவாதத்திற்கு மூன்று நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளமையால், இலங்கையின் தற்கால சூழ்நிலை குறித்து விரிவாக ஆராயப்படலாம் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (செ-11)

# கடல் குதிரைகள் வெளியீட்டு விழாவும் கலைஞர்கள் கௌரவிப்பும்

தமிழக திரைப்பட இயக்குநர் புகழேந்தி தங்கராஜின் இயக்கத்தில் உருவான "கடல்குதிரைகள்" திரைப்பட இசை வெளியீட்டு விழாவும் ஈழத்து கலைஞர்கள் கௌரவிப்பும் எதிர்வரும் 26ஆம் திகதி பி.ப 4 மணிக்கு தெல்லிப்பழை ராஜேஸ்வரி மண்டபத்தில் (துர்க்கை அம்மன் ஆலயம் அருகாமை) இடம் பெறும்.

தமிழ்த் தேசியப் பண்பாட்டு பேரவை தலைவர் க. நிஷாந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினராக இந்திய துணைத் தூதரக துணைத் தூதுவர் சிறிமான் நடராஜன், கௌரவ விருந்தினராக தென்னிந்திய திரைப்பட நடிகர் தலைவாசல் விஜய், தென்னிந்திய திரைப்பட நடிகை ர. ரோஜினி ஆகியோர் கலந்துசிறப்பிக்கவுள்ளனர். (செ)

## புலிகளை வென்றவர்...

நான் சிறந்த போர் வீரன் தான் என கூறும் அமைச்சரும் பீல்ட் மார்ஷ லுமான சரத் பொன்சேகாவின் கருத்திற்கு பதிலளிக்கும் வகையில்கருணா இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாவதற்கு பல வருடங்களுக்கு முன்னர் பொன்சேகா இராணுவத்தில் கடமையாற்றினார். அந்த காலத்திலேயே புலிகளை அழிப்பதற்கு பொன்சேகாவுக்கு சந்தர்ப்பம் காணப்பட்டது.

எனினும் அப்போதைய காலப் பகுதியில் தான் புலிகள் அமைப்பில் செயற்பட்டதாக கூறிய கருணா, அந்த காலப்பகுதியினுள் பொன்சேகாவினால் புலிகளை அழிக்கும் அளவிற்கு எந்தவொரு தாக்குதல்களும் மேற்கொள்ளப்படவில்லை என அவர் கூறியுள்ளார்.

எப்படியிருப்பினும் யுத்த வெற்றி இராணுவ தளபதிகள் மற்றும் இராணுவ வீரர்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற போதிலும், ஜனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷவுக்கு காணப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அழுத்தங்களுக்கு மத்தியில் அதனை கருத்திற் கொள்ளாமல் தலைமை சரியாக வழங்கியமையினால் அவரால் யுத்தத்தில் வெற்றிக் கொள்ள முடிந்ததாக குறிப்பிட்ட கருணா, யுத்த வெற்றியின் கௌரவம் மகிந்தவுக்கே உரியது எனவும் குறிப் பிட்டார். (செ-11)

## பகிடிவதையை...

என ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி இடம்பெற்ற மத்துகம, ஆனந்த தேசிய கல்லூரியின் 75ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 20ஆம் திகதி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய விஞ்ஞானபீட மாணவர்களினால் புதிய மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அசாதாரணமான பகிடிவதை, இலவச கல்வியின் ஒரு சாபக்கேடு எனத் தெரிவித்த ஜனாதிபதி, இந்நிகழ்வு தொடர்பாக தான கண்டி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் விசாரணை மேற்கொண்டதுடன் மிலேச்சத்தனமான இச்சம்பவம் குறித்து அரசாங்கம் வருத்தம் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

கல்விமான்கள் மற்றும் மேதைகளை உருவாக்கும் பல்கலைக்கழகத்தின் கௌரவத்தை பாதிக்கும் இவ்வாறான செயல்கள் இலவசக்கல்விக்கு செய்யப்படும் அவமதிப்பு என வலியுறுத்திய ஜனாதிபதி, எமது நாட்டின் 40-50 வருடகால பல்கலைக்கழக வரலாற்றில் பகிடிவதை தொடர்பாக கரும்புள்ளிகள் காணப்படுவதோடு பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்கப்படும் பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து அவர்களது பெற்றோரின் நிம்மதியை துயரக்கண்ணீராக மாற்றும்வகையில் மாணவர்கள் செயற்படக்கூடாது எனவும் தெரிவித்தார்.

இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில கொழும்பை அண்டிய பல பாடசாலைகள் பிரிதானிய இராணுவ முகாம்களாக மாறிய சந்தர்ப்பத்தில் கோட்டை ஆனந்த தேசிய கல்லூரியின் கிளையாக 1942 பெப்ரவரி 23 ஆம் திகதி மத்துகம ஸ்ரீ சுதர்சனாராம விகாரையில் மத்துகம ஆனந்த தேசியக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

அன்று தொடக்கம் உள்நாட்டு, வெளிநாட்டு கல்விமான்கள் பலரை உருவாக்கிய பெருமைமிகு வரலாற்றிற்கு உரிமை கோரும் மத்துகம ஆனந்த தேசிய பாடசாலையின் செயற்பாடுகளை ஜனாதிபதி பாராட்டினார்.

கல்லூரி வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட மத்துகம ஆனந்த தேசிய பாடசாலையின் முன்னாள் ஆசிரியரும், முன்னாள் நிதி மற்றும் நீதி பிரதி அமைச்சருமான தயா டி பெஸ்குவெல் அவர்களின் சிலையையும், நினைவுப்பலகையையும் ஜனாதிபதி திரை நீக்கம் செய்துவைத்தார்.

மேலும், கல்லூரியின் புதிய தொழில்நுட்ப ஆய்வுகூடமும் இதன்போது ஜனாதிபதியால் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது.

இப்பாடசாலை மாணவன் ஒருவரால் வரையப்பட்ட ஜனாதிபதியின் உருவப்படமும், நிகழ்வின் நினைவுப் பரிசும் ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டது.

அமைச்சர்களான மகிந்த சமரசிங்க, ராஜித சேனாரத்ன, பிரதியமைச்சர் பாலித்த தேவரப்பெரும, முன்னாள் அமைச்சர் குமார வெல்கம உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும், பாடசாலையின் அதிபர் ரந்துன் ஜயலத், ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் பங்குபற்றினர். (செ-11)

## கேப்பாப்பிலவு நில...

முல்லைத்தீவு கேப்பாபிலவு பிலவுக்குடியிருப்பு மக்களின் நில மீட்பு போராட்டத்தினை அரசாங்கம் புறக்கணித்து வருவதாக சிவில் சமூக அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் குற்றம் சுமத்தியுள்ளன.

அத்தோடு நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் நல்லாட்சி அரசாங்கம் உடனடியாக மக்களின் காணிகளை விடுவிக்க வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

விமானப்படையினர் வசமுள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பிலவுக்குடியிருப்பு மக்கள் மேற்கொண்டு வரும் போராட்டம் நேற்று 23 ஆவது நாளாகவும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இந்நிலையில் கேப்பாப்பிலவு மக்களுக்கு ஆதரவாக கொழும்பு புறக்கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக சிவில் அமைப்புக்கள் மற்றும் அரசியல் கட்சிகள் ஒன்றிணைந்து நேற்று எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த போராட்டத்தில் பங்கேற்ற தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்று ஆட்சிக்கு வந்த அரசாங்கம் மக்களை புறக்கணித்து வருவதாக குறிப்பிட்டார்.

நல்லாட்சி என சர்வதேசத்திற்கு பறைசாற்றும் அரசாங்கம் மக்களின் காணிகளை விடுவிப்பதில் ஏன் தாமதம் காட்டுகின்றது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும் அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படுத்தல் இயக்கம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கையகப்படுத்தப்பட்ட மக்களின் காணிகளை உடனடியாக விடுவிப்பதாக உறுதிமொழி வழங்கியே மைத்திரி - ரணில் அரசாங்கம் மக்களின் வாக்குகளை பெற்றுக் கொண்டதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலியும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## வவுனியாவில்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் கிளிநொச்சிப் பகுதியில் இனங்காணப்பட்ட பன்றிக் காய்ச்சல் தொற்று தற்போது வவுனியாவில் கடந்த இரு தினங்களுக்குள் குழந்தை பிரசவித்த 25 வயதுடைய பெண் ஒருவருக்கும், 37 வயதுடைய மற்றுமொரு பெண் ஒருவருக்கும் இத்தொற்று ஏற்பட்டுள்ளமை இனங்காணப்பட்டுள்ளது.

இந் நோய் தொற்று சிறுவர்களுக்கே அதிகம் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதால் சிறுவர்களை தேவையின்றி அழைத்துக் கொண்டு வைத்தியசாலைக்கு கொண்டு வருவதைக் தவிர்த்துக் கொள்ளுமாறும் காய்ச்சல், தடிமன், உடல் சோர்வு ஏற்பட்டால் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள் என வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (செ-250)

## சிகிரியாவில் இருப்பது...

வித்தார்.

உள்ளூர் மக்களை மட்டுமன்றி, வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகளையும் ஏமாற்றி, அங்கிருப்பது சிங்கத்தின் பாதமென்று நம்ப வைக்கப்பட்டுள்ளது. அதனை உரிய திணைக்களம் சரிசெய்ய வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

சிகிரியாவில் இருப்பது சிங்கத்தின் பாதங்கள் அல்ல என்ற தலைப்பின் கீழ், அவரினால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ராஜமாளிகைக்குச் செல்வதற்கான வாயில் உள்ள மிருகத்தின் கால்களில், நான்கு நகங்களை கொண்ட பாதங்களே உள்ளன. எனினும், சிங்கத்தின் பாதத்தில் முடிகளுடன் கூடிய நான்கு விரல்கள் இருக்கின்றன என்றும் அவர் தெளிவுபடுத்தியுள்ளார். அத்துடன், சிங்கத்தின் பாத அமைப்புக்கும் புலியின் பாத அமைப்புக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## மேன்முறையீட்டு...

இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

முன்னதாக ரவிராஜ் கொலை வழக்கு விஷேட ஜூரி சபை முன் விசாரிக்கப்பட்டு, சந்தேக நபர்களான ஐவரும் விடுதலை செய்வதாக அறிவிக்கப்பட்டது. எனினும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட இவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டை விஷேட ஜூரி சபை முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்வது சட்டத்துக்கு முரணானது என மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எனவே இந்த வழக்கின் தீர்ப்பை இரத்துச் செய்யுமாறும், அந்த வழக்கை மீள விசாரணை செய்யுமாறும் உத்தரவிடக் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதனை ஆராய்ந்த இருவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் குறித்த மனு எதிர்வரும் மார்ச் மாதம் 28ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உத்தரவிட்டனர். மேலும், அன்றையதினம் நீதிமன்றத்தில் தகவலளிக்கும் படி, சட்டமா அதிபர் மற்றும் விடுவிக்கப்பட்ட ஐவருக்கும் நோட்டீஸ் அனுப்புமாறும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரியப்படுத்தியுள்ளது. (செ-11)

## மட்டக்களப்பில்...

டில் கை மற்றும் வயிற்றுப் பகுதியில் காயமடைந்த பணிப்பாளர் விமல்ராஜ் களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவிற்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-9)

## கைது செய்யப்பட்ட...

டசகருக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த மாதம் ஊர்காவற்றுறை கரம்பொன் எனும் இடத்தில் வீட்டில் தனித்திருந்த ஏழுமாத கர்ப்பிணி பெண்ணொருவர் இனந்தெரியாதவர்களால் மிக கொடூரமாக கொலை செய்யப்பட்டிருந்தார். இச் சம்பவத்தையடுத்து இக் கொலையை செய்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இருவரை ஊர்காவற்றுறை பொலிஸார் கைது செய்திருந்தனர். அத்துடன் இக் கொலை சம்பவத்தை மேற கொண்டவர்களை நேரில் கண்ட ஒரு மாற்றுத்திறனாளி ஒருவர் இருப்பதாகவும் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டிருந்ததுடன் அவ் சாட்சிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்த நிலையில் பொலிஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் நேற்றைய தினம் குறித்த வழக்கானது அடையாள அணி வகுப்பிற்காக ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது அடையாள அணிவகுப்பின் போது ஒருவருக்கு ஏழு பேர் வீதம் இரண்டு சந்தேக நபர்களுக்கும் 14 பேர் அடையாள அணி வகுப்பில் நிறுத்தப்பட்டு குறித்த சந்தேகநபர்களும் அவர்களோடு இணைத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது அடையாளம் காட்டுவதற்காக குறித்த கண்கண்ட சாட்சியான வாய்பேச முடியாத சிறுவன் அழைத்து வரப்பட்டிருந்தார். இதன்போது நீதவான் அச் சிறுவனிடம் நீங்கள் இன்று (நேற்று) எதற்காக வந்துள்ளீர்கள் என வினாவியிருந்தார். இதற்கு சிறுவன் சைகை மூலமாக தாம் கொலை சம்பவம் தொடர்பாக சாட்சியமளிக்க வந்துள்ளதாக குறிப்பிட்டார். இதனை தொடர்ந்து நீதவான் நீங்கள் சம்பவ இடத்தில் கண்ட நபர்களை அடையாளம் காட்டுமாறு சிறுவனிடம் கோரியிருந்தார்.

இதற்கு சிறுவன் முதலில் ஒரு நபரை அடையாளம் காட்டியதை தொடர்ந்து மற்றைய நபரையும் அவ் வரிசையில் தேடி அதன் பின்னர் மற்றைய நபரையும் அடையாளம் காட்டியிருந்தார். இதன்பின்பு குறித்த இருவருக்கு எதிரான வழக்கு விசாரணையானது திறந்த நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. இதன்போது முதலாவது சந்தேகநபரின் இரத்த மாதிரியை மரபணு பரிசோதனைக்கு அனுப்புவதற்காக அவரை இன்றைய தினம் யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்டவைத்திய அதிகாரி முன்னிலையில் அனுமதிக்குமாறு சிறைச்சாலை அத்தியட்சகருக்கு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். அதனை தொடர்ந்து இவ் வழக்கு விசாரணையை எதிர்வரும் 27ஆம் திகதி வரை ஒத்திவைத்ததுடன் அதுவரை குறித்த இருவரையும் விளக்கமறியலில் வைக்கவும் நீதிவான் ஏ.எம்.எம்.றியால் உத்தரவிட்டுள்ளார். (செ-4)

## பதினொராவது...

தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வு பிரிவு பொலிஸார் ஆகியோரால் பன்னிரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிரான வழக்கானது ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறான நிலையில் குறித்த சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணையானது கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக இடம்பெற்று வரும் நிலையில் நேற்றைய தினமும் இவ்வழக்கானது ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றிருந்தது. இதன்போது மன்றில் முன்னிலையாகியிருந்த இவ் வழக்கின் விசாரணைகளை மேற்கொண்டு வரும் குற்றப் புலனாய்வு பிரிவின் உத்தியோகத்தர் மன்றில் விசாரணை தொடர்பான அனுமதிகோரி விண்ணப்பம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்படி குறித்த வழக்கின் 12ஆவது சந்தேகநபரிடம் மேலதிகமாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியும் அவரிடம் மேலதிக வாக்குமூலம் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதாலும் அவற்றை மேற்கொள்வதற்கான அனுமதியை மன்றானது வழங்க வேண்டும் என கோரியிருந்தனர். இவற்றை பரிசிலித்த மன்றானது அதற்கான அனுமதியை வழங்கியதுடன் நேற்றில் இருந்து எதிர்வரும் 28ஆம் திகதி வரை காலை 9 மணியில் இருந்து மாலை 04 மணிவரையும் அவ் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனவும் அனுமதியளித்திருந்தது.

இதனை தொடர்ந்து நீதிவான் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் இருந்து தமக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த அறிக்கையையின் பிரகாரம் இவ் வழக்கின் பதினொராவது சந்தேக நபரான உதயசூரியன் சுரேஸ்கரன் என்பவரை அழைத்து நீங்கள் அரச தரப்பு சாட்சியாக மாறமுடியுமா எனவும் அவ்வாறு அரச தரப்பு சாட்சியாக மாறினால் இலங்கை சனநாயக சோசலிஷ குடியரசின் சட்டமா அதிபரால் வழங்கப்படுகின்ற மன்னிப்பை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்டார்.

இதற்கு குறித்த பதினொராவது சந்தேக நபர் தாம் அரச தரப்பு சாட்சியாக மாறுவதாக சம்மதம் தெரிவித்து அதற்கான சத்திய கடிதத்தில் கையொப்பம் இட்டிருந்தார். இதன்போது இவரது கையொப்பம் அளிக்கப்பட்டமைக்கு சாட்சியாக நேற்றைய தினம் நீதிமன்ற பொலிஸ் அதிகாரியாக கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தரது கையொப்பமும் அதேபோன்று சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரது கையொப்பமும் அவ் சத்திய கடிதத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த வழக்கு விசாரணையை எதிர்வரும் மார்ச் மாதம் 03ஆம் திகதி வரை ஒத்திவைத்துடன் அதுவரை குறித்த பன்னிரண்டு பேரையும் விளக்கமறியலில் வைக்கவும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.எம்.எம்.றியால் உத்தரவிட்டுள்ளார். (செ-4)

## சுமந்திரனை சிலரே..

வெளியிட்டார்.

மக்களின் ஆணையைப் பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை மக்களால் நிராகரிக்கப்பட்ட சிலரே துரோகி என தெரிவிப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே எதிர்க்கட்சித்தலைவர் இரா.சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவிக்கையில், 2015ஆம் ஆண்டில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் 15 ஆயிரம் வாக்குகளை மாத்திரமே பெற்ற கட்சியின் உறுப்பினர்கள், அதைவிடவும் 4 மடங்கு அதிகமான வாக்குகளைப் பெற்ற சுமந்திரனை துரோகி என்கின்றனர்.

மக்களுக்காக சுமந்திரன் காத்திரமான சேவையை வழங்கி வருகிறார். அதனை நாம் பாராட்ட வேண்டும். மக்களால் நிராகரிக்கப்பட்டவர்கள் தமது குறைப்பாடுகளை மறைப்பதற்கே சுமந்திரனை துரோகி என்கின்றனர்.

இவ்வாறானவர்களுக்கு மத்தியிலேயே அரசியல் நடத்த வேண்டியுள்ளது என்பதை ஜனாதிபதியும், பிரதமரும் புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன், சுமந்திரனுக்கு விடுக்கப்பட்டுள்ள கொலை அச்சுறுத்தல் சம்பந்தமாக விசாரணை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் நீதிமன்றத்தின் முன்நிறுத்தப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் நாடாளுமன்றத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். (செ-11)

PERSONAL CLASS
இரசாயனவியல்
சி.அங்கதன் B.Sc (Chem.Spl)
37 வருட வினாத்தாள்கள்
கற்பிக்கப்படும்
தொடர்பு:-0776189610

Architectural CAD Centre[Jaffna-Vavuniya-Colombo]
[Personal-Group-Visiting Classes]
2D-Drawing 3D-Modeling
Auto CAD
Lecturer By Mr.K.N Muguathan(D/A)
Cert.in Auto CAD(2D-Drawing&3D-Modeling)
University of Peratheniya.
Cert.in Auto CAD(Advance 3D-Modeling)
University of Moratuwa.
Cert.in Auto CAD(2D Drawing&3D Modeling)
Open University of Sri Lanka.
Cert.in Auto CAD(2D-&3D)(1stClass)
University of Colombo.
Link:
077-5116320
071-8617972
[Civil & Mechanical]
(இ-7638)

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்

UK-550/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.